
# மாருதம்

ISSN 1800-4873

சமூக, கல்வி, கலை, இலக்கிய சஞ்சிகை சித்திரை - ஐப்பசி 2010 இதழ் - 11

75/=



எழுத்தாளர் நீ.பி. அருளானந்தம்

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்

# வவுனியா ப.நோ.கூ.சங்கம் (வ/து)

நுகர்ச்சிப் பொருட்கள் விற்பனை சேவை
கோப்சிற்றி மினி கோப்சிற்றி சேவை
ஒப்பந்த சேவைகள்
உலக உணவுதிட்ட பொருட்கள் விநியோகம்
கிராமிய வங்கிசேவைகள்
பாலர் முன்பள்ளி சேவை.
புதிய வேலை வாய்ப்புகளை வழங்குதல்.
வாகன சேவை.
கலாசார மண்டப சேவை.
அரிசிமா உற்பத்தி, நல்லொண்ணெய் உற்பத்தி.

**பொதிமண்டப வீதி,**
**வவுனியா.**
**தொ.பே.இல. 0242222384, 0242220131**





# மாருதம்

சித்திரை-ஐப்பசி 2010 இதழ் 11

ஒயுதல் செய்யோம் தலைசாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் பல் வண்மைகள் செய்வோம்

**ஆசிரியர் குழு:**
தமிழ்மணி அகளங்கன்
கந்தையா ஸ்ரீகணேசன்

**உதவி:**
த.பிரதாபன், து.நந்தீஸ்வரி

**அச்சு:**
மல்ரிவிஷன் அச்சுக்கலையகம்
77, 1ம் குறுக்குத்தெரு, வவுனியா.
தொ.பே: 024 : 2223669

வடிவமைப்பு: க.ரணேஷ்
இலச்சினை: ப.சிவஅன்பு
தலைப்பு: ஆ.இராசையா

**தொடர்புகட்கு:**
(1) 395/145 "பொதிகை",
அலைகரை வீதி,
இறம்பைக்குளம்,
வவுனியா.
தொ.பே : 024 2221310

(2) 90, திருநாவற் குளம்
வவுனியா.
024 2221676

**வெளியீடு:**


## நண்பர்களுக்குமட்டும்

## உள்ளே


| | |
|---|---|
| அண்மைக்கால ஆக்க சுரபி | 03 |
| நந்தீஸ்வரியின் கவிதைகள் | 07 |
| கவிஞர்களின் போக்கும் நோக்கும் | 08 |
| அன்பென்று கொட்டு முரசே (நாடகம்) | 10 |
| மீள்தல் (சிறுகதை) | 16 |
| இடுகஒன்றோ சுடுக ஒன்றோ (நாடகம்) | 21 |
| மாற்றுவலு ஆற்றல் (கவிதை) | 27 |
| நவயுகாவின் உயிர் உடையும்...... | 28 |
| கயல் வண்ணனின் கவிதைகள் | 30 |
| இசைநாடக அரங்கம் | 31 |
| நேர்காணல் | 38 |
| கவிதைகள் | 41 |
| கொம்பிப்பசு (சிறுகதை) | 45 |
| வட்ட நிகழ்வுப் பதிவுகள் | 47 |
| கலை இலக்கிய நெஞ்சங்கள் | 58 |
| வட்டத்தின் விருது பெறும்... | 62 |
| நந்தீஸ்வரியின் இலக்கியப் பதிவுகள் | 65 |
| பிரதாபனின் இலக்கியப் பதிவுகள் | 70 |
| அவதார் ஓர் இரசனைக் குறிப்பு | 78 |



**வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் - 2010**

Published by : Circle of Arts and Literary Friends - Vavuniya, SriLanke.
Editors :Ahalangan & Kandiah Shriganeshan email: kshriganeshan@yahoo.com

# கலை இலக்கிய நண்பர்களே!

ஆண்டுகள் ஓடுகின்றன ஆதரவுக்கரங்கள் இன்றி எம் வாழ்வு அலைப்புக்குள்ளாகின்றது. இன்னும் கருமுகில்கள் ஆதவனின் வரவை மூடிமறைக்கின்றன. எனினும் நம் வாழ்வை நாம் தொடரவேண்டும் பதின்மூன்றாண்டு நிறைவில் பல தொடர் கலை இலக்கிய களங்களை நாம் சந்திக்க முடிந்தது. கலை இலக்கியவாதிகள் சந்திப்பு, தமிழக எழுத்தாளர் அ.மார்க்ஸ், புலம் பெயர் எழுத்தாளர்கள் லெ.முருகபூபதி, (அவுஸ்திரேலிய) வி.ஜீவகுமாரன் (டென்மார்க்) "ஞானம்" ஆசிரியர் திரு.ஞானசேகரம் ஆகியோர் வட்டத்துக்கு வருகைதந்து சந்திப்புக்களங்களை ஏற்படுத்தினர். (திரு.லெ.முருகபூபதி வட்டத்தினூடாக எமது வவுனியா வளாக (இடம்பெயர்ந்த) மாணவர் எட்டுப்பேருக்கு நிதி உதவி அளித்தார்) சிங்கள கலைஞர் பராக்கிரம நெரியல்ல தமது நாடகக் குழுவுடன் அளிக்கை செய்தார். நாமும் ஏடு, (குறும்படம்) கவிதை, விமர்சன, ஆய்வு நூல்களை வெளியிட்டோம். தற்போது மாருதம் 11 உடன் உங்களைச் சந்திக்கின்றோம். மேலும் மக்கள் சார்ந்த கலை இலக்கிய முன்னெடுப்புகளுடன் அடுத்த இதழில் சந்திப்போம்.

ஆசிரியர் 22.12.2010





அட்டைப்பட அதிதி

# அண்மைக்கால ஆக்க இலக்கிய சுரபி

- மு.கௌரிகாந்தன்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

வவுனியா மாவட்ட எழுத்தாளர்களுக்கு சிறந்த களத்தை அமைத்துக் கொடுப்பதனைப் போலவே, இலைமறை காய்போலப் பணியாற்றிக் கொண்டிருக்கும் இப்பிரதேசத்தைச் சேர்ந்தோரை எமது இளந்தலைமுறையினர் அறியச்செய்வதற்கு மாருதம் வாய்ப்பளிப்பது பாராட்டப்படவேண்டியது. இவ்வகையில் இம்முறை வவுனியா சூசைப்பிள்ளையார்குளம் கிராமத்தைச் சேர்ந்த **நீ.பி.அருளானந்தம்** அவர்கள் நோக்கப்படுகின்றார்.

இவரின் தந்தையார் நீக்கிலாப்பிள்ளை பிலிப்பையா, தாயார் லூர்தம்மா. இவர் வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் பாடசாலை, வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் என்பவற்றிலே கல்வி பயின்றவர். தற்போது இல:44, புகையிரத நிலைய வீதி, தெஹிவளையில் வாழ்ந்து வருகிறார். இவர் பற்றிய எமது தேடல் 2007இல் ஆரம்பமானது. வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் வவுனியா நகரசபை மண்டபத்திலே 2007.10.27 அன்று நடாத்தப்பட்ட ஆய்வரங்கிலே யாம் வவுனியா மாவட்ட அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள் எனும் தலைப்பிலே ஒரு கட்டுரையினைச் சமர்ப்பிக்க வேண்டியிருந்ததால் அதற்கான தேடலின்போது இவரின் ஆக்கங்கள் எமது பார்வைக்கு எட்டின. கடைசி நேரத்தில் அவை கிடைத்ததினால் அப்போது இவரது ஆக்கங்கள் தொடர்பாக விரிவான முறையில் ஆராயமுடியவில்லை.

'ஒரு படைப்பு நூலாக வரும்போதுதான் எழுத்தாளனுக்குரிய அங்கீகாரம் கிடைக்கிறது' என்றபடி 'மாற்றங்களை மறுப்பதற்கில்லை' (வைகாசி 2002) என்ற சிறுகதைத் தொகுப்பை இவர் வெளியிட்டதன் மூலம் வெளியுலகுக்குத் தெரியவருகின்றார். முதன்முதலாக இந்த நூல் தொடர்பான விமர்சனமும் 2003 ஜனவரியில் ஞானம் சஞ்சிகையில் வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கது. எனவே இவ்விரண்டும் இவருக்குச் சிறந்த ஊக்குவிப்புகளாக - தூண்டல்களாக அமைந்திருக்க வேண்டும். அக்காலத்திலிருந்து கடந்த எட்டு ஆண்டுகளாக ஆக்க இலக்கியத்துறைக்கெனத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துப் பணியாற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நீ.பி. அருளானந்தத்தின் கலை இலக்கியப் படைப்பாற்றலுக்குப் பலமானதொரு மரபு இருந்திருப்பது தெரிகிறது. இவரின் தந்தையார் ஒரு நாட்டுக்கூத்து அண்ணாவியார். அவரிடம் கவிதை புனையும் ஆற்றலும் இருந்ததாக அறிகிறோம். பிலிப்பையாவின் தாயாரின் தந்தையாரும் ஒரு புலவர். லூக்காஸ் புலவர் என்று அவரை அழைப்பர். இதனை விட திருமதி அருளானந்தம் அவர்களுக்கு சுவாமி ஞானப்பிரகாசர் (1875-1947) பெரிய தந்தையார். அச்சுவேலியைச் சேர்ந்த தம்பிமுத்துப்பிள்ளைப் புலவர் (1857-1937) பாட்டனார்.

பதினேழாவது வயது முதல் முப்பத்துமூன்றாவது வயது வரை இவரது பணியானது பெரிதும் நாடகக்கலை சார்ந்ததாகவே காணப்பட்டது. 'பொண்ணுக்கேற்ற மாப்பிளை', 'கண்திறந்தது', 'இதயக்குமுறல்', 'அப்புவாணை சொல்லாதை', 'எங்கட

னேச்சர்' என்பன குறிப்பிடத்தக்க இவருடைய மேடைநாடகங்கள்.

அடுத்து நவீன இலக்கிய வடிவங்களான சிறுகதை, நாவல், கவிதை என்பவற்றிலே இவர் முதலில் கவனஞ் செலுத்தியது சிறுகதையில் தான். இருபதாவது வயதிலே இவரது முதல் சிறுகதையான 'அனுபவம் புதிது' என்பது வீரகேசரியிலே வெளிவந்தது. கடந்த எட்டு ஆண்டுகளில் 'கபளீகரம்' (2003) 'ஆமைக்குணம்' (2004), 'கறுப்பு ஞாயிறு' (2005), 'அகதி' (2007), ஆகிய சிறுகதைத் தொகுதிகளையும் 'வாழ்க்கையின் நிறங்கள் (2006) எனும் நீண்ட (319 பக்) நாவலையும் 'வேருடன் பிடுங்கிய நாளிலிருந்து' (2008) எனும் கவிதை நூலினையும் எமக்குத் தந்திருக்கிறார்.

'மாற்றங்களை மறுப்பதற்கில்லை' (2002) எனும் சிறுகதைத் தொகுப்பு அளவை உமா பாஸ்கரன் அவர்களுடைய 'மாற்றங்கள்' (2004) சிறுகதைத் தொகுப்புடன் ஒப்பு நோக்கிப் படித்தற்குரியது. அவ்வாறே இவருடைய 'வாழ்க்கையின் நிறங்கள்' (2006) நாவல் ஈழவாணியின் 'நிறங்கள்' (2004) சிறுகதைத் தொகுப்புடன் பொருத்திப் பார்த்துப்படித்தின்புறுதற்குரியது. புனைக்கதைகளுக்குரிய இயல்புகளும் களமும் வேறுபாட்டைக்காட்டும்.

இலக்கியமானது, உளத்துக்கு இன்பத்தை ஊட்டுவதுடன் மட்டுமின்றி காலத்தின் பிரதிபலிப்பாகவும் வரலாற்று ஆவணமாகவும் திகழுகின்றது என்பதற்கு இவருடைய ஆக்கங்கள் தக்க சான்றுகள் எனலாம். இடப்பெயர்வுக்கும் புலம்பெயர்வுக்கும் இலங்கைத் தமிழ் மக்கள் உட்பட்டுப் பல்வேறு துன்ப துயரங்களையும் அதிகம் அனுபவித்தவர்கள். நீ.பி. அருளானந்தம் அவர்கள் இரண்டு தடவைகள் இடப்பெயர்வுகளுக்குட்பட்டவர். இம் மக்களிலிருந்து வேறுபட்டு நிற்காது அவர்களது பாடுகளையெல்லாம் கதைப்பொருளாக்கி உயிரோட்டமுள்ள பேச்சு வழக்குச் சொற்களை நன்றாகக் கையாண்டு கலைநேர்த்தியுடன் தமது ஆக்கங்களைத் தந்திருக்கிறார்.

40 வருடங்களாகத் தமது வாழ்வைக் கழித்த வவுனியா நகரத்தினது மக்களின் வாழ்க்கை முறைகளை அவர்களின் கலாசாரப்பின்னணியில் வைத்துப் பின்னப்பட்ட நாவலாக **'வாழ்க்கையின் நிறங்கள்' (2006)** திகழ்கின்றது. இதற்கு அரச இலக்கியவிருதும் வடக்கு கிழக்கு மாகாண இலக்கியப் பரிசும் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. வவுனியா மாவட்டத்திலே தோன்றிய செங்கை ஆழியானின் 'காட்டாறு' (1977) 'யானை' (1978) இந்திரா பிரியதர்ஷினியின் 'நிலவே நீ மயங்காதே' (1990) என்ற நாவல்களின் வரிசையில் தோன்றிய மண்வாசனை வீசும் சிறந்த நாவலாக 'வாழ்க்கையின் நிறங்கள்' நாவல் விளங்குகின்றது.

இனிவருங்காலங்களில் சிறந்த கவிதை நூல்களை படைக்கக்கூடும் என்ற நம்பிக்கையைத் தருவதாக இவரது **'வேருடன் பிடுங்கிய நாளிலிருந்து'** எனும் கவிதை காணப்படுகிறது.

நீ.பி.அருளானந்தத்தின் இன்னொரு பாராட்டப்பட வேண்டிய பணி தமிழுக்காக அரும்பணி ஆற்றிய ஈழத்துத் தமிழறிஞர்களை, அவர் தம்பணிகளை தமது நூல்களிலே நினைவுபடுத்திச் செல்வது. எடுத்துக்காட்டாக தமது கவிதை நூலை அச்சுவேலி பாவலர் ஜேம்ஸ் துரைராசா தம்பிமுத்து அவர்களுக்கும் **'ஒரு பெண்ணென்று எழுது' (2008)** சிறுகதைத் தொகுதி நூலினை அச்சுவேலிப் புலவர், நூலாசிரியர், பதிப்பாசிரியர், பத்திரிகையாசிரியர் எஸ்.தம்பிமுத்து அவர்களுக்கும் சமர்ப்பணம் செய்ததுடன் எஸ்.தம்பிமுத்து அவர்களின் பணிகள் தொடர்பான நீண்டதொரு பட்டியல் சிறுகதை





நூலின் இறுதியில் தந்திருப்பதிலிலிருந்து அறிந்து கொள்ளலாம்.


மேலும் இந்திய எழுத்தாளர்களுடனான இவரது தொடர்பையும் குறிப்பிட்டாக வேண்டும். மறைந்த எழுத்தாளர் வல்லிக்கண்ணன் அவர்கள் இவருடைய நூல்கள் பலவற்றிக்கு அணிந்துரை வழங்கியுள்ளார். கடந்த ஆண்டு நடைபெற்ற வல்லிக்கண்ணன் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டியில் இவரது **'இரத்தம் கிளர்த்தும் முள்முடி'** சிறுகதை முதற்பரிசினைப் பெற்றதன் மூலம் இவர் இந்திய எழுத்தாளர்கள் பலராலும் அறியப்பட்டவர் ஆகிறார். இதற்கான பரிசினை எழுத்தாளர் ஜெயகாந்தனிடமிருந்து பெற்றுக்கொண்டமை பாராட்டுக்குரியது.

வவுனியா மாவட்ட எழுத்தாளர்களை முதன் முதலாக இனங்காட்டிய நூலாக விளங்குவது **ஓ.கே.குணநாதன்** எழுதிய **'வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்'** என்பதாகும். அந்த நூல் வெளிவந்த காலத்திலே (1998) நீ.பி.அருளானந்தம் ஆக்க இலக்கியத்துறையிலே பிரபல்யம் பெறாத காரணத்தினால் அதிலே இவர் இடம்பெறவில்லை. கடந்த ஏழு ஆண்டுக்காலத்திலே இவர் வியக்கத்தக்க வளர்ச்சி பெற்றமை தெரிகிறது. ஆறு சிறுகதைத் தொகுதி நீண்டநாவல் ஒன்று, கவிதைத் தொகுதி (வேருடன் பிடுங்கிய நாளிலிருந்து (2008) ஒன்று என அவரது எழுத்துப்பணிகளும் வெளியீடுகளும். தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இவ்வாண்டு கடந்து போதல் (கவிதைத்தொகுதி), வெளிச்சம், (சிறுகதைத் தொகுதி) துயரம் சுமப்பவர்கள் (நாவல்) மற்றும் யார் இந்தப் புலவர் ச.தம்பிமுத்துப்பிள்ளை (செவ்விதாக்குநர் - 2010) என்பன வெளியிடப் பட்டுள்ளன.


நீ.பி.அருளானந்தம் அவர்களின் 'நாணயம்' சிறுகதை (கபளீகரம் சிறுகதைத் தொகுதி/ இலங்கை கல்வி வெளியீட்டுத்திணைக்களம் இலக்கியமும் பாடநூலில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


துயரம் சுமந்தவர்கள்' (2009) எனும் இவருடைய நாவல் புனைக்கதைத்துறையிலே இவருக்கு நிலையான இடத்தைத் தேடிக் கொடுக்கும் என நம்பலாம். வவுனியா சகாயமாதாபுரம் தான் இதன்களம் இந்தப் பிரதேசத்திலே 40 ஆண்டுகளுக்கு முன்பு வாழந்த தோட்டிகள், கூட்டுப்பாட்டிகள் பட்டபாடுகள், அவர்களிடம் வழக்கிலிருந்த 'உறுமிமேளம்' பற்றிய செய்திகள் முதலானவை இதிலே வெளிக்கொண்டுவரப்படுகின்றன. இவ்வாறான வாழ்வு வாழ்ந்தவர்களுக்கும் இந்தியாவில் தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போதும் வாழும் சிலகுடியினருக்கும் இடையில் சில வேறுபாடுகளைத் தவிர பல ஒற்றுமைகள் காணப்படுவதாக அருளானந்தம் குறிப்பிடுகிறார்.


இராமநாதபுரத்திலே குறிப்பிட்ட மக்களின் தொழில் கலைகள் என்பன இன்றும் நடைமுறையிலுண்டு. அவரகள் மிடுக்குடன் இவற்றைப் புரிகின்றனர். நாட்டாரியலிலே இவை தொடர்பாக விரிவாக ஆராயப்படுகின்றன. சகாயமாதாபுரத்தைச் சேர்ந்த மேற்படி தொழிலாளிகள் இனிப்பிறக்கமாட்டார்கள். அவர்களின் கலைகள் அழிந்து போய்விட்டன. எனவே இவ்வாறான பதிவுகளைக் காட்டும் ஊடகமாக 'துயரம் சுமப்பவர்கள்' திகழ்கின்றது. இதற்கு 2009 ஆண்டுக்கான மத்திய அரசின் சாகித்திய மண்டல விருது 2010ல் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.














**நீ.பி.அருளானந்தம்**

**எழுதிய**

**நூல்கள்**







# நந்தீஸ்வரியின் கவிதைகள்

## யாராலே

ஆசை ஆசையாய்
எங்கள் ஊருக்குப் - போனோம்.
வேலியும் இல்லை, வீடும் இல்லை.
வீட்டை அடையாளப்படுத்திய
எல்லைக்கல்லும் இல்லை.

நாம் ஓடி ஒளிந்து
விளையாடிய மாந்தோப்பு
புளியந்தோப்பு - இன்று
நமதில்லை.

நாம் பிறந்து தவண்டு
விழுந்தெழுந்த முற்றம் நமதில்லை.
சூழ்ந்திருந்த புளியமர நண்பர் குழாம்
அயல் யாருமில்லை - அங்கே

கால்பட்ட தடம்
கண்ணீர்த்துளிகளால் நனைய
நியாயமான கேள்விகளோடு
நடக்கின்றேன்.

வேலி போனது - போராலே
வீடு " "
எல்லைக் கல் " - யாராலே

## ஆண்டவா நீ எங்கே?

சரித்திரம் தொலைந்தது - சில
சாக்கடைகளாலே!
தரித்திரம் நடமாடுது
தமிழச்சி குடிசையிலே....

தாகம் தீர்க்க தண்ணீரில்லை
சோகம் தீர்க்க சொந்தம் - கூட
இல்லை! - நாம்
யோகம் உள்ள பிறப்பாய் - இருந்தால்
பாவ மண்ணில் பிறப்போமா?

கூடி இருந்த அக்குடிசை
எங்கே?
என் - குழந்தை எங்கே?
ஐயோ!
அயலார் எங்கே?
ஆண்டவா - நீ எங்கே?

## நிர்ப்பந்தம்

பிள்ளை
பிள்ளையின் பிள்ளை - என
குதூகலித்த கூட்டுக்குடும்பங்கள்
ஒவ்வொருவராய்
பிரிந்து.......
ஆளுக்கொரு இடம் - சேரும்
நிர்ப்பந்தம்

தள்ளாத வயதில்
தாய்க்குருவி - குஞ்சைக்
கலைத்து விட்டு - தனித்து
குந்தியிருக்கு!
குருவிகள் வரும் வரைக்கும் - கூடு
தங்கிடுமா?

## மௌனச்சிறை

வைரம் இல்லாத - வார்த்தைகளை
நான் மௌனச் சிறையில்
அடைக்கின்றேன் - அவை
உன்னைக் காயப்படுத்தும்
என்பதால்!
இருந்தும் -
சிலருக்கு வருத்தம் - என்
மௌனச் சுவரை உடைக்க
கல்லெறிகின்றனர்
சீனச் சுவரென நினைத்து!
காயம் எனக்கல்ல!
கவலைப்படுகின்றேன்
அவர்களுக்காய்!

*இலக்கியக் கட்டுரை*

# கவிஞர்களின் போக்கும் நோக்கும்

**- தமிழ்மணி அகளங்கன் -**

ஒருவன் எந்தத்துறையிலே அதிக ஈடுபாடு கொண்டவனாக இருக்கிறானோ, அந்தத் துறையினூடாகவே, தான் காணும் காட்சியையும் தொடர்பு படுத்திச்சிந்திப்பான் என்பது பொது விதி. ஒரு காட்சியைக் காண்பவன் சிறந்த கவிஞனாக இருந்துவிட்டால் அக்காட்சி சிறந்த கவிதையாக வெளிவந்து பெருங் கணிப்பையும் பெற்றுவிடும். அந்தக் கவிஞன் எந்தத் துறையில் அதிக ஈடுபாடும், அறிவும் கொண்டவனாக இருக்கிறானோ, அந்தத் துறையினூடாகவே அவனது சிந்தனைகளை, உணர்வுகளை அவன் வெளிப்படுத்தி விடுகின்றான்.

**சோதிடக் கவிஞன்**

ஒரு கவிஞன் சோதிடத் துறையில் அதிக அறிவும் ஈடுபாடுங் கொண்டவனாக இருந்தான். அதனால் தான் காதலிக்கும் பெண்ணிடம் தன் காதல் வேதனையைக் கவிதையிலே கூறினான். அக்கவிதை சோதிடத்தோடு தொடர்பு கொண்டவர்களுக்கே இலகுவில் விளங்கக் கூடியதாக இருக்கிறது. அவனது காதலிக்கும் சோதிடம் தெரியுமோ என்னவோ, அவனது சுவாரஸ்யமான அப்பாடலைப் பார்ப்போம்.

**ஒருநான்கும் ஈரரையும் ஒன்றே கேளாய்!**
**உண்மையாய் ஐயரையும் அரையும் கேட்டேன்.**
**இருநான்கு மூன்றுடனே ஒன்றுஞ் சொல்லாய்.**
**இம்மொழியைக் கேட்டபடி ஈந்தாயாயின்**
**பெருநான்கும் அறுநான்கும் பெறுவாய் பெண்ணே**
**பின்னையோர் மொழிபுகல வேண்டாம் இன்றே**
**சரிநான்கும் பத்துமொரு பதினைந் தாலே**
**சகிக்கமுடி யாதினியென் சகியே மானே.**

பாடலைப் பார்த்தால் ஒன்றுமே புரியவில்லை அல்லவா, சோதிட அறிவோடு பாடலுக்குப் பொருள் பார்ப்போம். இராசி நிலையிலே மேடம் முதலாவது. அதிலிருந்து ஆரம்பித்தால் ஆறாம் வீடு **கன்னி**, கன்னியே கேளாய்! எனத் தன் காதலியை விளிப்பது முதல்வரி. நான்கும், (ஈரரை) ஒன்றும், ஒன்றும் ஆறுதானே. அதுதான் ஆறே கேள். கன்னியே கேள். என்றாயிற்று.

ஐயரை இரண்டரை. இன்னும் அரை சேர்ந்தால் மூன்று. எனவே ஐயரையும் அரையும் மூன்று. கிழமைகளிலே ஞாயிறு, திங்கள், **செவ்வாய்.** வரிசையிலே செவ்வாய் மூன்றாவது. எனவே செவ்வாயைக் கேட்டாராம். இதுதான் ஐயரையும் அரையும் கேட்டேன் என்பது. இதழமுது பருகக் கேட்டார். என்பது பொருள். அவளோ அவரது கேள்விக்கு ஒரு பதிலும் சொல்லவில்லையாம். அதை அடுத்த அடியிலே கூறுகிறார். இரு நான்கு எட்டு. இதனோடு மூன்று பதினொன்று. இன்னும் ஒன்று பன்னிரண்டு. நட்சத்திரங்களிலே அச்சுவினி தொடங்கி பன்னிரெண்டாவது நட்சத்திரம் உத்தரம். **உத்தரம்** என்றால் பதில் என்று பொருள். எனவே "இரு நான்கு மூன்றுடனே ஒன்றுஞ் சொல்லாய்" என்றால் ஒரு **பதிலும்** சொல்கிறாயில்லையே என்று பொருள்.

என் விருப்பப்படி பதில் சொல்வாயாயின் "பெருநான்கும் அறுநான்கும் பெறுவாய் பெண்ணே!" என்கிறார் கவிஞர். அறுபது வருடங்களைக் கொண்ட சுற்றுவட்டத்திலே பிரபவ முதலாக இருபத்தெட்டாவது வருடத்தின் பெயர் **ஜய** வருடம். ஜயம் என்றால் வெற்றி என்று பொருள். எனவே நான்கும், அறுநான்கு (இருபத்தினாலு) இருபத்தெட்டு, இருபத்தெட்டுப்பெறுவாய் என்றால் **வெற்றி** பெறுவாய். என்று பொருள்.





வேறு வார்த்தையேதும் சொல்லவேண்டாம். என்று சொல்லிவிட்டு, "நான்கும் பத்தும் ஒரு பதினைந்தாலே" என்கிறார். நான்கு, பத்து, பதினைந்து கூட்டினால் இருபத்தொன்பது. மேற்கூறியபடி வருடப் பெயர்களில் இருபத்தொன்பதாவது வருடத்தின் பெயர் **மன்மத**, மன்மதனாலே தான் படும் காமவேதனை சகிக்க முடியாதிருக்கிறதாம், என்று பாடுகிறார் அந்தச் சோதிடக் கவிஞர். இராசிப் பெயரையும், கிழமைப் பெயரையும், நட்சத்திரப் பெயரையும், வருடப்பெயரையும் வைத்துத் தன் காதலிக்கு, மற்றவர்கள் விளங்கிக் கொள்ளாதபடி எழுதிய பாடலே இது.

**வைத்தியக் கவிஞர்**

இன்னொருவர், கவிதையிலே அதிக ஈடுபாடு கொண்ட ஆயுர்வேத வைத்தியர். ஔவையாரின் பாடல்களில் மனம் பறிகொடுத்தார். தனது வைத்திய அறிவுக் கேற்ப ஔவையாரின் மூதுரையில் வரும் வாக்குண்டாம் என்ற பாடலுக்கு விளங்கங் கூறினார்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

பூக்களைப் பறித்துக் கொண்டு, பவளம் போன்ற அழகிய திருமேனியைக் கொண்ட தும்பிக்கை விநாயகரின் பாதங்களைத் தவறாமல்ச் சென்று வழிபடுபவர்களுக்கு, நல்ல வாக்கு வல்லபம் உண்டாகும். நல்ல மனம் உண்டாகும். மகாலக்குமியின் பார்வைகிட்டும், அதாவது செல்வம் நிறையும் உடல் நலிவு ஏற்படாது என்பது இதன் பொருள். இதனை அந்த ஆயுள் வேத வைத்தியர் பின்வருமாறு அர்த்தங்கொண்டு கூறுகிறார். திருமேனி என்பது **குப்பைமேனிக்** கீரையாம். கையான் என்பது **கையாந் தகரையாம்.** பாதம் என்பது **செருப்படி நாயன்** என்னும் மூலிகையாம். (அடி-பாதம்) இவைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்தை உண்பவர்களுக்கு வாக்கு, நல்லமனம், செல்வம், கிட்டும் உடல் நலம் குறையாது. என்று விளக்குகிறார்.

**பக்திக்கவிஞன்**


இன்னொருவர். இவர் நல்ல கவிஞர். பக்தி நெறி நிற்பவர். அறக் கருத்துக்களோடு, சிவபெருமானுக்குத்தொண்டு செய்யும்படி தனது கவித்துவம் நிறைந்த கவிதை வரிகளினால் மக்களுக்குச் சொல்கிறார்.

பண்புளருக்கு ஓர்பறவை: பாவத்திற்கு ஓர்இலக்கம்.
நண்பிலரைக் கண்டக்கால் நாற்காலி - திண்புவியை
ஆள்வார் மதுரை அழகியசொக் கர்க்கரவம்
நீள்வா கனநன் னிலம்.

ஓர் பறவை **ஈ.** பண்புள்ளவர்களுக்கு **கொடு.** (ஈ-கொடு). பாவத்திற்கு **அஞ்சு.** ஓரிலக்கம் **ஐந்து.** இதன் இலக்கணப் போலி அஞ்சு, நட்புக்குணம் இல்லாதவரைக் கண்டால் **விலகிச் செல்.** விலகு விலங்குவாயிற்று. நாற்காலி - விலங்கு

இந்தப் பூமியை ஆளும் மதுரை அழகிய சொக்கநாதருக்குப் **பணிவிடை செய்** என்று முடிக்கிறார் கவிஞர். அரவம் என்றால் **பாம்பு.** பாம்பிற்குப் **பணி** என்றும் ஒரு ஒத்தசொல் உண்டு. நீள்வாகனம். சிவபெருமானின் வாகனம். **எருது விடை. நன்னிலம்** என்பதற்கு **செய்** என்பது ஒத்த சொல். எனவே **பணிவிடைசெய்** என்கிறார் கவிஞர்.

எந்தநிறக் கண்ணாடிக் கூடாக ஒருவன் பார்க்கிறானோ அந்த நிறம் காட்சியிலே தெரிவது போல, கவிஞர்களும் எந்தப் போக்கிலே நோக்குகிறார்களோ அதுவே வெளிப்பட்டுவிடுகிறது.



சமூக நாடகம்

# அன்பென்று கொட்டு முரசே!

- கந்தையா ஸ்ரீகணேசன் -

*(மேடையில் அரச கொலுவுடன் ஆணவ மன்னன் பவனி வருகிறான்).*

**காட்சி 01**

**பாடல் :** ஆடி ஆடி வருகிறார் ராஜா
ஆணவம் எனும் பெயர் கொண்ட ராஜா
யார் சொல்லும் கேட்க மாட்டாராம்
சொன்னாலும் புரிய மாட்டாராம்.

கூடி நாம் வருகின்றோம் ராஜா
பாடி நாம் வருகின்றோம் ராஜா
நாடி ஓடி வருவோரை தள்ளுவார்
கூடிப் பாடும் எங்களுக்கும் உதவமாட்டார்.

(ஆணவ மன்னன் பரிவாரங்களுடன் ஊர்வலம் வருகிறார்)

**சேவகன் :** ராஜாதி ராஜ ராஜ குலதிலக ராஜ மார்த்தாண்ட ஆணவ மன்னர் வருகிறார்! வருகிறார்! வருகிறார்!

**ஆணவம் :** நான் தான் ஆணவ மன்னன்
என்னிடம் அகங்காரம், மமகாரம், ஆணவம், பொறாமை சுயநலம் போன்ற நல்ல குணங்கள் இருக்கின்றன.

**மக்கள் :** ஆமாம் நல்ல குணங்கள்.

**ஆணவம் :** ஒருவர் சுய நலம் இல்லாமல் இருக்க முடியாது.

**மக்கள் :** ஆமாம், ஆமாம். சுயநலம் இல்லாமல் இருக்க முடியாது.

**ஆணவம் :** ஒருவர் ஆசையில்லாமல் இருக்க முடியாது.

**மக்கள் :** ஆசை, ஆசை, ஆசை.

**ஆணவம் :** எப்படி நான் பாகுபாடு காட்டாமல் இருக்க முடியும்.

**மக்கள் :** ஆமாம், தங்கள் தங்கள் ஆக்களுக்கு உதவத்தானே வேண்டும்.

**ஆணவம் :** ஆரோ திருவள்ளுவராம், ஆசை, அவா, வெகுளி இன்னாச் சொல் நான்கும் என்று ஏதோ சொன்னார். இன்னாச் சொல் பேசாமல் இருக்க முடியுமா? கோவம் வந்தால் எனக்கு என்ன பேசுவது என்றே தெரியாது. வாடா இங்கே, மடையா வாடா இங்கே.





**சேவகன் :** ஓம் ஐயா, மன்னிக்க வேண்டும்.

**ஆணவம் :** இப்படிக் கூப்பிட்டு வராமல் இருந்தால் சிரச்சேதம்.

**ஒருவர் :** ஓம், தலை இருக்காது.

**ஆணவம் :** அது, அது. இங்கு நான் வைச்சது தான் சட்டம்.

**மற்றவர் :** ஓமையா, ஓமையா.

**ஆணவம் :** என்னை யாரும் கேள்வி கேட்கக் கூடாது.

**மக்கள் :** கேட்க மாட்டோம்
கேட்க மாட்டோம்

**உதவியாள் :** எங்கட ராஜா ஆணவம்.

**பாடல் :** எங்கட ராஜா ஆணவம்
மமதை பிடித்த மன்னன்
தங்கமான ராஜா
தரணியை ஆளும் ராஜா
ஆசை அவா வெகுளி
மோசமான சொற்கள்
சொல்லிச் சொல்லி ஆளுவார்.
தொல்லை தந்து போடுவார்
எங்கட ராஜா மன்னன்.

**உதவியாள் :** அன்பில்லை ஆதரவு இல்லை.
அன்பில்லை ஆதரவு இல்லை
எங்கும் அவரின் ஆணவம்
கொடி கட்டிப் பறக்கிறது
கொட்ட மடக்க யாருள்ளார்.
கொட்டமடக்க யாருமில்லை
கொஞ்சம் கூட நல்லகுணம்
நெஞ்சமறிந்து நல்கமாட்டார்.
தஞ்சமின்றி வருவோரை
கஞ்சத் தனமாய் விரட்டிடுவார்.

(அரசன் கொலு அத்தாணி மண்டபத்தை விட்டு ஆடி ஆடி வெளியேறும்)

**காட்சி - 02**

*மேடையில் அன்பரசி கொலு வருகிறார்.*

**பாடல் :** ராணி வாராங்க எங்க ராணி வாராங்க
ராணி வாராங்க எங்க ராணி வாராங்க

அன்பரசி எனும் பெயரில் ராணி வாராங்க
எம்மை யெல்லாம் அன்பினாலே
கட்டிப் போடும் ராணி
உம்மையெல்லாம் அன்பினாலே
கட்டிப் போடும் ராணி.

**மந்திரி :** ராணி மகாராணி
அன்பரசி எனும் ராணி
இதோ மண்டபம் வருகிறார். வருகிறார் வருகிறார்.
(அமைதி, அமைதி)

**அன்பரசி :** அடியேன் அன்பரசி
இவ்வுலகில் வாழும் மக்களை எல்லாம் அன்பினால் கட்டிப் போட்டு
அமைதியாக ஆட்சி நடாத்தும் ராணி.
அன்பு தான் இன்ப ஊற்று
அன்பு தான் உலக மகாசக்தி
அன்பு தான் இவ்வுலகை கட்டிப்போடும் அரும் பெரும் சக்தி.

**பாடல் :** அன்பென்று கொட்டு முரசே
கனிவெனிறு கொட்டு முரசே.
இன்பம் வந்து சேரும். இனிமை வந்து கூடும்.
இன்பம் வந்து சேரும். இனிமை வந்து கூடும். (அன்பென்று)
என்றும் நாம் அன்புடனே
பண்புடனே வாழ்ந்திடுவோம்.
நன்மை வந்து சேரும்
திண்மை வந்து கூடும்.
அன்பென்று கொட்டு முரசே. (அன்பென்று)

*(ஆணவ மன்னன் மேடையில் தோன்றல்)*

**அன்பரசி :** இரணியன் வரலாறு உனக்குத் தெரியாதா?

**ஆணவம் :** இரணியனா! அவன் தானே தன் பெயரையும், புகழையும் நிலை நாட்டியவன். மகாவிஷ்ணுவுக்கு போர்க்கொடி தூக்கியவன்.

**அன்பரசி :** மூவுலகையும் கட்டியாண்ட சூரபத்மனிற்கு நடந்த கதை உனக்குத் தெரியாதா.

**ஆவணம் :** சூரபத்மனா? அவன் தம்பியர்கள் சிங்கமுகாசுரன், தாரகன் புடை சூழ தேவ உலகையே அதிரவைத்தவன்.

**அன்பரசி :** சாமகானத்தால் சர்வேஸ்வரனையே மயங்கவைத்து வீணைக் கொடி கட்டிப் பறந்த இராவணேஸ்வரன் என்ன ஆனான்?

**ஆணவம் :** இராவணேஸ்வரனா? சாமகானப் பிரியன், சிறந்த சிவ பக்தன். அந்தக் கைலை மலையையே தன் திடங்கொண்ட தோள்களால் தூக்கியவன்.





அவனது நாடு லங்காபுரி செல்வச் செழிப்பில் திகழ்ந்ததல்லவா? அவன் தம்பி கும்பகர்ணன் எப்பேர்ப்பட்ட வீரன். அவன் மட்டுமின்றி அவன் மகன் இந்திரஜித் தன் மாயாஜாலத்தால் இராமலட்சுமணரையே கட்டிப்போட்டவன்.

**அன்பரசி :** முப்புரங்களை ஆண்டு வந்த தாரகாக்கன், கமலகாக்கன், வித்தியுன்மாலி போன்ற திரிபுர அரசர்கள் எப்படி எரிந்து போனார்கள் தெரியுமா?

**ஆணவம் :** முப்புரங்களை ஆண்ட மன்னர்களைப் பற்றியுமா கூறுகின்றாய்? ஆ... இரும்பு, வெள்ளி, தங்கம் என்று மூன்று பெரும் கோட்டைகள் அமைத்து மூவுலகைவுமே அதிரவைத்தவர்கள் அல்லவா?.

**அன்பரசி :** மகாவிஷ்ணுவை எதிர்த்து நின்ற நரகாசுரனுக்கு என்ன நடந்தது?

**ஆணவம் :** நரகாசுரன் சிறந்த போர் வீரன். அவன் உலகை ஆண்ட போது தன் பராக்கிரமத்தில் எத்தனை விளையாட்டுக்கள் செய்தான் என நீ அறிவாயா?

**அன்பரசி :** அன்பினாலே கிருஷ்ண பரமாத்மாவையே கட்டிப் போட்டவர் பாண்டவரான சகாதேவன். அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ் என்று சொன்னார் எங்கள் திருவள்ளுவர். அனுமனின் அன்பு இராமனை கட்டி அணைக்க வைத்தது. பிரகலாதனின் அன்பு விஷ்ணுவை நரசிம்மமாக மாற்றியது. கண்ணப்பனின் அன்பு சிவபெருமானையே ஆட்டி வைத்தது. மணிவாசகர் அன்பு இறைவனை குருந்த மரநிழலுக்கு கொண்டு வந்தது. சுந்தரர் அன்பு தடுத்தாட்கொள்ள வைத்தது. ராதையின் அன்பு கண்ணனை உலக சேவகனாக மாற்றியது. எனவே ஆணவ மன்னனே இனி உன் கொட்டங்களை அடக்கி அட்டகாசத்தை நிறுத்தி மக்களை அன்போடு வாழ வை. அப்போது தான் இந்தப் பூவுலகம் பூக்கள் மலர்ந்த சோலையாக குயில்கள் கூவும் ஆனந்த வனமாக, வண்டுகள் ரீங்காரம் இடும் இன்பப் பூங்காவாக மாறும்.

**ஆணவம் :** அன்பரசி! என் கொட்டத்தை அடக்க நீ யார்? இங்கு நான் வைத்தது தான் சட்டம். இம் என்றால் வனவாசம்! ஏன் என்றால் அஞ்ஞாதவாசம். எனது கொட்டத்தை அடக்க யாராலும் முடியாது. அ ஆ..... அ ஆ...... (மேடையில் நடுவில் பாய்ந்து அட்டகாசமாக ஆட்டம் போடுவர்). ம் ........ ஓடுங்கள் பிடியுங்கள்
(வீரர்கள் மேடையில் இருபுறமும் அன்பரசியும் மக்களும் அகப்படுவர்).

**வீரர்கள் :** (ஆட்டத்துடன்)
தத்தத் தகிர்ந்த தகிர்ந்த தாம்
தித்தத் திகிர்ந்த திகிர்ந்ததெய்

**வீரர் (1) :** வெட்டுங்கள் வீழ்த்துங்கள் கொளுத்துங்கள் ஊர்களை

**வீரர் (2) :** தட்டுங்கள் தாழ்த்துங்கள் தடை போடும் பேர்களை
(பாடலுடன் ஆட்டத்துடன் வீரர் ஆடுவர்)

**வீரர் (1) :** வெட்டுவோம் வீழ்த்துவோம் ஓடியாடுங்கள்

**வீரர் (2) :** தட்டுவோம் தாழ்த்துவோம் தடை போடாதீர்கள்.

(மேற்படி வரிகள் பாடலாக ஆட்டத்துடன் வீரர் ஆடுவர் மக்கள் சோம்பி விழுவர்)

**அன்பு மகள் :**
தொலைந்து போனதே. எங்கள்
வாழ்வு போனதே
தாழ்ந்து போனதே - எங்கள்
கனவு போனதே

**மன்னன் :** (மேடையில் நின்று மக்கள் அழுகையைப் பார்த்து மனம் சோருதல்
இது என்ன உலகம்! எங்கும் பிணமும், இரத்தமும் சதையுமாக
வீடுகள் வாசல்கள் மலைகள் எல்லாம் அழிந்து
நாடெல்லாம் காடாக மாறியிட்டதே!
ஆடுகள், மாடுகள் கால் நடைகள் எல்லாம்
வானம் பார்த்த பூமியாக மல்லாந்து கிடக்கின்றனவே!
எத்தனை அழிவுகள்! எத்தனை அழிவுகள்!
என் ஆணவத்தால் வந்த வினைதானே இது!
என் மமதையால் வந்த காட்சி தானே இது!
நான் எதைச் செய்து முடித்து விட்டேன்.
இந்த உலகின் அழிவு, உயிர்களின் அழிவு
ஒட்டு மொத்தமான இந்த சூழலின் அழிவு.
ஆம் அன்பரசி அன்றே கூறினாள்
அன்புதான் இன்ப ஊற்று, அன்பு தான் உலக மகா சக்தி.
அன்புதான் இவ் உலகைக் கட்டிப் போடும்.
அரும்பெரும் சக்தி
ஆணவத்தால் அழிந்த அரசர்கள் மன்னர்களின் கதைகளை
அன்பரசி அழுத்திக் கூறியும் நான் மோசம் போனேன்.
என் மமதை என்னை மயக்கிவிட்டது.
ஐயகோ நான் என்ன செய்வேன்,
நான் என்ன செய்வேன்.
எனது அழிவினால்தான் இவ்வுலகம் உய்யும்.
ஆணவமே நீ இன்றோடு அழிந்து போ! அழிந்து போ! அழிந்து போ!

**பல்லவி**

தொலைந்து போனதே எங்கள் வாழ்வு போனதே
கலைந்து போனதே எங்கள் கனவு வாழ்க்கையே

**அனுபல்லவி**

மலை போலவே நாங்கள்
நம்பி இருந்தோமே





சிலைகள் போலவே நாங்கள்
உறைந்து போனோமே
(தொலைந்து)

என்று தீருமோ
இந்த நரக வாழ்க்கையே
நன்று விடியுமோ எங்கள்
நாளை வாழ்க்கையே

பன்று தொட்டுமே நாங்கள் வாழ்ந்த வாழ்க்கையோ
குன்றும் குழியுமாய் இன்று சிதைந்து போனதே
(தொலைந்து)


**சரணம்**

ஆணவத்தினால் நாங்கள்
அழிந்து போனோமே
போன வாழ்க்கை தான்
என்று திரும்பி விடும்.
அன்பினால் நாம்
எம்மை கட்டிப்போடுவோமே
தென்புடனே நாம் புது வாழ்க்கை காண்போமே (03)

மேற்படி நாடகம் வவுனியா ஸ்ரீசத்தியசாயிபாபா சேவா நிலையத்தினரால் நிர்வகிக்கப்படும் கூமாங்குளம் சிறுவர் இல்ல மாணவர்களால் 23.11.2009 அன்று நடித்து மேடையேற்றப்பட்டது.

| | | |
|---|---|---|
| இசை | : | திரு.அந்தோனிப்பிள்ளை & தவீசன் |
| நடனம் | : | செல்விகள் நா.சுபாசினி, ஜெயலதா, |
| இயக்கம் | : | கந்தையா ஸ்ரீகணேசன் |



**மன்னாரிலிருந்து**
**ஒரு நூல்**

சிறுகதை

# மீள்தல்

-முருகேசு நந்தகுமார் -

கட்டிலில் புரண்டுபடுத்த சதாசிவத்துக்குத் தூக்கம் வரவில்லை. அவருடைய தூக்க சீதையை எந்த இராவணனோ கடத்திச் சிறைவைத்திருந்தான். உடலும் உள்ளமும் சோர்ந்து போனதால் உறக்கம் கண்களைத் தழுவ மறுத்தது. "பஞ்சணையில் நான் படுத்தும் நெஞ்சில் ஓர் அமைதியில்லை" என்ற சௌந்தரராஜனின் பழைய பாடல் வரிகள் அவருடைய நினைவுக்கு வந்தன.

அவருடைய இளையமகன் குகன் அன்றுமாலை சொன்ன விடயங்களையே அவரும் யோசித்துக் கொண்டிருந்தார். யாழ்ப்பாணத்துக்குச் சென்றுவிட்டு அன்று மாலைதான் அவர் கொழும்புக்கு வந்திருந்தார். பேருந்தில் வந்ததால் ஏற்பட்ட உடற்களைப்பு அந்த எழுபத்தைந்து வயது நிரம்பிய முதியவரைச் சோர்வடையச் செய்திருந்தது. மாலையில் அலுவலக வேலைமுடிந்து வீட்டுக்கு வந்த குகன் அவருடன் பேசிக் கொண்டிருந்தபோது "அப்பா நாங்கள் பெரிய பிழை விட்டிட்டோம்" என்றான்.

"என்ன பிழை?" என்றார் சதாசிவம்.

"என்ன இருந்தாலும் எங்கடை வீட்டை வித்திருக்கக்கூடாது. இப்ப அது இல்லாததாலைதானே லொட்ஜிலே நிக்கவேண்டியிருக்கு. இப்ப அது இருந்தா அதுவிண்டை கதையே வேறை"

குகன் கூறிய வார்த்தைகளுக்குச் சதாசிவம் எந்தப் பதிலும் கூறவில்லை. பெருமூச்சு ஒன்றையே வெளிப்படுத்தினார். அப்போது அங்கே வந்த குகனின் மகளான ஏழுவயது நிரம்பிய சங்கீதா, அடுத்த நாள் பாடசாலைக்குக் கொண்டு செல்வதற்குத் தனக்குச் சில பொருள்களைக் கடையில் வாங்கித் தரவேண்டுமென்று குகனிடம் கேட்க, குகனும் எழுந்து கடைக்குச் செல்ல ஆயத்தமானான். அதன் காரணமாக இவர்களுடைய உரையாடலும் தடைப்பட்டது. மீண்டும் இரவு சதாசிவமும் குகனும் உரையாடினாலும் இவர்களுடைய பேச்சில் இந்த வீட்டு விடயம் இடம்பெறவில்லை. உறங்கப்போன சதாசிவத்துக்கு குகன் கூறிய வார்த்தைகளே காதுக்குள் எதிரொலித்துக் கொண்டிருந்தன. குகன் இப்படிப் பல தடவைகள் அவருடன் உரையாடும்போது கூறியிருக்கின்றான். அப்போதெல்லாம் அவனுடைய வார்த்தைகள் அவரைச் சங்கடத்தில் ஆழ்த்தவில்லை. ஆனால் இப்போது மட்டும் நெருஞ்சி முள்ளாய் நெஞ்சைக் கீறியது. நீண்டகாலமாக யாழ்ப்பாணத்துக்குச் செல்லாமல் கொழும்பிலிருந்த அவரால் குகனுடைய வார்த்தைகளில் உள்ள நியாயத்தை உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஆனால் இப்போது எல்லாவற்றையும் நேரடியாக பார்த்தபின் குகனுடைய கருத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது.

அவருடைய முழுவாழ்க்கையும் அவருடைய நினைவில் அலைமோதியது. அவருடைய குழந்தைப்பருவம், பிள்ளைப் பருவம் என்பன அலைகள் கரையில் தவழ்ந்து விளையாடும் அந்தத்தீவிலே கழிந்தன. பின்பு எஸ்.எஸ்.சீ.தேர்வில் சித்தியெய்தியவுடனேயே அரசாங்க உத்தியோகமொன்றைப் பெற்றுக்கொண்டார். அவரது முதலாவது பணியிடமாக அமைந்தது மருதானை. அவர் தன்னுடைய பதினெட்டு வயதில் தனது சொந்த ஊரான காரைநகரிலிருந்து மருதானைக்குச் சென்றார். மருதானையிலிருக்கும் காலத்தில் சிங்களத்தையும் கற்றுக்கொண்டார். மேலும் அப்போது அரச ஊழியர் யாவருக்கும் சிங்களம் கட்டாயமாகத் தெரிந்திருக்க வேண்டும்.





இதன் பின்னர் அவருடைய பணியிடங்கள் அம்பாறை, யாழ்ப்பாணம், வவுனியா என்று மாறிக் கொண்டிருந்தன. அவருடைய பணியிடம் வவுனியாவாக இருக்கும்போது அவர் திருமணஞ்செய்து கொண்டார். தனது மைத்துனியாகிய பூமணியையே அவர் மணஞ்செய்தார். திருமணம் முடிந்தகையுடன் பூமணியையும் வவுனியாவுக்கு அழைத்துவந்துவிட்டார். இவர்கள் வவுனியாவில் இருக்கும்போதே கணேசனும் குகனும் பிறந்துவிட்டனர். வவுனியாவுக்குப் பின்னர் அவருடைய பணியிடம் மஸ்கெலியாவுக்கு மாற்றப்பட்டது. அங்கும் இவர் தனது மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துச் சென்றார். மஸ்கெலியாவிலிருந்தபோது சிவனொளிபாதமலையையும் தரிசனம் செய்தார். இதன்பின் இவருக்கு யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கு வந்த சதாசிவம் தனக்கு வேலைக்குப் போய்வரச் சௌகரியமாக இருப்பதற்காக நல்லூரில் ஒரு வீட்டில் வாடகைக்குக் குடியமர்ந்தார். இப்போது அவருடைய பிள்ளைகளும் ஓரளவுக்கு வளர்ந்துவிட்ட படியால் இனிமேல் தான் போகும் இடங்களுக்கெல்லாம் அவர்களை அழைத்துச் செல்லாது அவர்களை யாழ்ப்பாணத்திலேயே தங்கவைப்பது என்று அவர் தீர்மானித்தார். திருநெல்வேலியில் காணியொன்றை வாங்கி வீடுகட்டிக்குடிபுகுந்தார். அவர்கள் இங்கே வசித்துவரும் காலப்பகுதியில் மீண்டும் அவருக்கு இடமாற்றல் உத்தரவு கிடைத்தது. அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள கஹட்டகஸ்திகிலியாவில் பணிபுரியும்படி அவ்வுத்தரவு அமைந்திருந்தது. அவரும் பூமணியையும் பிள்ளைகளையும் திருநெல்வேலியில் விட்டுத்தான் மட்டும் கஹட்டகஸ்திகிலியாவுக்குச் சென்றார். அங்கு இவருடைய அலுவலகத்தில் மேலுஞ்சில தமிழர்களும் ஏற்கனவே பணிபுரிந்து கொண்டிருந்தனர்.

சதாசிவம் இங்கு பணிபுரிந்துவரும் போதுதான் 1977ம் ஆண்டு இனக்கலவரம் இடம்பெற்றது. இவரும் இக்கலவரத்தில் பாதிக்கப்பட்டார். கஹட்டகஸ்திகிலியாவுக்கு அருகில் உள்ள கிராமமான சீப்புக்குளத்திலிருந்து வந்த காடையர் கும்பலொன்று இவர்களுடைய அலுவலகத்தையும் சூழ்ந்துகொண்டது. அலுவலகத்துக்கு அருகிலேயே இவர்கள் தங்கியிருக்கும் விடுதியும் இருந்தது. அப்போது நண்பகல் நேரம் என்பதால் சதாசிவம் மதியஉணவு உண்டு கொண்டிருந்தார். காடையர்களில் ஒருவன் அங்குவந்து இவர் தமிழனா? என்று கேட்டு இவரைத்தாக்கினான். அவனுடைய தாக்குதலில் இவருடைய உணவுத்தட்டும் அதிலிருந்த உணவும் தூரப்போய் விழுந்தது. எனினும் இவர் நிலைகுலைந்துவிடவில்லை. இதனிடையே இன்னொருவன் ஓடிவந்து இவருடைய நெற்றியில் பொல்லால் அடித்தான். இதனால் நெற்றி பிளந்து குருதி பாய்ந்தது. அந்தச் சமயம் பார்த்து அங்குவந்த, இவருடைய அலுவலகத்தில் சிற்றூழியராகப் பணிபுரியும் விமலசேன பொல்லால் அடித்தவனைத் தடுக்க முயன்றான். பொல்லால் அடித்தவன் விமலசேனவிடம் "நீயும் சிங்களவன் என்னைத்தடுக்காதே" என்று கத்தினான். ஆனால் விமலசேனாவோ அவனிடம் சதாசிவத்தை அடிக்கவேண்டாமென்று இறைஞ்சிக்கேட்டுக்கொண்டான். அந்தச் சமயத்தில் பொலிஸ் ஜீப்பொன்று அங்கே வந்தது. அதிலிருந்த பொலிசார் வானத்தை நோக்கிச் சுட்டனர். அதனையடுத்து அலுவலகம், விடுதி என்று அந்தப்பகுதி முழுவதும் நின்றிருந்த காடையர் கும்பல் ஓடி மறைந்தது. இந்தக்கலவரத்தில் அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து ஏராளமான தமிழர்கள் அடித்துவிரட்டப்பட்டனர்.

காயப்பட்டிருந்த சதாசிவத்தையும் ஏனைய தமிழ் அலுவலர்களையும் பொலிசாரே வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று காயங்களுக்கு சிகிச்சை செய்வித்து பத்திரமாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்தனர்.

சதாசிவம் காயக்கட்டுக்களுடன் வந்ததைக்கண்டு பூமணி கண்ணீர் விட்டு அழுதாள். இதன்பின் இரண்டாண்டுகள் அவருக்கு யாழ்ப்பாணத்திலேயே வேலை வழங்கப்பட்டது. இதன்பின் ஒரு பத்து வருடங்கள் மன்னார், மடு, பரந்தன் என்று வேலைபார்த்தவருக்கு 1990 இல் கந்தளாயில் பணிபுரிந்தபோது இவரிடமிருந்து எதுவித கடிதமும் வராததுகண்டு பூமணியும் பிள்ளைகளும் துடித்துப்போயினர்.

அப்போது ஒரு வயோதிப மாது கோவிலொன்றில் குறிசொல்வதைக் கேள்விப்பட்டு பூமணி அவரிடம் சென்றாள். அந்தச்சிறிய அம்மன் கோவிலில் பூசை முடிந்தபின்னர் பூமணியும் கவலையுடன் அந்த அம்மா என்ன சொல்லப்போகிறாரோ என்று சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அந்த அம்மா கூறினார், "பிள்ளை! நீ ஒண்டுக்கும் யோசிக்காதை இவர் இன்னொருந்தரோடை பத்திரமா இருக்கிறார். இன்னும் பத்து நாளைக்கிடையிலை அவர் பத்திரமா வருவார். என்ரை வீட்டுக்குத் தெற்குப்பக்கமா இருக்கிற வைரவர் கோயிலுக்குப் போய் தேங்காய் அடிச்சுக் கர்ப்பூரம் கொளுத்திக் கும்பிடு". இதன் பின் அந்த அம்மா விபூதி கொடுக்க பூமணி 'சிவசிவா' என்று நெற்றி முழுவதும் பூசிக் கொண்டு ஒரு வித திருப்தியுடன் வீட்டுக்கு வந்தாள் வந்தவள் உடனடியாக அந்த அம்மா சொன்னதுபோல் குறித்த வைரவர் கோயிலுக்குப்போய் தேங்காய் அடித்துக்கர்ப்பூரம் கொளுத்தி வழிபட்டாள். சதாசிவம் பத்துநாட்களுக்குகிடையில் பத்திரமாக ஊர் வந்துசேர்ந்தார்.

நிலைமை ஓரளவு சீராகியதும் அவர் மீண்டும் கந்தளாய்க்குச் செல்ல முயல, பூமணி அவரைத்தடுத்தாள். இப்படி நாட்டுநிலைமை மோசமாக இருக்கும் போது தங்களைத் தனியாக விட்டுப்போய் அவரும் தனியாகக் கிடந்து சிரமப்பட அவள் விரும்பவில்லை. சதாசிவத்துக்கும் பூமணியின் கருத்துச் சரியாகப்படவே அவரும் ஓய்வூதியத்துக்கு விண்ணபித்துவிட்டுப் பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

காலங்கள் உருண்டோடின. அவருடைய இரு மகன்களுக்கும் வேலைகள் கிடைத்து கணேசன் வவுனியாவுக்கும் குகன் கொழும்புக்கும் சென்றான். 1995 இல் நிகழ்ந்த யாழ்ப்பாண இடப்பெயர்வின் போது சதாசிவமும் பூமணியும் சிறிதுகாலம் மட்டுவில்லிலும் சிறிதுகாலம் பருத்தித்துறையிலும் இடம்பெயர்ந்து வாழ்ந்தனர். வயதான காலத்தில் பிள்ளைகளின் உதவியின்றி மிகுந்த சிரமப்பட்டனர். 1997ல் கொழும்புக்கு வந்த இவர்கள் அங்கேயே குகனுடன் வாழலாயினர். இடையிடையே வவுனியாவுக்குப்போய் கணேசனையும் பார்த்துவந்தனர். தங்களது திருநெல்வேலி வீட்டில் தெரிந்தவர்களைக் குடியமர்த்தி விட்டே கொழும்புக்குப் போயிருந்தார்கள். பின்பு சமாதான ஒப்பந்த காலம் நிலவிய போது இடையிடையே யாழ்ப்பாணத்துக்குச் சென்று வந்தனர். மீண்டும் யுத்தம் 2006 ஆகஸ்ட் மாதம் ஆரம்பித்தபின் அவர்களால் அங்கு செல்ல முடியவில்லை. இந்தச்சந்தர்ப்பத்தில் இவர்களுடைய திருநெல்வேலி வீட்டில் குடியிருந்தவர்களும் அங்கிருந்து சென்று விட்டனர். சதாசிவம் தனது உறவினரொருவர் மூலம் வீட்டில் யாரையாவது குடியமர்த்த முயன்றார். எனினும் அவரது முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

இவர்களுடைய வீடு பலாலி வீதியில் இருந்ததனால் அங்கு குடியிருக்க யாரும் விரும்பவில்லை. பலாலி வீதி ஒவ்வொரு நாளும் இரண்டு அல்லது மூன்று முறை இராணுவ வாகனத் தொடர்களின் போக்குவரவுக்காக மூடப்படும். மூடப்படும் வீதியில் மக்களின் போக்குவரவோ நடமாட்டமோ அநுமதிக்கப்படுவதில்லை. இதன் காரணமாக இவ்வீதியில் குடியிருந்த மக்கள் மேலதிகச் சிரமங்களுக்கு முகங்கொடுத்தனர்.





சதாசிவம் வீட்டுக்கருகில் பெரிய மாடிவீடு ஒன்று இருந்தது. அந்த வீட்டிலும் யாரும் இல்லாததனால் இராணுவத்தினர் இரவுவேளைகளில் அங்குவந்து தங்குவதுண்டு. வீதியில் இராணுவ வாகனத்தொடர்களின் பாதுகாப்புக்காகக் கடமையிலீடுபடும் இராணுவத்தினர் மாலையில் ஊரடங்குச் சட்டம் அமுலக்கு வரும் நேரத்தில் அங்குவந்து குளிப்பார்கள். மாடிவீட்டில் நீர் இறைக்கும் பம்பிக்குப் பொருத்தப்பட்டிருந்த மின்னிணைப்புக்கள் பழுதடைந்துவிடவே சதாசிவத்தின் வீட்டிலிருந்து நீரைக்குழாய் மூலம் பெற்று அவர்கள் உபயோகித்தனர். நீர் தீர்ந்துவிட்டால் சதாசிவத்தின் வீட்டை நிருவகிக்கும் உறவினர் வீட்டுக்குப்போய் அவர்களை அழைத்து வந்து சதாசிவம் வீட்டுப் பம்பியை இயக்கச் செய்து நீரைப்பெற்றுக் கொள்வார்கள். இதெல்லாம் அவர்களுக்குப் பெரிய இடையூறாக இருந்தது. இதுமட்டுமன்றி இராணுவத்தினர் சதாசிவத்தின் வீட்டு வேலியை வெட்டி அதற்குள்ளாலும் போய்வரலாயினர்.

சதாசிவத்தின் உறவினருக்கு வீட்டை நிருவகிக்கும் பொறுப்புடன் இராணுவத்துக்கு நீர் விநியோகம் செய்வதும் வீட்டுவேலியை அடைப்பதும் என்று வேலைகள் அதிகரிக்க அவர்கள் பெரிதும் சிரமத்துக்கு ஆளாகினர். கொழும்பிலிருந்த சதாசிவம் என்ன செய்வது என்று தெரியாமல் குழப்பத்தில் ஆழ்ந்தார். இறுதியில் சதாசிவம் தனது வீட்டை விற்பதென்ற முடிவுக்குவந்தார். வீட்டை விற்க முன்வந்தாலும் அதனை வாங்குவதற்கு உடனடியாக யாரும் முன்வரவில்லை. ஒருவழியாக முயன்று மிகவும் குறைந்த விலைக்கு இவர் வீட்டை விற்றார். வீட்டை விற்றது அவருக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

ஆனால் 2009ல் யுத்தம் முடிவடைந்து யாழ்ப்பாணத்துக்கான தரை வழிப்பாதை திறக்கப்பட்டபின் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. திறந்த வெளிச் சிறைச்சாலையாக இருந்த யாழ்ப்பாணம் அந்நிலையிலிருந்து விடுபட்டது. யாழ்ப்பாணத்தில் வீடுகளின் விலையும் காணிகளின் விலையும் ஆனைவிலை குதிரைவிலை என்று நம்பமுடியாத அளவுக்கு உயர்ந்தது.

சதாசிவமும் ஏனையவர்களைப்போல் நல்லூர்கந்தனின் தேர்த்திருவிழாவுக்குச் சென்றுவிட்டு வந்திருந்தார். அவர் யாழ்ப்பாணத்திலிருந்த போது நகரத்திலிருந்த ஒரு விடுதியிலேயே தங்கியிருந்தார். அவருடைய மனம் தனது வீட்டை விற்றது சம்பந்தமாக அப்போது கூடச் சஞ்சலம் அடையவில்லை. ஆனால், கொழும்புக்கு வந்தபின் குகன் கூறிய வார்த்தைகளால் சஞ்சலம் அடைந்தது. அந்த அர்த்தசாமத்தில் பாரதியாரின்
'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே
அதன் முந்தையர் ஆயிரமாண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே

என்ற பாடல்வரிகள் நினைவுக்குவந்து, அவருடைய சஞ்சலத்தை அதிகப்படுத்தியது. அவர் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குப் போய் வாழ விரும்பினார். மறுநாள் விடிந்தவுடன் அவர் பூமணியிடமும் குகனிடமும் தன்னுடைய விருப்பத்தைக்கூறினார். குகன் அவருடைய விருப்பத்தை வரவேற்றான். தானும் இடமாற்ற உத்தரவு பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணத்துக்குப்போக முயலப்போவதாகவும் கூறினான்.

பூமணி சொன்னாள் "இருந்த வீட்டையும் வித்தாச்சு இனி அங்கைபோய் வாடகைக்குத்தான் இருக்கவேண்டும்."

"இப்ப இஞ்ச மட்டும் என்ன சொந்தவீட்டிலையோ இருக்கிறம். எவ்வளவு

காசை அநியாயமாகக்குடுத்து வீணாக்கிறோம்." என்றார் சதாசிவம்.

"இஞ்சை வாடகைக்குக் குடுக்கிற காசில அங்கைபோய் எங்கையாவது ஓரிடத்திலை வீட்டைக்கட்டிக்கொண்டு நிம்மதியா வாழலாம்," என்றான் குகன்.


"நாங்க எங்கடை வீட்டை வித்தோம், எத்தினை சனங்களின்டை வீடு அத்திவாரத்தோடை இடிஞ்சுபோய்க்கிடக்கு; எத்தினை பேரின்ட உயிர்கள் அநியாயமாப் போட்டுது; உம்மடை அண்ணை யாழ்ப்பாணத்திலையிருந்து புதுக்குடியிருப்புக்கு வரேக்கை அவருக்கு மூண்டு பிள்ளையள் இருந்தது. இப்ப ஒரேயொரு பிள்ளையோடை அதுவும் ஷெல்லடியிலை ஒரு காலில்லாத பிள்ளையோட திரும்பவும் ஊருக்குப்போய் ஏதோ சீவிக்கிறார்தானே," இப்படிச் சதாசிவம் கூறியதும் பூமணிக்குக் கண்கள் கசிந்தன. தன்னுடைய அண்ணனின் இரு பிள்ளைகள் புதுமாத்தளனில் இறந்ததையெண்ணி வருந்தினாள்.

"உனக்கும் கீழே உள்ளவர் கோடி நினைத்துப்பார்த்து நிம்மதி நாடு" என்று கண்ணதாசன் எவ்வளவு அருமையாக பாடியிருக்கிறார். என்று சதாசிவம் கூறினார்.

"இப்ப நானென்ன யாழ்ப்பாணத்துக்கு வரமாட்டன் எண்டே சொன்னனான். எனக்கும் அங்கைபோறதுதான் விருப்பம். ஏதோ வீட்டை வித்துப்போட்டமே எண்ட கவலையிலை சொன்னனான்" என்றாள் பூமணி.

அவர்கள் மீண்டும் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் அவர்களின் வாழ்ந்து முடித்த பிரதேசத்துக்குப்போவார்கள். காணி நிலம் வாங்குவார்கள். காசில்லாவிடில் பாரதியைப்போல் பராசக்தியிடம் கேட்கவும் கூடும். ஏதோ வீடு கட்டுவார்கள் வாழ்வார்கள். விழ்ந்தாலும் மீண்டும் எழுவார்கள்.

## நீ.பி.அருளானந்தம் எழுதிய நூல்கள்










இலக்கிய நாடகம்

# இடுக ஒன்றோ சுடுக ஒன்றோ

- திருமதி.செம்மனச்செல்வி தேசிகன், ஆசிரியை, இரம்பைக்குளம் ம.வி -

### *கட்சி - 1*

**கிள்ளி :** எல்லாம் நாம் அறிவோம் புலவரே! நீரபோய் நம்பியிடம் நாளை போர் என்று கூறும்.

(போர்க்களக்காட்சி)
போர் போர் போர் போர் போர் போர் போர் போர்
எட்டுத்திக்கும் இடியிடிக்க
கட்டுவில்லில் அம்புவிட்டு
பட்டுப்பட்டு என்று பாய்ந்து
முட்டிவீரர் முழிபிதுங்க
(போர் போர் போர்)
நெட்டித்தள்ளிப் பகைமை தன்னை
கட்டறுத்த அழிவு தந்த
போர் போர் போர் போர் போர் போர் போர் போர்
(கிள்ளிவளவன் மறைந்திருந்து போர்முறைக்கு முரணாக நம்பி நெடுஞ்செழியனை வஞ்சகமாகக் கொல்லுதல்)

**புலவர் :** மன்னா! நெடுஞ்செழியா...!! மாண்டனேயோ...
அந்தோ இவ்வுலகில் யாரெனுக்குளர்...!
தொடியுடைய தோள்மணந்தனன்
கடிகாவிற் பூச்சூடினன்
தண்கமழுஞ் சாந்துநீவினன்

**புலவர் :** அன்று உன் அரண்மனையில் ....

### காட்சி - 2

(நம்பி நெடுஞ்செழியன் அரண்மனைக் காட்சி)
ஞாயிறு போற்றதும் ஞாயிறு போற்றதும்
திங்கள் போற்றதும் திங்கள் போற்றதும்
இருசுடர்போல் விளங்கும் எம்மவர் மன்னா
உன்பதம் போற்றுதும் உன்பதம் போற்றுதும்

கொண்டல்கோபுரம் அண்டையில்கூடும்
பாண்டியன் கொடிகள் வானம்
அளந்தது பார்க்கும்
திங்கள் சோலை மரங்களை ராவும்
தெருக்கள் தோறும் பாலது ஓடும்
விண்டபூவில் மது வண்டலிட்டோடும்
வெய்யவன் கதிர்கள் மதில்வழி தேடும்

பொங்கும் கடல்திருச் சங்கமெனச் செழிக்கும்
சங்க வீதியில் சங்கினம் மேயும் நம் நம்பி
நெடுஞ்செழியன் நகர்வளம் பாடி
ஆடும் இளம் நங்கை நானே நானே!

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்தும் கனிகளுக்கு அஞ்சுகங்கள் கெஞ்சும்
கார்மேகம் கண்டுமஞ்சை களிப்புடனே ஆடும்
காடுதோறும் ஓடி ஆடி நதியினங்கள் பாயும்
அஞ்சும் நாகபாம்பினது நாகரத்தின ஒளியில்
அம்புலியைக் காணாது தும்பி மேகம்பார்க்கும்

**மன்னன் :** ஆஹா....! அருமை அருமை! என் நாட்டின் வளம்! காட்டின் வளம்! ஆஹா அழகாகக் காட்சிப்படுத்திவிட்டீர்கள். இதோ என் கௌரவம். (ஆடல் மகளிர் பரிசினைப் பெறுதல்)

**மந்திரி :** வாழி எம் கொற்கை வேந்தே வாழி! தென்னன்பொருப்பிற் தலைவ வாழி செழிய வாழி!! தென்னவ வாழி!!! சான்றோர் ஏத்தும் மாமன்னன் வாழி

மன்னா, இந்த இன்ப வேளையில்

**மன்னன் :** என்ன மந்திரியாரே புதிர்போடுகின்றீர்?

**மந்திரி :** நான் புதிர் போடவில்லை, நேரடியாக கூறுகின்றேன். தாங்கள் நகர்வலம் வந்து வெகுநாட்களாகிவிட்டன. எமது மக்களும் தங்களைக் காண மிக ஆவலாக உள்ளனர். (மன்னர் இராணியாரைப் பார்க்கின்றார்)

**ராணி :** ஆம் மன்னா. மந்திரியார் சொல்வது சரிதான். நீங்கள் மக்களுக்கான அரசர். நல்லாட்சி செய்யும் அரசனுக்கு குடும்பம் ஒரு பொருட்டல்ல. தாங்கள் உடனேயே நகர்வலம் செல்வது சாலச்சிறந்தது.

**மன்னன் :** நன்றுரைத்தீர் மகாராணி ஒரு மன்னனுக்குரிய கடமையை நன்குணர்த்தி என்னில் சரிபாதி என்பதை நிருபித்து விட்டீர்.

## காட்சி - 03

(மன்னன், மந்திரி, சேனாதிபதியுடன் நகர்வலம் வருதல்)
பவனி வந்தனரே நெடுஞ்செழி பவனி வந்தனரே
அவனிபோற்றிய நாயகர் மக்கள் மனதில் உறைபவர்
சிவனு மாய் அரி அயனுமானவர்
வெண்பரி தேரிலேறியே பவனி வந்தனரே - எம்
நெடுஞ்செழி பவனி வந்தனரே

**மன்னன் :** மந்திரியாரே, சேனாதிபதியாரே உங்களின் சாதுர்யத்தினாலும் நல்லாற்றினாலும் எம்நாடும் எம்மக்களும் நிறைவாகவே உள்ளனர். நான் மகிழ்ச்சியோடு இருக்கின்றேன். இம்மகிழ்ச்சி நின்று நீடிக்க எல்லாம் வல்ல ஆண்டவர் மதுரையம்பதி மீனாட்சி சுந்தரர் அருள் புரியட்டும்.





**வாயிற் காவலன் :** மன்னர் மன்னன் வாழ்க! எம்கூடலார் கோமான் வாழ்க!! மன்னா! எமது நாட்டு ஒற்றர் ஒரு முக்கியமான செய்தியுடன் வந்திருக்கின்றார்.

**மன்னர் :** என்னவாக இருக்கும்.... சரி உடனே அவரை வரச்சொல் (ஒற்றன் வருதல்)

**ஒற்றன் :** எண்டிசை போற்றும் செழிய வாழி! மதுரையம்பதி மன்னனே வாழி!! மன்னா, அண்டைநாட்டு மன்னன் சோழன் கிள்ளிவளவன் எம்மீது படையெடுப்பதற்குத் தயாராகிக்கொண்டிருக்கின்றான்.

**மன்னன் :** என்ன!? கிள்ளி எம்மீது படையெடுக்கப் போகின்றானா? நம்ப முடியவில்லையே.... மந்திரியாரே இப்போரைத் தடுப்பதற்கு ஏதாவது வழி இருக்கின்றதா எனப் பாரும். சேனாதிபதி எதற்கும் எம்படைகள் தயார்நிலையில் இருக்கட்டும்.

**சேனாதிபதி :** ஆகட்டும் மன்னா!

**மந்திரி :** முயற்சிக்கிறேன் மன்னா.

**மன்னன் :** என்ன மந்திரியாரே முயற்சிக்கின்றேன் என்று மட்டும் சொல்கின்றீர். போரைத் தவிர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும். இத்தருணத்தில் போரை என்னால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லை. போரின் கொடுமையை நாம் நன்குணர்ந்துள்ளோம். கடந்த வஞ்சி நாட்டுப் போரில் எதிரிகளுக்கும் நமக்கும் ஏற்பட்ட இழப்பையும் உயிர்ச்சேதங்களையும் கண்ணுற்ற என்னால் இன்னமும் அதிலிருந்து விடுபடமுடியவில்லை. எதிரி எம்மீது வலிந்து தாக்குதலை மேற்கொண்டபோதிலும், எமது வீரமிக்கப் படைப்பலத்தால் அவன் எம்மண்ணில் மண்டியிட்டுப் புறமுதுகிட்டு ஓடினான். ஆனாலும் மரித்துப் போன வீரர்கள், அங்கவீனர்கள், விதவைகள், குதிரைகள் மற்றும் யானைகளின் அழிவுகளும் என்நெஞ்சில் இன்னமும் நீங்காத காயமாகவே உள்ளது.

**மந்திரி :** மன்னா! கிள்ளியின் படைப்பலத்தை நான் நன்கறிவேன். ஆனால் அவனுக்கு இருக்கும் ஒரு பலவீனம் அவன் நாட்டுக்குள்ளேயே இருக்கும் உள்நாட்டுப் பூசல்கள்தான். அவற்றை ஒரு கட்டுக்குள் கொண்டு வந்து சிற்றரசர்களுக்குத் தனது வீரத்தைக் காட்டவே கிள்ளவளவன் எம்மீது போர்தொடுக்க வருகின்றான். அங்கு பஞ்சமும் தரைலவிரித்தாடுகின்றது.

**மன்னன் :** அப்படியானால் எமது களஞ்சியத்தில் இருந்து ஒரு பகுதியை அவனுக்கு அனுப்பி அந்நாட்டின் பஞ்சத்தைப் போக்க முயற்சிக்கலாமா என்றும் எமது அவைப்புலவரான பேரெயில் முறுவலாரை தூது அனுப்பலாமா என்பதையும் யோசித்துப் பாருங்கள். எப்படியாயினும் போரைத் தவிர்த்தே ஆகவேண்டும்.

**சேனாதிபதி :** மன்னா இவையெல்லாம் அந்தக் கிள்ளிவளவனுக்குப் புரியாது. அவனுக்கு அவன் மொழியில் தான் பதில்சொல்ல வேண்டும். எமது படை தயாராகவே இருக்கின்றது. ஆணையிடுங்கள் போதும். அரைநொடியில் அவன் கதைமுடிப்போம்.

**மன்னன் :** சற்றுப் பொறுங்கள் சேனாதிபதியாரே உங்கள் வீரம் உலகம் அறிந்ததே. நான் போரை கடைசிவழிமுறையாகவே கருதுகின்றேன்.

**மந்திரி :** உங்கள் யோசனை மிக்க நன்று மன்னா. புலவரைத் தூது அனுப்புவோம்.

## காட்சி - 4

புலவர் அரண்மனைக்குள் வருதல்

**புலவர் :** நாடுகெழு செல்வத்துப் பீடுகெழு வேந்தே வாழ்க! செங்கோலோச்சும் நின்கொற்றம் வாழ்க!! நம்பி நெடுஞ்செழியா வாழ்க!!! மன்னா என்னைத் தாங்கள் அவசரமாக அழைத்தீர்களாமே? தங்கள் அழைப்பாணை கேட்டு ஓடோடி வந்துள்ளேன். நம்பி நெடுஞ்செழியன் என்னை அழைக்கின்றார் என்றால் ஏதோ விடயம்...

**மன்னன் :** ஆம் புலவரே விடயம் முக்கியமானதுதான்.

**புலவர் :** முக்கியம் என்றால்.... இப்பொழுதுதான் வஞ்சி நாட்டுப்போரில் வெற்றிவாகை சூடி ஓய்வெடுக்கின்றீர்கள். அதற்குள்.... அடுத்த விடயம்?...

**மன்னன் :** கேளுங்கள் புலவரே!

**புலவர் :** நீர் எமக்கு ஆற்ற வேண்டிய அரும்பணி ஒன்றிருக்கின்றது.

**மன்னர் :** ஒரு பணி என்ன ஆயிரம்பணிகள் ஆற்றுவேன் அது என்பாக்கியம். பகையரசர்களை சங்கை செய்வதில் வல்லவன் நீர். கிள்ளிவளவன் போர் முரசு அறைந்துள்ளான.

**புலவர் :** என்ன! கிள்ளி போர் தொடுக்கின்றானா? பகையுணர்வு நம்மிடம் இஞ்சித்தும் இடமில்லையே நான் இப்போதே சென்று அவனை செவி அறிவுறுத்துகின்றேன். விடை தாருங்கள் மன்னா.

**மன்னன் :** சென்று வாருங்கள் புலவரே வென்று வாருங்கள்.

## காட்சி - 5

*கிள்ளிவளவன் அரண்மனைக் காட்சி*

**புலவர் :** வாயிலோயே! வாயிலோயே! நம்பி நெடுஞ்செழியன் அவைக்களப் புலவன் பேரெயில்முறுவலன் தூதுவனாக வந்திங்கிருப்பதை அறிவிப்பாயே

**வாயிற் காவலன் :** புலவர் பெருமானே அறியத்தருகின்றேன். (வாயிற்காவலன் போதல்)
மன்னர் மன்னன் வாழ்க! நன்னாட்டுப் பொருநன்வாழ்க.
மன்னா மதுரையம்பதி மன்னன் நம்பி நெடுஞ்செழியன் தூதுவராக அவர்தம் அவைக்களப் புலவர் தங்களைப் காணவந்துள்ளார்.

**கிள்ளி :** என்ன! நம்பி நெடுஞ்செழியன் புலவரைத் தூது அனுப்பியிருக்கின்றானா? ஆஹா... ஆஹா... ஹா... பயந்துவிட்டான் போலும். சரி அழைத்துவா. (புலவர் வருதல்)





**புலவர் :** கிள்ளிவளவன் வாழ்க! அவர்தம் கீர்த்தி வாழ்க!!

**கிள்ளி :** வருக புலவரே! வந்தவிடயம் என்னவோ!!

**புலவர் :** மன்னா! செப்புவதுடையேன். மதுரை மன்னன் நெடுஞ்செழியன் தங்களுடன் என்றும் தன் நல்லுறவு நீடிக்க வேண்டும் என விரும்புகின்றான். தங்கள் நாட்டின் பஞ்சத்தையும்...

**கிள்ளி :** என்ன....! நம்பி என் நாட்டின் பஞ்சம் தீர்க்கப் போகின்றானா? அவனுக்கு இனி ஏது நாடு? நாளை நடக்கும் போரில் மதுரையும் என்நாடாகும் என்று கூறும்.

**புலவர் :** மன்னவனே.... உந்நாட்டினை காத்துக்கொள். பஞ்சம் தீர்க்க வந்தவனை வஞ்சம் தீர்க்க நினைப்பது சரியல்ல. அறநெறி பிழைத்த அரசனுக்கு அறமே கூற்றமாகும். அறிந்ததில்லையா நீ!!

**கிள்ளி :** ஹ...ஹ...ஹ...ஹ...ஹ... (அரண்மனையைவிட்டு வெளியேறுதல்)

**புலவர் :** செற்றோரை வழிதடுத்தனன்
நட்டோரை உயர்பு கூறினன்
வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன்
பிறரைத்தான் இரப்பறியலன்
இரந்தோர்க்கு மறுப்பறியலன்
வேந்துடை அவையத்து ஓங்குபுகழ் தோற்றினன்

## காட்சி - 6

*சிற்றரசர்கள் உரையாடுகின்றனர்*

**சிற்றரசன் காரி :** ஓரி!, நம்மை அச்சுறுத்தி தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்கும் பஞ்சத்தைப் போக்குவதற்கும் கிள்ளி நெடுஞ்செழியன் மீது போர்த்தொடுத்தான். ஆனால் நடந்தது என்ன?

**ஓரி :** ஆம்! பஞ்சம் தீர்க்க வந்த நம்பியைக் கொன்று அவன் தானியக் களஞ்சியங்களைக் முற்றாகவே கபளீகரம் செய்துகொண்டான். இன்று மக்களுக்கு கஞ்சி வார்க்கின்றான். வசியும் வளமும் மிகுந்த எம் நாட்டில் இன்று பசியும் பட்டினியும்தான்.

**காரி :** மாதம் மும்மாரி பொழியும் எம்நாட்டில் இன்று மழைக்கே மக்கள் வானம் பார்த்து நிற்கின்றனர். மதுரை அழகும் ஒளியும் இழந்து இன்று இருண்டுபோய்க் கிடக்கின்றது.

**ஓரி :** உண்மைதான் காரி! அறநெறி பிழைத்த அரசன் ஆட்சியில் மக்கள் .... எம் அரசன் நெடுஞ்செழியன் ஆட்சியில் தாம் வாழ்ந்த வாழ்வுதான் என்ன ம..ம் எல்லாம் கலாடி போல் ஆகிவிட்டது.

**மருது :** என்ன அண்ணை காலடி நனவு என்று

**கணபதி :** மருது! மதுரைக்கு வந்த சோதனைதான் என்ன! கதைச்சுக்கொண்டு

இருக்கிற! கிள்ளிவளவன் சரியான முறையிலா எம் மன்னவனுடன் போர்த்தொடுத்தான்? வஞ்சமாக அல்லவா அவரைக் கொன்றான்! வஞ்சகன் ஒருவனின் ஆட்சியில் எப்படி மக்கள் வாழ்கிறார்களோ அப்படித்தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.

**சம்பந்தன்** : சரியாச்சொன்னாய் மருது! இந்த நாட்டில் வஞ்சகத்தை ஒழிக்க வேண்டும். வஞ்சனையாளர்களை ஒழிக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் நிம்மதியாக வாழமுடியும்.

**கணபதி, மருது** : சரிதான்.... சரிதான்

**பொதுமக்கள்** : தர்மத்தைக் கொன்றவனே! இதோ தர்மத்தின் தீர்ப்பு.... (மக்கள் ஆர்ப்பரித்து ஓடி வரல்; கிள்ளி முடியினைக் கையிலேந்தி ஓடுதல்)

**புலவர்** :

வருபடை எதிர்தாங்கினன்
பெயர்படை புறங்கண்டனன்
கடும்பரிய மாக்கடவினன்
நெடுந்தெருவில் தேர்வழங்கினன்
ஓங்குஇயற் களிறுஊர்ந்தனன்
தீஞ்செறி தசும்பு தொலைச்சினன்
பாண்உவப்பப் பசிதீர்த்தனன்
மயக்குடைய மொழி விடுத்தனன், ஆங்குச்
செய்ப எல்லாம் செய்தனன் ஆகலின்
இடுக ஒன்றோ! சுடுக ஒன்றோ!
படுவழிப் படுகவிப் புகழ்வெய்யோன் தலையே!

(புறநானூறு - 23)

தொடியணிந்த இளமகளாரை மணந்தான், காவலையுடைய இளமரக்காவின் நறுமணங்கமழும் பூவைச்சூடினான், குளிர்ச்சி தரும் சாந்தைப் பூசினான், பகைத்தோரைக் கிளையோடும் அழித்தான். நண்பரை உயர்த்திப் பேசினான். வலியவரென்று அவரைப் போற்றியும், மெலியவரென்றும் அவரை இகழ்ந்தும் அறியான். பிறரிடம் இரந்து அறியான். இரந்தவர்க்கு மறுத்துக்கூறியும் அறியான். அரசர்கள் கூடிய அவையத்திலே தன் ஓங்கிய புகழை விளங்கக் காட்டினான். தன் நாட்டுமேல் வரும் படைகளைத் தன் எல்லையுட் புகாமல் தடுத்து புறமிட்டு ஓடுபவரிடம் புறக்கொடை கொள்வதன்றி, அவரை வெருட்டி அழித்தல் செய்யான். குதிரையை மனவேகத்தினும் விரைவாகச் செலுத்தினான். தேர் செலுத்தினான். (களிறு செலுத்தினான் மதுக்குடமும் முற்றையும் தீருமாறு பலருக்கும் வழங்கினான்) பாணர் உவப்புடையுமாறு அவர் பசியைப் போக்கினான். மயக்குடைய மொழிபேசாது தெளிந்த சொற்களே பேசினான். இவ்வாறு செய்ய வேண்டுவன அனைத்தும் செய்தனன் அவன். இன்றோ அவன் மறைந்தான்! இடுவீர்களோ எரிப்பீர்களோ? அவன் தலையை நீவிர் எதுவுஞ் செய்க. அவன் புகழ் என்றும் எதனாலும் அழியாது இவ்வுலகிலேயே நிலைத்து நிற்கும் என்பது உறுதி.







# மாற்றுவலு ஆற்றல்

**- முத்துமொழியான் -**

மகனே!
உனது மொழி
என்னை மெய்சிலிர்க்க வைத்தது.
விழி அசைவிலும்
உடல் ஜதியிலும்
கரங்களின் சைகைகளிலும்
நீ
மொழி, மதம், இனம் விட்டு
குலம், மதம், நாடு கடந்து
மனிதனாக மட்டும் - உனை
அடையாளம் காட்டியவேளை
உனக்குள்ளால்
அந்த
இறைவனைக் கண்டேன்.
உடலை
வளைத்தும் நெளித்தும்
சமனிலை தப்பாது
அரங்காடும் வேளையிலும்
அழகியலைப்
பதிவு செய்யும் போதும்
உண்மைக்காக
உனது தோள்கள்
புடைத்தெழுகின்றபோதும்
மாற்றுவலு என்பதன் பொருளை
கட்டுருவாக்கம் செய்து கொண்டேன்
உனது நேயம் எழுச்சிகள்
அன்பாய் உருகும் கண்ணீர்த்துளிகள்
குன்றாய் நிமிர்ந்து நிற்கும்
நம்பிக்கைகள்
பக்தி, பணிவு, பரவசம்
சத்திய வார்த்தைகள்
இவற்றிலே
மனிதனைக்கண்டேன்.

பிரதாபனின் இலக்கியப் பதிவுகள்

## வடமாகாண தமிழ் இலக்கிய விழாவில்(2010) ஆளுநர் விருது பெற்றோர் விபரம்

கிளிநொச்சியில் நடைபெற்ற வடக்கு மாகாண தமிழிலக்கிய விழாவில் (02.10.2010) ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பன்னிரெண்டு தமிழ், முஸ்லிம், சிங்களப் பெரியார்கள் ஆளுநர் விருது பெறும் அறிஞர்களின் பெயர்கள் வருமாறு:

பேராசிரியர் சபா.ஜெயராசா (கல்வி), உடுவில்,
கே.கணபதிப்பிள்ளை (இலக்கியம்), கரவெட்டி,
செல்வி. வி.மாதுசிரோன்மணி (இசை), சாவகச்சேரி,
வி.இளையகுட்டி (பல்துறை), கோப்பாய்,
எஸ்.திருநாவுக்கரசு (நாடகம்), நல்லூர்,
எம்.மயில்வாகனம் (நாட்டுக்கூத்து), காரைநகர்,
எஸ்.கணபதிப்பிள்ளை (வாய்ப்பாட்டு), சங்கானை,
எஸ் லியோ (வாய்ப்பாட்டு), ஊர்காவற்றுறை,
வி.செல்லத்துரை (கிராமிய நாடகம்), பளை,
வி.வேலாயுதபிள்ளை (கிராமிய நாடகம்), கண்டாவளை,
எம்.அப்துல்காதர் (ஊடகத்துறை), மன்னார்,
வணக்கத்துக்குரிய கே.ரட்ணசாரதேரர் (சிற்பம்) வவுனியா.

*விமர்சனம்*

# நவயுகாவின் உயிர் உடையும் ஓசைகள்

- த.தனசீலன் வவுனியா -

**செல்வி நவயுகா குகராஜாவின்** கவிதைத்தொகுப்பான 'உயிர்உடையும் ஓசைகள்' அண்மையில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. வடபுலத்தின் முக்கிய இலக்கியதளமாக மாறிவிட்டுள்ள வவுனியாவில் ஓர் இளைய கவிஞை அதன் உறுதியாக்கத்திற்கு தன்னுடைய பங்களிப்பையும் செய்யமுயன்றுள்ளார். இன்றைய பெண்கள் வெவ்வேறான நாகரீகப் பொருட்களிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வேளையில் ஓர்கவிதைத் தொகுப்பை தனது அணிகலனாக கொண்டமை பாராட்டத்தக்கது.

இலக்கியத்தில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றம் புதுக்கவிதையாகும். கவரச்சிகரமான மாற்றமுமாகும். இத்தகைய மாற்றம்தான் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை, யுவதிகளை இலக்கியம் நோக்கி கவர்ந்துள்ளதோடு அவர்களை படைப்பிலக்கியத்தில் ஈடுபட உந்தியுள்ளது.

இதன் தொடர்ச்சியில் நவயுகாவும் கவிதை செய்துள்ளார். அவர் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவி, வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியினால் பயிற்றப்பட்ட ஆசிரியை, நடன, நாடகக் கலைஞராக அறியப்பட்டவர், மும்மொழிகளை பேசத்தெரிந்தவர், அறிவிப்பாளினி, தொகுப்பாளினி என பல்வேறு தளங்களில் நின்று சிறப்புபெறுபவர் இவற்றுக்கும் மேலாக யாழ் மண்ணின் சிறந்த நாடக கலைஞராக அறியப்பட்ட மறைந்த **அமரர். வீ. எம். குகராஜாவின்** கனிஸ்ட புதல்வி.

இவருடைய கவிதைகளை அவதானிக்கும்போது அது தமிழ்மயப்பட்டு நிற்பதை அவதானிக்கலாம், தமிழ்மய்பட்டுள்ளதோடு சமூகமயப்பட்டும் நிற்பதாலே அசாதாரண தன்மையை எடுத்துநிற்கின்றது. எப்பொழுது தனியொருவரின் உணர்வு, பல மனிதர்களின் பொதுவுணர்வாக அடைந்துவிடும் பொழுது அவ்வுணர்வு பிரபல்யமாகிப் பரந்த வீச்சைப் பெறுகின்றது. இவரின் கவிதைகளில் சில அவ்வாறே பல இளைஞர், யுவதிகளின் உணர்கையோடு ஒன்றித்து கவனிப்பும் பெறும்.

புதுக்கவிதை என்பது சொல்லின்/சொற்களின் பெறுமதியில் தங்கியுள்ளது. சொல்லில் இருந்து விரியும் அனுபவம் அபாரமாகிவிடும் பொழுது கவிதைக்கான கட்டுக்கோப்பு சிதைவடைந்து நிற்பது கவனிப்பாரற்று விடுகின்றன. 'காத்திருந்த காதல்' என்ற கவிதையில் சூழமைவை வெளிப்படுத்தும் விதமும் அதனூடு நின்று தனது விடயத்தை சொல்லும் முறைமையும் மெச்சத்தக்கது, பின்வரும் கவிதைகளை கவனிக்குக.

அவள் ஓர் கடலோரக்கவிதை
கடின உழைப்பில்
கல்லூரி வந்தவன்
................................................
................................................
விலாங்கு மீனாய் நீண்டிருக்கும்





பட்டுக்கூந்தல்
வௌவால் மீனென
வளைவுச் செதுக்கல்கள்

இன்னுமொன்றையும் கவனிப்போம், இது பல இளையவர்களை கவரக்கூடியது.

நீயாகவே வந்தாய்
நீயாகவே போனாய்
சேதமில்லை உனக்கு
எனக்கோ
ஆணிவேர் தொடக்கம்
அரும்புவரை காயம்

இங்கு பயன்படுத்திய சொற்கள் வாசகர்களிற்கு பரீட்சயமானவை. சொல்லும் சேதியும் அந்நியமானது அல்ல என்றபோது, அவர் இவ்விதம் தெரிந்த சொற்களை தெரிந்த செய்திகளுக்காகவே பிரயோகித்த விதம் பவித்திரமான அமைப்பைக் கொடுப்பதாலே அவரது கவிதைகள் ஓர் வசீகரத்தை காண்பித்துக் கொள்கிறது. இதுபோன்ற கவிதைகள்தான் இவர் ஓர் புதியவராக மின்னுவார் என்பதை சொல்லவிழைகின்றது.

ஈழத்து இலக்கியபரப்பில் கவிதை எழுதும் பெண்கள் அதிகம் என்றபோதும், கவிதைத்தொகுப்புக்களை வெளியிடும் எண்ணிக்கை மிகக்குறைவாகும். இந்தவகையில் இக்கவிஞை பாராட்டுக்குரியவர். இவரது கவிதையில் இன்னுமொரு விடயத்தினையும் அவதானிக்கலாம். இலக்கியத்தில் பால் (ஆண்/பெண்) செலுத்தும் தாக்கம் இவருடாகவும் கசிகிறது, அதாவது ஆண் கவிஞர்கள் நிலவு பற்றியே அதிகம் எழுதுவார்கள். இவரோ சூரியன் பற்றி அதிக பதிவுகளை விட்டுச்செல்கின்றார். இவரது பார்வையில் காதல் பற்றிய சங்கதிகள், சமூகப்பார்வைகள் இதுவரை வந்த ஆண் கவிஞர்களின் வெளிப்பாடுகளிலிருந்து பெரிய வித்தியாசத்தை காண்பிக்கவில்லை என்பது முக்கியமானது. எமது சூழல் அவரிற்கு முழுச்சுதந்திரத்தையும் வழங்குவதனாலோ, இல்லை அச்சுதந்திரத்தை தானே எடுத்துக்கொண்டு பிரகாசிப்பதாலோ இவர் கவிதைகள் பெண்ணியம் பற்றிப் பேசத்தயங்குகின்றன இதுவும் இவர் இலக்கிய செல்நெறியில் காத்திரமானதோர் பண்பாகும். பெண் என்ற நிலையிலிருந்து சற்று விலகி மனித நிலை நின்று கவிதை சொல்வதனால் பல பெண்கவிஞர்களிற்கு மத்தியில் இக்கவிஞை வேறுபடுகின்றார் இது பாராட்டப்படக்கூடிய விடயமாகும்.

என்றாலும் சிலநெருடல்கள் இவரது கவிதைகளால் ஏற்படுகிறது. அதாவது மிகப்பெரிய உயிரிழப்புக்களையும், கொடுமைகளையும் மன உளைச்சல்களை தாங்கிய இனத்திலிருந்து தோன்றிய கவிஞை அவற்றுக்கு கொடுத்த முக்கியத்துவம் குறைவாகும். வரி அமைப்பு வைரமுத்துவை ஞாபகப்படுத்துகிறது. கவிஞை வைரமுத்துவால் ஆகர்சிக்கப்பட்டவர் என்பதை ஒப்புக்கொண்டாலும் இவரது சில கவிதைகள் இவரிற்கு தனி அடையாளத்தை கொடுக்கின்றன. அதன் வழியில் சென்று இன்றும் எழுதி ஈழத்து இலக்கிய உலகிற்கு வலுசேர்க்கவேண்டும். நாம் அவர் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை காப்பாற்றவேண்டும்.

# கயல்வண்ணனின் கவிதைகள்

## குழந்தை

குறு குறு இதழில்
குவியும் அழகு
சிறுநடை பயின்று
சிணுங்கும் குழந்தை!

மாந்தளிர் மேனி
மாணிக்கமாமணி
காந்தக் கருவிழி
காவியம் குழந்தை!

குழி விழும் கன்னம்
குறும்புப் பார்வை
செழுமைப் பேச்சு
சீதனம் குழந்தை

முக்கனிச் சுவையும்
முத்தமிழ் சாறும்
பக்குவம் எங்கள்
பச்சிளம் குழந்தை!!!

## தென்றலும் புயலும்!

கடலோரம்
மென்காற்று இதமாக
வாங்க...
மெதுவாக நடக்கின்றோம்...
நாம்....!
அக்காற்றே சிலவேளை
புயலாக ....
மாறி....?
ஊர் உலகத்தின்...
உருவத்தை மாற்றும்....!!!
சில நொடியில்

## மன்னார் தமிழ்ச் செம்மொழி மாநாடு – நிகழ்வு








நாடகக் கட்டுரை

# இசை நாடக அரங்கம் – அழகியற் பரிமாணங்கள்

-கந்தையா ஸ்ரீகந்தவேள்-

பாடலை பிரதான ஊடகமாக கொண்டு ஆற்றுகை செய்யப்படும் நாடகவடிவத்தினை இசை நாடகம் என அழைக்கின்றனர். அதாவது இசையோடு பாடி நடிக்கப்படுகின்ற பண்பு இதன் விசேடத்துவமான பண்பாகும். இவ்வடிவம் இந்தியாவின் பம்பாய் மாநிலத்தின் பாரசீக, மராட்டியக் கம்பனிகளால் அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வடிவம் 18ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே தமிழ் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தக் கட்டத்தில் கர்நாடக சங்கீதத்தில் புகழ்பெற்றவர்கள் இப் புதுவகை நாடகத்தினால் கவரப்பட்டார்கள். தமிழ் நாட்டில் இவ்வடிவம் பரவலடைந்து புகழ் பெற்றதுடன் இலங்கையிலும் சமகாலத்தில் கொண்டு செல்லப்பட்டு ஆற்றுகை செய்யப்பட்டது. ஆரம்பத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களே இந்தியாவிலிருந்து நாடகக் கலைஞர்களை இலங்கைக்கு அழைத்துவந்து நாடகங்களை அரங்கேற்றி வந்தனர். பார்சித்தியேட்டர் மரபைப் பின்பற்றி வந்த இவ் வகை நாடவடிவம் அண்ணாவி மரபு நாடகம், கொட்டகைக் கூத்து, டிறாமா மோடி நாடகம், ஸ்பெஷல் நாடகம், மடுவக்கூத்து என்று பல பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது.

இசை நாடகமானது பாடுதலை அடிப்படையாகக் கொண்ட ஒரு நாடக வடிவம் என்பதை ஏலவே கண்டோம். பாடி நடித்தலும், நடித்துப்பாடுதலும் இந்த அரங்கின் அடிப்படையாகும். இந்த நாடக வடிவத்தின் தொடர்பாடல் மொழியாக இசையே இருக்கும். அழுதாலென்ன, மகிழ்ந்தாலென்ன, ஓடினாலென்ன, வேட்டை ஆடினாலென்ன, கேள்வி கேட்டாலென்ன பதில் சொன்னாலென்ன எல்லாமே பாடல் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. ஹார்மோனியம் இவ் அரங்கின் மிகப் பிரதான இசைக் கருவியாக இருக்கும். தாளமும் (சல்லரி) மிருதங்கமும் அதன் லயத்தைத் தீர்மானிக்கும் கருவிகளாகும். மும்பாயிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்த இவ் வடிவம் தமிழ்நாட்டில் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளால் மீள் வடிவமைப்பைப் பெற்று தமிழுக்குரியதான தனிப்பண்பைப் பெற்றது.

வாய்மொழி நாட்டார் கதைகள், வரலாற்று கதைகள், புரான இதிகாசக் கதைகள் என்பன இந் நாடக வடிவத்தின் உள்ளடக்கங்களாகும். அக்கால ஓவிய மரபினைப் பின்பற்றிக் காவிய நாடகங்களுக்குரிய பொருத்தப்பாட்டுடன் கவர்ச்சியும் யதார்த்தமும் நிறந்த வேட உடைகள் இதில் பயன்படுத்தப்படுகின்றன. மேடைப் பின்புலத்தை இருபரிமாணத்திலும் முப்பரிமாண மாயையோடும் வழங்கவல்ல காட்சித் திரைகள் இவ் அரங்கில் பயன்படுத்தப்படுகின்றன.

**1. இசைக் கூறுகள் :-**

இசை நாடகத்திலே பல்வேறு வகையான இசைவடிவங்கள் பயன்படுத்தப் படுகின்றன. அவையாவன கர்நாடக இசை, தமிழ்த்திருமுறை பண் இசை, மேற்கத்தேய இசை, நாட்டுப்புறப்பாடல் இசை, இந்துஸ்தானி இசை என்பனவாகும். இவை நாடகத்தின் கதை, சுவை, சம்பவங்கள், பாத்திரங்கள் என்பவற்றுக்கு ஏற்ற வகையில் பொருத்தமான இடங்களில் இலாவகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. நடிகரின் இசைத்துறை ஆளுமைக்கு ஏற்ற வகையில் பல்வேறுபட்ட விதங்களில் இவ் இசைக்கூறுகள் கையாளப்படுகின்றன. காதல், சோகம், வீரம், கோபம், பிரிவு, பக்தி போன்ற உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு

பாடல்களே பெரிதும் துணை செய்கின்றன. சொற்களும் இசையும் சங்கமிக்கின்ற போது, இசையில் முக்கிய சொற்கள் முதன்மை பெற்று பாவத்துடன் வெளிப்பட்டு நிற்பது இசை நாடகத்தின் தனித்துவமாகும்.

காலப்போக்கில் ஒரு சில வசனங்களும் இணைக்கப்பட்டன. இதனை ஊட்டு வசனங்கள் என்று கூறுவர். இவை பெரும்பாலும் பாட்டின் பொருளை விளக்குவதற்காகவே எழுதப்பட்டன. பாடல்கள் யாவும் சுத்தமான கர்நாடக சங்கீதத்துக்கு அமையவே எழுதப்படும். அனேகமான பாடல்கள் கீர்த்தனங்களாக அமையும். கீர்த்தனங்கள் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் மூன்று உறுப்புக்களையும் கொண்டிருக்கும் பாடல் ஒவ்வொன்றிற்கும் இசையமைக்கப்பட்டு ராகம், தாளம் என்பன குறிக்கப்பட்டிருக்கும்.

கீர்த்தனங்களுடன் வெண்பா, கலித்துறை, விருத்தம், சிந்து, வண்ணம், ஓரடிக்கும்மி, கவி வெண்பா, தாழிசை என்பனவும் இடம் பெறுவதைக் காணலாம். இடையிடையே துக்கடாக்களும் இந்துஸ்தான் மெட்டுக்களும் கலந்து வரும். சந்தத்தோடு அமைந்த பாடல்களும் அதிகம் இடம் பெறுவதைக் காணலாம். உரையாடல்களாக அமைந்த பாடல்கள் யாவும் ராகமாலிகைகளாகவே இருக்கும். நாடக ஆசிரியர்களே பெரும்பாலும் ஏற்ற மெட்டுக்களை அமைத்து இந் நாடகங்களை எழுதியுள்ளார்கள்.

**2. நடிப்பு முறை :-**

இசை நாடகத்தில் நடிப்பு முறையை எடுத்துக் கொண்டால் அது தன்னகத்தே கொண்டு வந்த நடிப்பு முறையுடன் பிற்காலத்தில் அறிமுகமான இயற்பண்பு நாடகமரபின் முறைமைகளையும். கூத்தின் சில இயல்புகளையும் உள்வாங்கி படிப்படியாக தனக்கான ஒரு தனித்துவமான நடிப்பு முறைமையைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

இசை நாடக நடிகர்கள் சிறந்த சங்கீத ஞானமுள்ளவர்களாகவும், சாரீர வளமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். நடிகர்கள் தாமாகவே பாடி நடிக்க வேண்டி இருப்பதனால் அந்தத் சொற்தெளிவும் இடக்குமுடக்கும் இல்லாமல் பாடும் ஆற்றலும் இருக்க வேண்டும். அவை மட்டுமன்றி காதல், வீரம், சிரிப்பு, கோபம், வியப்பு, வெறுப்பு, சோகம், பயம், சாந்தம் ஆகிய ஒன்பது சுவைகளையும் பாடல்களில் அமைத்து எழுதியிருப்பதனால் நடிகர்களும் நடிப்புச்சுவை குன்றாமல் இவ் ஒன்பது சுவைகளையும் பொருத்தமானவாறு வெளிப்படுத்தி நடிக்க வேண்டும். பொதுவாக இந்த நடிப்பினை மோடியுற்ற நடிப்பு எனக் கூறுவார்கள்.

**3. பாடுதல் சிறப்பு :-**

இசை நாடகத்தில் நடித்தல் என்பது பாடுதல் என்று கொள்ளப்படக் கூடியது. அதாவது குறிப்பிட்ட பாத்திரத்துக்குரிய பாகங்கள் பாடல்களில் தான் தங்கிநிற்கும். பாடலின் இராகங்கள் நாடக சம்பவங்களின் உணர்வு நிலைக்கு ஏற்ப அமைக்கப்பட்டவையாக இருக்கும். உதாரணமாக கோபத்துக்கு மோகனமும் சோகத்திற்கு முகாரியும் இடம் பெறலாம். எனவே நடிகன் ஒரு இராகத்தை வாலாயம் பண்ணி அதற்குள் தன்னைக் கரைக்கும் போதே அந்த உணர்வுக்குள் உள்நுழைகின்றான். அந்தப் பாடுதலின் கணத்தில் நின்றுதான் அவன் நடித்தலையும் மேற்கொள்கின்றான். எனவே பாடுதலும் நடித்தலும் இரண்டற நிலை பெறுதல் இந் நடிப்புச் செயற்பாட்டின் அடிப்படையாகும் பெரும்பாலும் பாத்திரங்கள் அரங்கிற்குள் நுழைவதற்குமுன் பக்கத்தட்டிகளின் பின் நின்று பாடிஇசைக்குள் தம்மைத் தகவமைத்துக் கொண்டே





அரங்கில் காலடி எடுத்து வைப்பதனை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

இசை நாடகத்தில் நடிப்பின் முதன்மையான விடயமாக பாடுதலையே கொள்ள வேண்டும் பாடுதல் என்பது ஒரு கச்சேரியில் பாடுதல் போலன்று. நாடகத்தில் பாடுதல் தனிச் சிறப்புண்டு. இங்கு நடித்துப் பாடுதல் முதன்மை பெறும். சங்கீதத்திற்குரிய அடிப்படை விடயங்களான சுருதி, தாளம், லயம், பாவம் அனைத்தும் இங்கும் அடிப்படையான விடயங்களே. மேடையேறும் நடிகன் முதலில் புலனுணர்வுகளுக்குள் சுருதியின் ஸ்வரத்தை உள்வாங்கி மனதினை ஒருங்கிணைத்துக் கொண்டுதான் பாடத் தொடங்குவான் பாடலின் இராகத்துக்குள் தன்னை, குரலை மிதக்கவிட்டுக் கொண்டு தாளப்பிசகின்றி ஒரு மேடைப் பாடலுக்குச் சற்றும் குறையாமல் நின்று தான் பாடுவான் ஆனால் அப்பாடல் மேடைப் பாடலிலிருந்து வேறுபட்டு நிற்கும்.

இசை நாடக நடிகனால் பாடப்படும் பாடல்கள் கட்புலப்பட்டதாக இருக்கும். அவன் அணிந்துள்ள வேடப்புனைவு அவனை பாத்திரமாக நிற்கவைத்துவிடும். அதுதவிர, அவன் தாங்கும் பாத்திரத்தின் உணர்வு, ஏனைய பாத்திரங்களினூடாக தொடர்புபடுகின்றது. எதிர்வினைகள், நாடக இயக்கத்திற்குரிய கதைப் பொருளின் நகர்வுகள், அவற்றுக்குரிய அவனது வெளிப்பாடுகள், அவன் செய்யும் செயல்கள், அசைவுகள் அனைத்தும் அவன்பாடுவதைக் கட்புலப் படுத்தப்படும். அவன் பாடுவதற்காய் பாடாமல் நடிப்பதற்காகத்தான் பாடுவான் பரதர்கூறுகின்ற பாவம், அனுபாவம், வியபிசாரபாவம் என்ற படிமுறையில் ரஸ உணர்வின் உந்துதலை நோக்கி அவனது செயல் இயக்கம் நகரும், நாடகத்தின் ரஸ வெளிப்பாடுகளை நடிகன் பாடுவதாலும் - நடித்தலாலும் ஊட்டுவசனங்களாலும் மேற்கொள்ளும் போது அங்கே நடித்தலும் பாடுதலும் இரண்டுபடாது இணைந்து அழகு செய்வதைக் காணலாம் பார்ப்போரும் இரண்டின் இணைவினாலும் ஈர்ப்புப் பெற்று ரஸ அனுபவத்தைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.

எனவே இசைநாடகத்தில் நடிகன் நல்ல பாடகனாகவும் அதேவேளை நல்ல நடிகனாகவும் இருக்க வேண்டும். அவனுக்கு நடிப்பும் பயிர்ச்சியுடன் இசைப்பயிற்சியும் இருக்க வேண்டும். தமிழகத்தின் பிரபல இசை நாடக நடிகர்கள் பிரபல சங்கீத வித்துவான்களாகவும் இருந்தார்கள். உதாரணமாக எஸ்.ஜி.கிட்டப்பா, கே.பி.சுந்தராம்பாள், தியாகராஜ பாகவதர் போன்றோரைக் குறிப்பிடலாம். கர்நாடக சங்கீதத்தை முறையாகக் கற்றவர்கள். இந்த இசையின் வரம்புக்குள் நின்று நடிப்பின் விகசிப்புக்களை நிகழ்த்த முடியும். சங்கரதாஸ் சுவாமிகள் போயிஸ் (Boys) நாடகசபா மூலம் நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்றும் போது, சிறுவர்களை தனது சபாவில் இணைத்து அவர்களுக்கு சங்கீதப் பயிற்சியும் நடிப்புப் பயிற்சியும் அளித்த பின்பே இணைத்துக் கொண்டார்.

நடிகன் பாடி நடிக்கும் போது பாத்திர இயல்புகள் உணர்வுகளுக்கு ஏற்றபடி குரலின் தொனியை மாற்றிப் பாடுதல் இடம் பெறும். யமதர்மனாக நடிப்பவர் தமது குரல் வெளிப்பாட்டில் கனதியான தன்மையுடன் பாடுதல் வேண்டும். அப்போது தமது அடிவயிற்று ஒலியை பயன்படுத்துதல் வேண்டும். ஸ்திரிப்பாத்திரத்தை ஏற்று நடிக்கும் ஆண் நடிகர்கள் நாசியை அடிப்படையாகக் கொண்டு குரலை வெளிப்படுத்தும் போது பெண்ணுக்குரிய மென்மைத்தன்மை வெளிப்படும். உச்ச சுருதியில் நின்றுதான் பாட வேண்டும். சிலவேளைகளில் பாத்திரங்களுக்கிடையே வரும் மோதுகையின் போது இசைப்போட்டியே மேடையில் நடைபெறுவதுண்டு. ஒரு இராகத்துள் பாடும் நடிகன் தன்னுணர்வுக்குட்பட்டு ஒரு ராகத்திலிருந்து இன்னொரு ராகத்திற்குள் சஞ்சரித்து மீளவும் அந்த ராகத்துக்குள் திரும்பும் தன்மைகள் கூட ஏற்படுவதுண்டு.

**4. அசைவுகள் :-**

இசைநாடக நடிப்பில் அசைவுகள் முக்கிய இடம் பெறுகின்றன. பெரும்பாலும் மனோரதியப் பண்பினையும் மிகைப்பாட்டுப் பண்பினையும் கொண்ட நாடக முறைமைகளை ஒத்தவகையிலே அமைந்திருப்பதைக் காணலாம். மேடையின் ஒரு கரையிலிருந்து 45 பாகை சரிவில் பாடிக் கொண்டு வந்து பார்வையாளரைப் பார்த்துப் பாடுதலும், பாடும்போது கை அசைவுகள், நிலைகள், மாத்திரைகள், பாவங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தலும் பாடலிற்கிடையே வரும் இடை இசைக்கு வேகமாக அசைவுகளைச் செய்து மீளவும் நிலைக்குத் திரும்பிப் பாடுவதும் இடம் பெறுவதைக் காணலாம். அசைவுகள் பெரும்பாலும் நேர்கோட்டு அசைவுகளாயும் முக்கோண அசைவுகளாயும், பா வடிவ அசைவுகளாகவும் காணப்படுகின்றன. உதாரணமாக 'ஸ்ரீ வள்ளி' நாடகத்தில் வள்ளி தினைப்புலம் காத்தல் 'மயான காண்டத்தில்' அயலாத்துப் பிள்ளைகள் தெர்ப்பை கொய்தல் போன்ற சம்பவ அசைவுகளைக் குறிப்பிடலாம்.

அசைவுகளை இரண்டு வகையில் வகைப்படுத்திக் கூறலாம். ஒன்று நோக்குடைய அசைவு மற்றையது நோக்கற்ற அசைவு இடை இசையின் போது பெரும்பாலும் நோக்கற்ற அசைவுகளே காணப்படும். ஆனால் பாடும் போதும் பேசும் போதும். நோக்குடைய அசைவுகளே மேற்கொள்ளப்படும். அசைவுகளின் இயல்புகளும் பாடல்களின் உணர்ச்சி ஆரோகணங்களுடன் இணைந்து அசையும் தன்மைகளைக் கொண்டிருந்தன.

இசை நாடகத்தில் ஆடல் அசைவுகளின் பங்கு மிகவும் குறைவாகவே காணப்பட்டன. சில பாத்திரங்கசள் ஆடலுடன் தோன்றியும் உள்ளன. உதாரணமாக பெண்பாத்திரங்கள், நகைச்சுவைப்பாத்திரங்கள் வரும்போது ஆடி வருவதைக் காணலாம்.

**5. நிலைகள் :**

இசை நாடக நடிப்பில் நடிகனின் நிலைகளும் மிகவும் முக்கியமானதாகக் கணிக்கப்பட்டன. நடிகன் பாடும் போது குறிப்பாக, நின்றுபாடும் போது உடலை வைத்திருக்க வேண்டிய நிலைகள் அந்தக் கதாபாத்திரத்தின் கவர்ச்சிக்குக் காரணமாக இருந்துள்ளன. தம்மை உணர்ச்சிகளுக்கு ஆட்படுத்தி பாடல்களை பாடும்போது அதற்குரிய உணர்ச்சி நிலைகளுக்கு நடிகன் வித்திடுவான். உதாரணமாக மயானகாண்டம் நாடகத்தில் V.V.வைரமுத்து 'யார்போய்ச் சொல்லுவார்...' எனும் பாடலில் கையில் கோலுடன் பாடலின் ஆரோகணத்துக்கு ஏற்ப 'விதியே உனக்கொரு முடிவில்லையா' என்ற வரிகளைப் பாடும்போது முன்காலை சற்றுமடக்கி 45 பாகை சரிவில் நின்று உடலை முன்தள்ளி கையை உயர்த்தி பாடும் நிலையைக் குறிப்பிடலாம்.

பெண்வேடமிடும் ஆண் நடிகர்கள் சில நிலைகளைத் தொடர்ந்து பேணுவதற்கூடாகவே தமது பாத்திரத்தைத் தக்கவைத்துக் கொள்வார். உதாரணமாக வெட்கப்படும் போது கால்களை அருகருகே நேராக வைத்து நின்றுகொண்டு வலது கைவிரலை கன்னத்தில் வைத்து இடது கையை இடுப்பில் கட்டி நளினத்துடன் நின்று பாடுவர்.

எனவே இசை நாடகம் பாடலினால் நடிக்கும் இயல்பைக் கொண்டிருந்தாலும் அப்பாடல்களின் இசைக் கலைத்துவம் குறையாமல் உணர்வு கலையாமல் நின்று பாடல் பாடப்படும் போது நடிகன் தனது நிலைகளால் தன் கதாபாத்திரத்தை கவர்ச்சியும்,





இயல்பும் உடையதாக ஆக்கிக் கொள்கின்றான்.

**6. ஊட்டு வசனங்கள் :**

இசை நாடகத்தில் உரையாடல் யாவும் பெரும்பாலும் பாடலிலேயே அமைந்திருக்கும். எனினும் பாடல்களிடையே கருத்தைத் தெளிவு படுத்தவும் இசையின் உணர்ச்சிக் கணங்களில் நம்மை ஆறுதல் படுத்தவும் உணர்வுகளை அதிகமாகவும் நடிப்பை இலகுவாக்கவும் ஊட்டு வசனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வசனங்கள் உச்சரிக்கப்படும் முறையிலும் பாடலோடு அவ்வசனங்கள் பொருந்தி வருகின்ற தன்மையில் நடிப்பை இலகுவாக்கவும் ஊட்டு வசனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வசனங்கள் உச்சரிக்கப்படும் முறையிலும் பாடலோடு அவ்வசனங்கள் பொருந்தி வருகின்ற தன்மையிலும் அதன் முக்கியத்துவம் அடங்கி நிற்கும் அத்தோடு இவ்வூட்டு வசனங்கள் பெரும்பாலும் பிரதிகளில் எழுதப்படுவதில்லை மேடையில் நடிகனாலேயே பதிலளித்தல் செய்யப்படுகின்றன. எனவே நடிகன் மேடைக்கேற்பவும் தேவைக்கேற்பவும் வசனங்களை உருவாக்கிச் செல்லவேண்டிய தேவையும் ஏற்படுகின்றது.

நாடகக் களத்தில் தனது உணர்ச்சிப் பிரவாகத்துக்குள் நின்று தனக்கான வசனங்களை பேசுகின்றான். ஒரு சுருதித்தளத்தில் நின்று பாடிவிட்டு இன்னொரு சுருதியில் வசனம் பேசி மீளவும் அந்தச் சுருதிக்குச் சென்று பாடுவதென்பது கடினமானது. நீண்ட பயிற்சிகளுக்கூடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. "பாலர் சபை" இசை நாடகங்கள் பற்றிக் குறிப்பிடும் முனைவர் இரவீந்திரன் "இசைப்பாடல்களைப் பாடி நிறுத்திப் பின் வசனம் பேசிவிட்டு மீண்டும் அப்பாடலின் சரணத்தை சுருதி பிசகாது பாட வேண்டி வரும். தொடர்ச்சியான பயிற்ச்சி இருந்தாலொழிய இம் முறையில் பாடுவது மிகுந்த கடினமாகும். இப்பயிற்சி ஆசிரியர்கள் அந்தப் பாடலை பயிற்சி கொடுத்து பாலுக்கேற்ற நடிப்பையும் பாடல் மேடையில் ஆக்கிரமிக்கும் விதத்தையும் எடுத்துக்கூறி பயிற்சியளிப்பர்". என்று கூறுகின்றார் இசை நாடக நடிப்பின் அழகியலை மேலும் மெரு கூட்டி நிற்கின்றன என்று கூறின் மிகையில்லை.

**7. முகபாவங்கள் :**

நாட்டியசாஸ்திரம், நடிகனிடம் பாவமும் பார்ப்போனிடத்தே ரஸமும் ஏற்படுகின்றது என்கின்றது இதே போன்றுதான் இசை நாடக நடிகனிடத்தே பாவம் வெளிப்படுத்தப்படுகின்றது. பாவத்தினை நாம் முகத்திலே வெளிப்படுத்தப்படுவதினால் முகபாவம் என்று குறிப்பிடப்படலாயிற்று நடிகன் பாத்திரத்தை வெளிக்கொணரும் முக்கிய உறுப்பாக முகமும் கண்ணும் அமைகின்றன. பாத்திரங்களின் மன உணர்வுகளை இசைநாடக நடிகன் தன் முகத்தினால் சீராக வெளிப்படுத்த வேண்டும். பாடிக் கொண்டே முகபாவம் சித்திரிக்கப்படுவது மிகவும் கடினமானது அதாவது உச்சஸ்தாயியில் நடிகன் பாடும் போது அவன் குரலை உயர்த்தும் போது முகம் கோலம், கெட்டுப் போவதும் உண்டு எனவே அந்தச் சுருதியில் பாடிக்கொண்டே முகத்தினை உரிய பாவத்தில் வைத்துக் கொள்வது என்பது மிகவும் சிரமமான காரியம் ஆகும். இவ் விடயம் பற்றிக் குறிப்பிடும் S.நாகராஜபாகவதர் பின்வருமாறு கூறுகின்றார். "நாடகங்களில் பாடும் முறை" என்னும் ஒரு பயிற்ச்சியும் கொடுக்கப்பட்டது. இம் முறை அங்க நயத்தோடு பாடும் முறையெல்லாம் கடுமையான உச்சஸ்தாயில் அமைந்த பாடல்களைப் பாடும் போது கண்மூடி வாயை நெளித்து உயர்த்தி அங்க அசைவுகளுடன் பாடவேண்டிய நிலை ஏற்படுவதுண்டு. அப்படி அங்க அசைவுகளுடன் பாடினால் தரித்துள்ள அந்த வேடத்திற்கு ஏற்றபடி முகபாவம் இல்லாது போய்விடும். அதற்காகப் "பாலர் சபையில்" நிலைக்

கண்ணாடி முன்நின்று பாடலுக்குத் தக்கபடி முகத்தில் உணர்ச்சிகளைக் காண்பிக்கச் செய்து அழுதுகொண்டு பாடும் பயிற்சியும் கொடுக்கப்பட்டது. அவ்வாறு பாடி நடிக்கும் போதே பார்ப்போனிடத்தே ரஸ உணர்வைத் தோற்றுவிக்க முடியும்.

**8. இசைநாடக நடிகர்கள் :**

இந் நாடக வடிவத்தை நடிப்பதற்கென்று இந்தியாவில் கொம்பனிகள் பல உருவாகி சிறுவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தொடர்ச்சியான நீண்ட பயிற்சிகள் வழங்கி பின்னர் நாடகங்களில் இணைத்துக் கொண்டனர். இவர்களுக்கு வேதனம் வழங்கினர். இதன் காரணமாக இந்நாடக மரபில் தொழில் முறைக் கலைஞர்கள் தோன்றலாயினர். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் கர்நாடக சங்கீதத்தில் விற்பன்னர்களாயிருந்த கலைஞர்கள் இசைநாடகத்தின் நடிகர்களானார்கள். இதனால் இந் நாடக மரபிற் கென தனித்துவமான இரசிகர் கூட்டம் உருவாகியது. கோவிந்தசாமி பிள்ளை, எஸ்.ஜி. கிட்டப்பா, கே.பி.சுந்தராம்பாள், தியாகராஜபாகவதர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஈழத்தில், தமிழ்நாட்டுக் கலைஞர்களே முதலில் நடித்துவந்தாலும் தொடர்ந்துவந்த காலங்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கலைஞர்கள் இந் நாடக வடிவத்தில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றுக் கொண்டனர். இதன் பேறாக பலர் புகழ் பெற்ற நடிகங்களாயினர். V.V.வைரமுத்து, P.நற்குணம், R.மார்க்கண்டு, M.கோபலரட்ணம், P.அண்ணாசாமி, T.B.செல்வராசா, M.ரத்தினம், V.செல்வரத்தினம், M.தைரியநாதன், M.V.கிருஷ்ணாழ்வார் முதலான பலர் புகழ் பெற்ற நடிகராக விளங்கினர்.

**9. இசைநாடக ஆசிரியர்கள் :**

இந் நாடக வடிவங்கள் தமிழில் இந்திய (தமிழ்நாட்டு) கவிஞர்களே பெரும்பாலும் எழுதினர். இவர்களுள் முதலாமவர் தவத்திருசங்கரதாஸ் சுவாமிகள் ஆவார். இவர் நாடகத்தின் தலைமை ஆசிரியர் என விதந்து பேசப்படுகின்றார். இவரால் எழுதப்பட்ட நாடகங்கள் "சங்கரதாஸ் சுவாமிகள் நாடகத் திரட்டு" எனும் நூலில் தொகுக்கப்பட்டு நூல்வடிவில் வெளிவந்துள்ளது.

இவரை விட சங்கரலிங்க கவிராயர், அப்பாவுப்பிள்ளை, ஏகை சிவசண்முகம், மதுரகவி பாஸ்கரதாஸ், கோபாலகிருஷ்ண பாரதியார் போன்றோரும் இசைநாடகங்களை எழுதியுள்ளனர். இவை நூலுருவிலும் வெளிவந்துள்ளன.

ஈழத்தைப் பொறுத்தவரையில் புதிய இசை நாடகங்களை யாரும் எழுதியதாக அறிய முடியவில்லை. பெரும்பாலும் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களே ஆற்றுகை செய்யப்பட்டன. இந்நாடகங்களை ஆற்றுகை செய்யும் முறையில் மாற்றங்கள் ஏற்பட்டு வந்ததன் காரணமாகவும் ஊட்டு வசனங்களை நடிகர்கள் தாமே இணைத்துக் கொண்டதன் காரணமாகவும் நாடக எழுத்துருவைப் பொறுத்தவரையில் வேறுபாடு காணப்படுவதனைக் காணலாம். இதனை செல்லையா மற்றாஸ்மெயில் தொகுத்து வெளியிட்ட "இசைநாடகங்கள் ஒன்பது" என்ற நாடக நூலிலிருந்து நாம் அறியலாம். குறிப்பாக ஊட்டுவசனங்கள் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம். அரிச்சந்திர மயான காண்டம், வள்ளி திருமணம், சத்தியவான் சாவித்திரி, நந்தனார், முதலான நாடகங்களை நாடுமுழுவதும் அரங்கேற்றி வந்தமையைக் காணலாம்.





**10. இசை நாடகங்களின் இன்றைய நிலை :-**

இசை நாடகங்களின் ஆற்றுகையினைப் பொறுத்தவரையில் தனது செல்வாக்கினை இழந்து நிற்கின்றதென்றே கூறவேண்டும். விஞ்ஞான தொழில் நுட்ப, இலத்திரனியல் யுகத்தில் வாழும் நாம் பெரும்பாலும் அவற்றின் தாக்கங்களுக்கும் ஆட்பட்டு புதிய புதிய ஊடகங்கள் வாயிலாக புதிய புதிய கலைவடிவங்களுக்கும் பழக்கப் பட்டவர்களாகிவிட்டோம். இதன் காரணமாக இசை நாடக ஆற்றுகைகள் மிகவும் அரிதாகவே இடம் பெறுகின்றன. சினிமா தொலைக்காட்சி என்பவற்றில் மூழ்கியிருக்கும் ரசிகர்களைத் திருப்திப்படுத்தும் அளவுக்கு இசை நாடக நடிகர்கள் தம்மை வளம் படுத்துவதுடன் புதிய மாற்றங்களுடன் ஆற்றுகைகளை மேற் கொள்வதன் மூலமே தக்க வைத்துக் கொள்ளலாம்.

பாடசாலைகள் தோறும் குறு நாடக ஆற்றுகைகளாக இடம் பெற்றுவருவதும், மரபு வழி இசை நாடகப் போட்டிக்காக தயாரிக்கப்பட்டு அரங்கேற்றுவதன் மூலமும் இந் நாடக வடிவம் ஈழத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் புதிய நாடகப் பிரதிகள் பல தோன்றவும் காலாகின்றன. இசை நாடகத்தில் தேர்ச்சி பெற்ற சில நடிகர்கள் இசை நாடகத்தினை முழுமையாக ஆற்றுகை செய்யாது அதன் காட்சிகளை ஓர் இரு நடிகர்களைக் கொண்டு நடித்துக் காட்டுவதும் உண்டு.

அதேவேளை இசை நாடகம் தொடர்பான களப்பயிற்சிகளையும் நவீன நாடகங்களையும் கற்றுக் கொண்ட நாடக அரங்கியல் துறை மாணவர்கள் நடத்துவதும் உண்டு.பல்கலைக் கழகத்தில் இசை நாடகம் தொடர்பான ஆய்வுகளை நடத்துவதும் அதன் சிறப்புக்களை அறிவதும் இடம் பெறுகின்றது. சில பரிசோதனை முயற்சிகளும் இடம் பெற்று வருகின்றது. ஒலிப் பேழைகளில் இசை நாடகங்கள் சிலவற்றை ஒளிப்பதிவு செய்து வைப்பதும் தொலைக் காட்சி ஊடகங்களூடாக அதனை ஒளிபரப்புச் செய்வதுடன் இவை நின்றும் விடுகின்றன.

அரங்கியல் சார்ந்த நிறுவனங்கள் சில இசை நாடகங்களை ஆற்றுகை செய்வதும் அவற்றைப் பேணும் முயற்சியிலும் ஈடுபட்டு உழைக்கின்றன. அந்தவகையில் ஈழத்தில் பாரம்பரிய மேம்பாட்டுக் கழகம், திருமறைக் கலாமன்றம் அரியாலையூர் நாடக மன்றம், இணுவில் இளந்தொண்டர் சபை முதலான பல நிறுவனங்கள் இதற்காக உழைக்கின்றன.

**உசாத்துணை நூல்கள்**


1. ஈழத்து இசைநாடக வரலாறு
காரை.செ.சுந்தரம்பிள்ளை
2. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்
காரை.செ.சுந்தரம்பிள்ளை
3. இசைநாடகக் கூத்து மூத்த கலைஞர் வரலாறு
செல்லையா மெற்றாஸ்மயில் - 1999
4. இலங்கைத் தமிழ் அரங்கு
பேராசிரியர். சி.மௌனகுரு

நேர்காணல்

# தமிழக எழுத்தாளர் தோப்பில் முகமது மீரானுடன் ஒரு சந்திப்பு

- கே.எஸ்.திசைராசா -



**அறிமுகம்**

"கடலோரக் கிராமத்தின் கதை" என்ற நாவல் மூலம் பிரபலமாகிய திருநெல்வேலியைச் சேர்ந்த முகமது மீரான் தொடர்ந்து நாவல் உலகில் மதிக்கத்தக்க ஓர் எழுத்தாளராக திகழ்ந்து வருகிறார். பின் தங்கிய மக்களின் வாழ்க்கையை தமது நாவல்களில் கொண்டுவந்த பெருமைக்குரியவர். நாற்பது ஆண்டுகளாக எழுதிவரும் அவரது நாவல்களை மானுடவியல் நோக்கிலும் சமூகவியல் நோக்கிலும் மொழியியல் நோக்கிலும் பலர் ஆராய்ச்சி செய்து கலாநிதி பட்டம் பெற்றுள்ளனர். முதன் முதலாக இஸ்லாமியருடைய வாழ்க்கையை யதார்த்தமாக தமது எழுத்துக்களில் கொண்டு வந்தவர். 1968ல் முதலாம் சிறுகதையை எழுதியவர். அவரது "சாய்வு நாற்காலி" சாகித்திய மண்டல பரிசு பெற்றது. மேலும் "கூனன் தோப்பு" துறைமுகம் அஞ்சுவன்னம் தெரு போன்ற நாவல்கள் மற்றும் சிறுகதைகள் எழுதினார். மலையாளத்தில் தனது கல்வியை பெற்றுக்கொண்ட தமிழ் எழுத்தாளர்.

தமிழில் எழுதுவது ஆரம்பத்தில் கடினமாக இருந்தது என்கிறார் தென் இந்திய தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் சமூக பொருளாதார பண்பாட்டு விடயங்களை அறிந்து கொள்ள இவர் நாவல்கள் உதவுகின்றன. 200 ஆண்டு கால இச்சமூகத்தின் வரலாற்றை அதன் அசைவியக்கத்தை இவரது நாவல்கள் பதிவு செய்திருந்தன என்கிறார் பேராசிரியர் நு்.மான்.

கன்னியா குமரி மாவட்டத்தின் கடைசிக்கிராமமாகிய தேங்காய் பட்டினத்தில் பிறந்து அவ்வூர் மக்களின் வாழ்க்கை பற்றி எழுதத் தொடங்கினார் முகமது மீரான் "படைப்பாளியின் ஆன்மா நான் பிறந்த மண்ணில் ஊறியுள்ளது. அச் சிறு கிராமம் வழியாக உலகத்தைப் பார்த்தேன். படைப்பாளி பல நூல்களை படிப்படை விட சமூகத்தை, மனித மனங்களை, அவர் தம் அசைவுகளை படிக்க வேண்டும். அப்போதுதான் எமது படைப்புக்களை சதையும் இரத்தமுமாக வீரியத்துடன் உருவாக்க முடியும் என்கிறார் மீரான். கடலோரக் கிராமத்தின் கதை முதலாம் உலகப் போர் காலத்தை ஒட்டியது இரண்டாவது நாவலாகிய துறைமுகம் 2ம் உலகப் போர் காலத்துக் கதை 3வது நாவலாகிய "சாய்வு நாற்காலி" இந்தியா - பாகிஸ்தான் யுத்த காலத்தை ஒட்டியது. (நான்காவது) 4வது நாவல் கூனன் தோப்பு 200 ஆண்டுகால திருவிதாங்கூர் சமஸ்தானம் எப்படி சீரழிந்தது என்பது பற்றி விளக்கியது. 5ம் நாவல் "அஞ்சு வன்னம் தெரு" முஸ்லிம் சமூகத்தின் கருத்து மோதல்களால் எப்படி பின்நோக்கி செல்கிறார்கள் என்பதை சொல்கிறது.





அவர் கடந்த வருடம் இலங்கைக்கு வந்திருந்த போது எடுக்கப்பட்ட நேர்காணலில் ஒரு பகுதி கீழே தரப்படுகிறது.

**01. உங்கள் நாவல்கள் பற்றி சொல்லுங்கள் :-**

கடலோரக் கிராமத்தின் கதை எனும் எனது முதல் நாவல் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் கதையைக் கூறுகின்றது. நான்கு அடுக்குகளாகக் காணப்படும் எமது சமூகத்தின் அடிமட்ட மக்களை பிழிந்தெடுத்து அடாவடித்தனம் பண்ணும் சமூகத்தின் கதையும் அவர்களின் துன்ப நிலையும் அதில் சொல்லப்படுகின்றது. இரண்டாவது நாவல் "துறைமுகம்" பொருளாதார ரீதியாக ஒரு குறிப்பிட்ட மக்களை அடிமைப்படுத்தி வைக்கும் நிலைமையை சித்தரிக்கின்றது. மூன்றாவது நாவல் "சாய்வு நாற்காலி" ஒன்றாய் இருந்த சமூகம் பிளவுபடுவதை வர்க்கப் போராட்டம், வகுப்புக்கலவரம் என்பன தோன்றுவதை எடுத்துக்காட்டுகின்றது. மீனவருக்கும் முஸ்லீம்களுக்கு இடையில் நடந்த பிரச்சினையை பதிவு செய்கின்றது. இன்று வகுப்புக்கலவரம் தேசிய பிரச்சினையாக உள்ளது. எமது ஊரில் நடந்த பிரச்சினையை இதில் எழுதியுள்ளேன். இக் கதையை நாவல் என விமர்சகர்கள் கூறுகின்றனர்.

**02. நாவல் வடிவம் பற்றிய எண்ணக்கரு உங்களுக்கு இருந்ததா?**

ஆரம்பத்தில் இருக்கவில்லை எனது முதல் நாவல் 25 வருடங்களாக எழுத்துப்பிரதியாகவே இருந்தது. தமிழ் நாவல்களை வாசித்திருக்கவில்லை. தமிழ் எழுதப் படிக்க ஆரம்பத்தில் எனக்கு தெரியாது. எனது படிப்பு மலையாளத்திலிருந்தது. அதனால் மலையாள நாவல்களை வாசித்திருதேன். தொடர்ந்து இரு நாவல்களை எழுதியதனால் எழுத்தில் நம்பிக்கை ஏற்பட்டது. ஆரம்பத்தில் பல சிறு கதைகளை எழுதியிருந்தேன். அவை பல முஸ்லிம் பத்திரிகைகளில் வெளிவந்தன.

**03. சாய்வு நாற்காலி பற்றிக் கூறுங்கள் :-**

அன்று முறையான படை இல்லை. இந்திய பாகிஸ்தான் யுத்தக் காலத்தில் இந்நாவல் எழுதினேன். சாய்வு நாற்காலி ஐந்து தலைமுறைக்கதை. முந்திய காலத்தில் யுத்தத்திற்கு கிராமத்து ஆட்களை அழைத்துச் செல்வார்கள். வெற்றி பெற்றபின் மானியம் கொடுப்பர். அத்தோடு தலைப்பாகை, வாள், என்பனவும் கொடுப்பர். மானியம் பெற்ற இச்சமூகம் வேறு உழைப்பு இல்லாததால் தமது சொத்து அழிந்து அன்றாட உணவுக்கே கஷ்டப்படுவர். அது மட்டுமில்லாமல் முந்திய தலைமுறையின் காம உணர்ச்சியும் இரத்தத்தில் தொடரும். தாழ்த்தப்பட்ட மக்கள் உழைத்த பூமி இது. இந்த மக்களிடமிருந்து பிழிந்தெடுத்த பூமி. அது மீண்டும் திரும்பி அந்த மக்களிடமே போய்ச் சேருவதாக ஒரு குறியீடாக இக் கதையை எழுதியுள்ளேன்.

**04. "அஞ்சுவன்னம் தெரு" எனும் தங்கள் சமீபத்திய நாவல் பற்றி....**

எங்கள் சமூகத்திலிருக்கும் மூட நம்பிக்கைகள் காரணமாக மத இயக்கங்கள் மேற்கொள்ளும் அடிபிடியும் அதனால் ஏற்படும் சமூகப் பிளவும், அத்தோடு சமகால தீவிரவாத போக்குகள் காரணமாக அநியாயமாக கைது செய்யப்படும் அப்பாவிகள் என்ற விடயங்களை உள்ளடக்கி எழுதப்பட்டுள்ளது. பள்ளிவாசல்களை விட வீடு உயரக்கூடாது. என்கின்ற நம்பிக்கை என்பவற்றை கேள்விக்குள்ளாக்கியுள்ளேன்.

**05. தனிப்பட்ட ரீதியில் நாவல் எழுதியதால் தாங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள்**

அப்துல் ஜபார் மற்றும் அசன் எழுதிய நாவல்கள் மக்கள் நம்பிய வடிவத்திலிருந்தன. ஆனால் அவர்கள் சொன்ன மொழியை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை புனிதம் எனது நம்பியவற்றை நான் தாக்கி எழுதினேன். முதலாளி மற்றும் உயர் நிலையிலுள்ளவர்களை எதிர்த்து எழுதியதால் எனக்கு எதிர்பிருந்தது.

**06. கல்வியுலகில் வரவேற்பு எப்படி?**

முஸ்லிம்கள் சுயநலத்துடன் பார்த்தனர். மரபை மாற்றியெழுதுகிறேன் என எதிர்த்தனர். தாங்கள் நினைத்தது தான் இஸ்லாம் என மூட நம்பிக்கையுடன் என நூல்களை வாசிக்காமல் எதிர்த்தனர். நான் ஒரு முஸ்லிம் எழுத்தாளர் அல்ல என இலங்கையில் கூட ஒரு சஞ்சிகையில் எழுதினர்.

**07. எப்படி உங்கள் எழுத்தை அடையாளப்படுத்துவீர்கள்?**

எனது எழுத்துகளுக்கு ஜாதி, மதம் கிடையாது ஆனால் தனிப்பட்ட மீரானுக்கு தாய், தந்தை, உற்றார் என உலகமுண்டு.

**08. வைக்கம் முஹமது பஷீர் எனும் மலையாள நாவலாசிரியரின் எழுத்துக்கள்..**

அவை சமூகக் கண்ணாடியாகவே உள்ளன.

**09. தாங்களது தொழில் சார்ந்த அனுபவங்கள்?**

எனது தொழில் வியாபாரம். செத்தல் மிளகாய் போன்ற பொருட்களை வாங்கி விற்பேன். வியாபார அனுபவங்களை சிறு கதைகளாக எழுதுவேன். ஒரு சிறு கதைக்கு 1500 ருபா தருவார்கள். எனது முதல் நாவல் பிரபலமாகி மூன்று பதிப்புகளைக் கண்டது. அதற்கான ஊதியத்தையும், நான் பெற்றுக் கொண்டேன். தேசிய சாகித்ய அக்கடமி எனது நூல்களை வாங்கி இந்திய மொழிகள் மற்றும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளது. ஜேர்மன் மொழியிலும் வெளிவந்தது.

**10. பிள்ளைகளின் வாசிப்பு ஆர்வம் எப்படி?**

அவர்களுக்கு ஆர்வம் உண்டு ஆயினும் தங்கள் தொழில்களோடுதான் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆர்வமாக உள்ளனர்.

**11. தங்கள் ஊரில் தங்கள் எழுத்துப் பற்றிய அறிவு உண்டா?**

நாட்டிலும் உலகத்திலும் என்னையறிந்த அளவற்கு ஊரவர்கள் அறிந்து கொள்ளவில்லை. உள்ளூர்க் கல்லூரிகளிலோ, மாநாடுகளிலோ அழைப்பு இல்லை.

**12. எதிர்கால திட்டங்கள்...**

ஆரம்பத்தில் தமிழ் எழுத்து பரிச்சயமின்மையால் ஒருவரை வைத்து எழுதினேன் இப்போது நானே எழுதுகின்றேன். எனவே தொடர்ந்தும் எழுதுவேன்.

நன்றி





# சிறகொடிந்த அன்றில்

- இளையநம்பி, கள்ளிக்கும் -

நெஞ்சோடு
மோதும் காற்றே!
உயிரோடு
வாழும் மூச்சே!
என் ஜீவன்
பாடும் ராகம்
கேளாயோ!
என் சோக கதையை
கொஞ்சம் கேளாயோ!

மழையோடு
இடியும் சேர
கரையோடு
அலைகள் மோத
கடலுள்ளே
மூழ்கும் தீவாய்
ஆனேனே - இன்று
புயலுள்ளே வாழும்
பூவைப் போலானேனே
அன்பு கொள்ள
யாரும் இல்லை

அமுதூட்ட அன்னை இல்லை
செந்நீரைத் தூவும்
மேகம் போலானேனே - இன்று
கண்ணீரில் நீந்தும்
மீனாய் ஆனேனே.

பொன்னந்தி மாலை
பூஞ்சோலை மீது
பனிக்காற்று வந்து
புயலாக வீச
எந்தன் வாழ்க்கையோ
மூழ்குதே கண்ணீரிலே - இந்த
வேதனை தீருமா வாழ்விலே-

மாஞ்சோலைத்
தோப்பில் வாழும்
சிங்காரக் குயிலே நீயும்
என் சோகக்
கதையைக் கேட்டு
உலகெல்லாம் பாடாயோ




**வவுனியா வைத்தியசாலைக்கு வட்டத்தின் அன்பளிப்பு**

**தமிழ்நாடு கலைஇலக்கியப் பெருமன்றமும் நியூசெஞ்சரி புத்தக நிறுவனமும் இணைந்து நடாத்திய சர்வதேச இலக்கியப் போட்டியில் தமிழ்மணி அகளங்கன் அவர்களின் கங்கையின் மைந்தன் நாடக நூல் பரிசு பெற்றதற்கான**

# வாழ்த்துப்பா

சிவநெறிப் புரவலர், சி.ஏ.இராமஸ்வாமி.

புவியினில் உயர்வு கிடைப்பதுடன்
புந்தியில் நினைத்தது கிடைக்குமென்று
நவையறு நூலது சொன்னதுபோல்
நடந்தது அவர்தம் வாழ்க்கையிலே.
அவைதனில் தலைமை தனை அடைந்தார்,
அரும்புகழ் தானும் அவர்பெற்றார்.
இவைகள் கந்தப் புராணப்பயன்
என்பதை நானும் உணர்ந்துகொண்டேன்.

அன்னை தந்தை ஆசிபெற்ற
அருமைப் புதல்வன் தான்இவராம்.
தன்னைத் தமிழ்க்கே உரித்தாக்கி
தக்கன வெல்லாம் படைத்தவராம்.
வன்னி யிலேஉயர் வானவராம்.
வரலாறு தன்னைப் படைத்துவிட்டார்.
என்னைக் கவிதை எழுதவைத்து
இன்பம் மிகவே கண்டவராம்.

கந்தப் புராணக் கருவூலத்தின்
கருத்தினைச் சொன்ன காரணத்தால்
அந்த இடர்கள் எவைஒன்றும்
அடித்து நொருக்கிட முடியவில்லை.
நந்தம் புராணம் நமைக்காக்கும்
நம்பிக்கை வெற்றி தந்ததன்றோ.
சொந்தப் பிள்ளைகள் சுகமடைந்து
சோகம் தனையும் தவிர்த்துவிட்டார்.

பம்பை மடுவாம் அவ்வூரின்
பெரியவர் நாகலிங்கம் என்பார்.
அன்பைப் பொழிந்து அவர்வளர்த்த
அருமை மக்கள் அவர்களுள்ளே
தொன்மை நூலின் பொருளதனை
உணர்ந்து கற்றார் **அகளங்கன்**
இம்மைப் பயனும் அவர்பெற்றார்
அம்மைப் பயனும் அதுபோலே.







# குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்

**- கவிஞர் அகளங்கன் -**

மாமரத்தின் கிளைகளிலே மந்தியினந் தாவி
மாங்கனிகள் பறித்துண்டு மகிழ்ந்துவிளை யாடும்.
பூமரத்தின் இலைகளிலே வண்டினங்கள் மோதிப்
புதுமலர்கள் கோதிநறு மதுவருந்தி யாடும்.
பாமரத்தின் பாட்டிசைத்துப் பசுங்குயில்கள் கூவிப்
பசுங்கிளிகள், புளகமுறப் பருவஇரை தேடும்.
சாமரத்தின் ஒப்பாகச் சிறகடித்துக் கூடிச்
சதுராடும் மயில்களெனைக் கவிபாட வைக்கும்.
(சாமரம் - சாமரை)

தென்றலிலே அசைந்தாடும் செந்நெல்வயற் கதிர்கள்.
தேனருவி எனவழியும் ஏருழவன் வியர்வை:
குன்றெனவே நிமிர்ந்தோங்கிக் குதூகலிக்கும் தோள்கள்,
குணக்குன்றாய் உழைத்துண்ணும் குலவிளக்காம் மனிதன்;
முன்றலிலே மண்ணளைந்து முழங்காலில் தவழ்ந்து
முத்துதிர நகைசெய்யும் சொத்தாகும் மழலை,
கன்றினது உடல்நக்கிக் கனைக்கின்ற பசுக்கள்
கரைந்தழைத்து இரையுண்ணும் காக்கைகளின் கூட்டம்,

பனிக்கூட்டம் விரட்டிவரும் பகலவனின் வீரம்,
பசிக்கூட்டம் விரட்டிவரும் பண்புமிகு ஈரம்,
கனிக்கூட்டம் அசைந்தாடும் கனிமரத்தின் சோலை,
கருமுகில்கள் தவழவரும் கார்கால மாலை,
தனித்துநின்றும் சத்தியத்தால் தலைநிமிரும் மனிதன்,
தற்பெருமை கொள்ளாது தலைதாழும் அறிஞன்,
இனித்தாலும் கசத்தாலும் இன்முகத்தைக் காட்டும்
இல்லாளின் இயற்கையெழில் என்மனதை வெல்லும்.
(ஈரம் - இரக்கம்)

குஞ்சிருக்கும் கூட்டினுக்கு இரையெடுத்துச் சென்று
குனிந்தலகால் இரையூட்டும் குருவிகளின் பாசம்,
நெஞ்சகத்தை நிறைத்திருக்கும் நிர்மலமாம் வானில்
நிறைமதிதன் துணைவியர்கள் சூழவரும் கோலம்,
பஞ்செனவே திரண்டமுகில் பரவுகின்ற வானில்
பரிதிஒளி வீசியெழும் பரவசமாம் ஜாலம்,
கொஞ்சிமகிழ்ந் தோடிவிளை யாடிவரும் அணில்கள்
கூரையிலே கூடுகட்டல் கோடியழ கன்றோ.

ஓடுகின்ற நீரைஎதிர்த் தோடுகின்ற மீன்கள்,
ஊருகின்ற சிற்றெறும்பின் ஒழுங்குமுறை வாழ்க்கை,
ஆடுகின்ற பூமரங்கள் அசைகின்ற இலைகள்,
அதிகாலை எழுந்துஇரை தேடவரும் பறவை,
மூடுகின்ற இமைக்கடங்கா முழுநிலவு விழிகள்,
முந்தானைச் சேலைகட்டும் செந்தாழம் பூக்கள்,
கூடுகின்ற இயற்கையெழில் குதூகலத்தைத் தருமே
குழந்தையென எனதுமனம் குதித்தாடும் தினமே.

குதித்தோடி வரும்அருவிக் குளிர்நீரின் சுகமும்,
குலைவாழை தலைசாய்த்துக் குனிந்திருக்கும் அழகும்,
சிலிர்த்துடலின் நீரகற்றும் சிறுபறவைச் செயலும்,
சிரித்துவிளை யாடிமகிழ் சிறுமழலைத் தமிழும்,
செழித்தோங்கி வளர்ந்திருக்கும் செந்நெல்வயல் நிலமும்,
செவ்வாம்பல் மலருடுத்த சிற்றமுதக் குளமும்,
களித்துமனம் மகிழவைக்கும், கவலைதனைப் போக்கும்
கண்ணிறைத்து என்மனதைக் கவிபாட வைக்கும்.



*வவுனியா நிகழ்வுகள்*

## மனநல மருத்துவர் எஸ்.சிவதாஸ் அவர்கள் எழுதிய நலமுடன் - நூல் வெளியீடு

மனநலமருத்துவர் எஸ் சிவதாஸ் அவர்களின் 'நலமுடன்' (மூன்றாம் பதிப்பு) எனும் நூல் 21.09.2009 திங்கட் கிழமை காலை 10.00 மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் வெளியீடு செய்துவைக்கப்பட்டது. நயவுரையினை தமிழ்மணி அகளங்கன் அவர்கள் நிகழ்த்தினார்கள். டாக்டர் எஸ்.சிவதாஸ் அவர்கள் தமது ஏற்புரையின் போது பயனுள்ள கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். சில வருமாறு.

எமது மக்கள் நிலத்தைப் போன்றவர்கள். பண்பட்ட நிலத்திலேதான் பயிர் செழிப்பாக வளர முடியும் அவர்கள் பண்படுத்தப்பட வேண்டும். அவர்களை நாம் இழக்க முடியாது. எதிர்மறையான எண்ணங்கள் தான் எமது மக்களை அழித்துள்ளன. களை எது பயிர் எது என்று வித்தியாசம் தெரியவேண்டும் சமூகத்திலே களைகளும் எடுக்கபட்டுள்ளன. அதேபோல் பயிர்களும் களையப்பட்டுள்ளன. எம்மவர் ஒவ்வொருவரும் மனக்காயத்துக்கு உட்பட்டிருக்கிறார்கள். மனக்காயப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் புத்திசாலித்தனமான சமூகம் முட்டாள் தனமான நிலைக்கு வந்ததற்குக் காரணம் என்ன? புத்திசாலிகளைக் கொண்ட சமூகம் மன நலத்துக்காக ஏங்கி நிற்பது கவலை அளிக்கிறது. மக்களின் வலிமை பறிக்கப்பட்டுள்ளது. இந்த சோகநிலைக்கு காரணம் மக்களுக்கு ஆதரவானவர்களும் எதிரானவர்களும் என்று கூறலாம். எம்மவர்களில் பலர் புத்திசாலிகளாக இருந்து தம்மைத் தக்கவைப்பதிலே கருத்துச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். சமூகம் எனும் போது புத்தி ஜீவித்துவத்துடன் சிந்தித்து செயற்பட வேண்டும். புத்திஜீவி காலத்தின் பயன்பாடு. நீண்ட கால நோக்குடையது. தனிமனிதன் சமூகத்தின் ஓர் அங்கம். அவனால் எல்லாவற்றையும் செய்ய முடியாது. '**நலமுடன்**' தனிமனிதனின் நூல் அல்ல அது சமூகம் அளித்த எண்ணக்கருக்களின் தொகுதி சமூகம் முக்கியம்.





*சிறுகதை*

# கொம்பிப் பசு

- பூநகர் பொன்.தில்லைநாதன் -

இன்று கார்த்திகைப் பௌர்ணமி நாள். அத்தோடு தீபத் திருநாளும் கூட நான்கு வருசத்துக்குப் பிறகு இன்று தான் எங்கடை இந்தக் கிராமத்தில் சில வீடுகளிலை செக்கலோடை வளவு முன்றலிலும், பனம் பாத்தியிலும் தோட்டப்பிட்டியிலும், மாட்டுத்தொழுவத்திலும் பிரகாசமான பந்தங்களை அயலவர்கள் ஏற்றி மகிழ்வதை முசுட்டைப்பிட்டி காணியில் அழிந்து போன வீடுகள் அப்படியே சிதைந்து கிடக்க, மீள இடம்பெயர்ந்துவந்து அரசினால் தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தபடியே முருகேசர் அவதானித்தார். கிராமமெங்கும் மின் மினிப்பூச்சிகள் போல ஏற்றிவைக்கப்பட்ட பந்தங்கள் கண்சிமிட்டிக்கொண்டிருந்தன.

"அப்பு எல்லா வீடுகளிலும் பந்தம் கொழுத்தி எரியுது நாங்கள் இரண்டு பந்தங்கள் சரி கொழுத்தாட்டி ஊர் என்ன சொல்லும்". எங்கடை நிலையிலை இது தேவையே தம்பி. நாங்கள் எல்லாரும் போரின் கொடுமையைக்காரணம் காட்டி வெளியேற்றப்பட்டோம். என்ரை மனைவி, பிள்ளைகள் உயிரைப் பாதுகாத்திடுவோம். எண்டு உடமைகளையும் தூக்கி வீசியிற்று போனோம். முள்ளிவாய்க்காலிலை எல்லாம் பறிகொடுத்து தனிக்கட்டைகளாய் இங்கை தவிக்கின்றோம். ஒன்றும் அறியாத உன்ரை நடுவிலான் தடுப்பிலையாம் பார்க்க அனுமதி இல்லையாம். இந்த நிலையிலை எங்களுக்கு ஒரு தீபத்திருநாள் போய் உன்ரை வேலையைப் பார்.

கடந்து போன, நடந்து முடிந்து விட்ட அந்தச் சோக சம்பவங்கள் மனைவியையும், மகளையும் கண்முன்னே மண்கிடங்கில் மூடிய அந்த சோக நிகழ்வு. மீண்டும் வந்த படுக்கையில் மரக்கட்டையாய் வீழ்ந்தான் சரவணன். கண்களில் இருந்து கண்ணீர் ஆறாக ஓடி தலை அணை நனைந்தவண்ணம் இருந்தது.

சரவணன் முருகேசுவுக்கு ஒரே மகன் நிறைந்த கமபுலங்களுக்கு உரித்தாளி தன்மனைவி நேசத்தின் சிறப்பான விருந்தோம்பும் பண்போடு கமபுலங்களைச் செய்து சிறப்போடு வாழ்ந்த அந்தக்குடும்பம், போரின் கொடுமையால் சின்னாபின்னப்பட்டு நாடோடியாய் ஆறு மாதங்கள் இடத்துக்கு இடம்மாறி வன்னேரி, கிளிநொச்சி, தர்மபுரம், விசுவமடு, உடையார்கட்டு, சுதந்திரபுரம் என இடம் பெயர்ந்தனர். இறுதியாக முள்ளிவாய்க்காலில் மனைவி, பிள்ளையை மண்ணுக்கு விதையாக்கி தனிக்கட்டைகளாக தகப்பனும், மகனும். மீள்குடியேற்றம் என்ற போர்வையில் ஆசை வார்த்தைகளில் மோசம் போனவர்களாக ஆறுமாதமாகியும் எந்த உதவியும் கிடைக்காத குடும்பப்பட்டியலில் அவனும் ஒருவனாகி வாழத் துடிக்கிறான். வாழ முடியுமா? இவை அவன் முன் எழும் கேள்விகள்.

சற்று முன் நடைபெற்ற சம்பவத்தை கண்ணுக்கெட்டிய தூரத்தில் நடந்ததை பார்த்து வாளா வெட்டியால் இருக்க முடியுமா? நாகதேவன் வறைக்குச் செல்லும் பிரதான வீதியில் பல வீடுகள். சில வீடுகளில் மீளக் குடியேறபவர்கள இருந்தார்கள். கார்த்திகைத் தீபத்திருநாள் அல்லவா. தங்கள் இல்லங்களின் முன் வாழைக்குற்றிகள் நாட்டி கொப்பறாவில் தீச்சுடர்கள் ஏந்தினர். அவை பிரசாகமாக எரிந்து கொண்டிருந்தன. சொற்ப நேரத்தில் அங்கு வந்த மனிதாபிமானம் அற்றோரால் தீபத்திருநாளின் புனிதம்

கெடுக்கப்பட்டது. வாழைக்குற்றிகள் பிடுங்கி வீசப்பட்டன. வீதியில் துண்டம் துண்டமாக வீழ்ந்த கொப்பறாத் துண்டுகள் தம் சக்தி உள்ளவரை எரிந்து கொண்டிருந்தது. இக்காட்சியெல்லாம் சரவணனை ஆயிரம் கேள்விக்கணைகள் மோதிநின்றது.

பௌர்ணமி நிலவு குடலையும் குருத்துமாக இருந்த பயிர்களை தடவிக்கொண்டு மோதும் வாடைக்காற்று ஜில் என்று விறைப்புக் கொட்டியது. உறக்கமும் வருவதாயில்லை.

தெருநாய்களும் தொடர்ந்து அயல் வீட்டு நாய்களும் அட்டகாசமாக குலைத்தன. தூரத்தே உள்ள ஒரு முதியவர் திட்டலும் உரப்பலும் கேட்டது.

விடயத்தைப் புரிந்து கொண்டவர்

"என் அநியாயம் மனிதப்பண்பு கெட்டுப்போச்சு"
நாலுவருசமாய் வெள்ளாண்மை இல்லை
குடலையும் குருத்துமாய் பயிர் கிடக்குது
மாட்டைக் கட்டாமல் விட்டிருக்கினம்
பாழ்படுவார் ஆர் செய்த வேலையோ"

முருகேசர் திட்டல் நின்றது. அதிர்ச்சிக்குள்ளானார். நாலுவருட காலமாக விசுவமடுவில் தவறிவிட்டு பிரிந்து போய் விட்ட கொம்பிப்பசு முருகேசர் அருகில் கதறிக் கதறி அழுதது. அவரை முகர்ந்து, முகர்ந்து நக்கியது. அ..........ம்..........மா.............வு.............ம்..........மா என்ற கதறலுடன் அங்கும் இங்கும் ஓடித் திரிந்தது. பழைய குசினியினுள் ஓடி அட்டகாசம் செய்தது. முருகேசர் பலதசாப்தங்களாக பசுக்கூட்டத்தோடு பரீட்சயமானவர் என்பதால் கொம்பிப்பசுவின் உணர்வைப் புரிந்து கொண்டார். தடவிக் கொடுத்தார். தன் எசமானியம்மாவின் நேசத்தை பார்க்கத் துடிக்கும் வாய் பேசாச்சீவன். அதற்கு ஆறுதல் கூறமுடியுமா? ஒவ்வொரு கன்றுகள் ஈனும் போதும் மூன்று நான்கு நாட்களுக்கு குத்துப்பச்சை அரிசிக் கஞ்சிகாய்ச்சி வைக்கும் தன் எசமானியம்மாவை தேடி அழும் கொம்பிப்பசுவுக்கு ஆறுதல் சொல்ல முடியுமா? இம்முறை கஞ்சி கிடைக்குமா? மனிதப் பண்புகள் அற்றுப் போன இக்கால கட்டத்தில் எங்கள் கொம்பிப்பசு, கோமாதா எங்கள் குலமாதா, நான்கு வருடத்தின் பின்தன் எசமானர்களைப் பார்க்க தன் பிள்ளைகளோடு வந்து சேர்ந்து கொண்ட கதை அதிசயத்தை ஊட்டுவதாய் அமைந்தது.

மறுநாள் தடுப்பில் இருந்த சரவணனின் மகனும் இன்னும் சிலரும் குற்றமற்றவர்களாய் விடுவிக்கப்பட்டு தன் குடும்பத்துடன் இணைந்து கொண்டனர். சரவணனின் மகன் தன்தாயின் கடமைகளை நிறைவேற்றினான். கொம்பிப்பசுவின் எசமானியம்மாவாக செயற்பட்டான். தீபாவளியும் போய் தீபத்திருநாளும் போய் திக்குதிசைதெரியாமல் போகும் வாழ்க்கையில் போய் .........சா........... இனி என்ன? கொம்பிப்பசுபோல நாமும் நமது நன்னாளுக்காக காத்திருக்க வேண்டுமா?





# வட்டநிகழ்வுப் பதிவுகள் 2010

புலம்பெயர் எழுத்தாளர் லெ.முருகபூபதியுடன் ஒரு சந்திப்பு - நிகழ்வு 122 (16.01.2010)

நவயுகா குகராஜாவின் உயிர் உடையும் ஓசைகள் கவிதை நூல் வெளியீடு - நிகழ்வு 123 (13.02.2010)

சேமமடுப் பதிப்பகத்தின் நூல் கண்காட்சி - நிகழ்வு 124 (17.02.2010 - 21.02.2010)

வட்டத்தின் பன்னீராண்டு நிறைவு - நிகழ்வு 125 (28.02.2010)

புலம்பெயர் எழுத்தாளர் ஜீவகுமாருடன் ஒரு சந்திப்பு- நிகழ்வு 126 (02.03.2010)

மார்க்ஸ் உடன் சந்திப்பு - நிகழ்வு 127 (12.03.2010)

ஏடு குறும்பட வெளியீடு - நிகழ்வு 128 (29.03.2010)

'களரி' நாடகக் குழுவின் சரண்தாஸ் நாடக மேடையேற்றம் - நிகழ்வு 129 (25.05.2010)

கலாநிதி ந.ரவீந்திரனின் திருக்குறளில் கல்விச்சிந்தனை நூல் வெளியீடு - நிகழ்வு 130 (05.06.2010)

கலாநிதி.கந்தையா ஸ்ரீகணேசன் எழுதிய ஈழத்துக்கலை இலக்கிய உலகு விமர்சனக்கட்டுரைகள் - நூல் வெளியீடு (07.07.2010) - நிகழ்வு 131.

காவலூர் இ.விஜேந்திரனின் ஜனநாயகத்தின் நான்காவது தூண் நூல் வெளியீடு நிகழ்வு 132 (18.07.2010.)

நானம் ஆசிரியருடன் ஒரு சந்திப்பு நிகழ்வு 133 (19.11.2010)

புலம் பெயர் எழுத்தாளர் லெ.முருகபூபதி சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு மத்திய உரை - நிகழ்வு 134 - (19.12.2010)

*பிரதாபனின் பதிவுகள் வட்டநிகழ்வு - 123*

## செல்வி நவயுகா குகராஜாவின் "உயிர் உடையும் ஓசைகள்" கவிதை நூல் வெளியீடு

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் 13.02.2010 சனிக்கிழமை அன்று பிற்பகல் 3.00 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் செல்வி நவயுகா குகராஜா அவர்களது "உயிர் உடையும் ஓசைகள்" கவிதைத் தொகுப்பு நூல் வெளியீடு நடைபெற்றது. இந் நிகழ்விற்கு தமிழறிஞர் தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமை தாங்க, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு.க.பேனாட் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

தலைவர் தனது தலைமை உரையின் போது "வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமானது 1997 பெப்ரவரி மாத முழு நிலா நாளன்று ஆரம்பிக்கப்பட்டு பதின்மூன்றாடுகளைக் கடந்துள்ளது. எமது வட்டமானது வெளியிடும் இருபத்திரெண்டாவது நூலாக இந்நூல் அமைந்துள்ளது. இதுவரை வெளிவந்துள்ள நூல்களில் பத்து நூல்கள் கவிதை நூல்களாக வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது" என்று கூறியதுடன், அந் நூல்கள் பற்றிய விபரத்தையும் குறிப்பிட்டார்.

வெளியீட்டு உரையினை கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள் நிகழ்த்த பிரதமவிருந்தினர் அவர்கள் நூலை வெளியிட்டுவைத்தார். முதற்பிரதியை திரு.T.N.நியூட்டன் (சேவாலங்கா பணிப்பாளர்) பெற அறிமுக உரையினை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திரு.ந.பார்த்திபன் நிகழ்த்தினார். விமர்சன உரையினை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திரு.M.சூசைதாசன் சிறப்புற கவிதைநடையிலே வழங்கி, சபையோரை மகிழ்ச்சிக்குள்ளாக்கினார்.

*பிரதாபனின் பதிவுகள் வட்டநிகழ்வு - 124*

## வவுனியா சேமமடு பொத்தகசாலையின் மாபெரும் புத்தகக் கண்காட்சி

வவுனியா நகரசபை மண்டபத்தில், மாபெரும் புத்தகக் கண்காட்சியை சேமமடு பொத்தகசாலை கடந்த 17.02.2010 தொடக்கம் 21.02.2010 வரை நடாத்தியிருந்தது. இனிய தென்றல் புத்தகசாலையும் இக்கண்காட்சியில் இணைந்து கொண்டது. வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் இக் கண்காட்சி ஒழுங்கமைப்பில் ஒத்துழைத்தமை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு நாட் காலையிலும் இரு பாடசாலை மாணவர் குழுக்கள் அழைக்கப்பட்டு அப்பாடசாலை அதிபர்கள் பிரதமவிருந்தினர்களாக கௌரவிக்கப்பட்டனர். நாள்தோறும் வாசிப்பின் மகிமையை தமிழ்மணி அகளங்கனும் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனும் எடுத்து இயம்பி மாணவர்களுக்கு உற்சாகமூட்டியமை குறிப்பிடத்தக்கது.

20ந் திகதி நடைபெற்ற சேமமடு பதிப்பகத்தின் 50 நூல்கள் அறிமுக நிகழ்விற்கு தமிழறிஞர் தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமைதாங்க பிரதம விருந்தினர்களாக வவுனியா நகரசபைத் தலைவர் திரு.எஸ்.என்.ஜீ.நாதன் அவர்களும், யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் திரு.இ.நந்தகுமார் அவர்களும் கலந்து கொண்டனர்.





சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தேசியகல்வியியற் கல்லூரி பீடாதிபதி திரு.க.பேர்னாட் அவர்களும் முன்னைநாள் பிரதேச செயலாளர் திரு.க.ஐயம்பிள்ளை அவர்களும், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.எஸ்.அன்டன் சோமராசா அவர்களும் கலந்து சிறப்பித்தனர். கௌரவ விருந்தினர்களாக பேராசிரியர் சபா ஜெயராசா மற்றும் அகவிழி, கூடம், ஆறுதல் பிரதம ஆசிரியர் திரு.தெ.மதுசூதனன் ஆகியோர் கலந்து கொண்டார்.

வரவேற்பு உரையினை வவுனியா புதுக்குளம் ம.வி அதிபர் திரு.த.அமிர்தலிங்கம் நிகழ்த்தினார். நூல்கள் அறிமுகத்தினை கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன். விரிவுரையாளர், திரு.எஸ்.பரமானந்தம் விரிவுரையாளர், திரு.க.சுவர்ணராஜா ஆகியோர் நிகழ்த்தினார். கலாபூஷணம் திரு.சு.சண்முகவடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் அறிமுக நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.

*பிரதாபனின் பதிவுகள் - வட்ட நிகழ்வு 125*

## வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் "மாருதம் - 10வது இதழ் வெளியீடும், பன்னிரண்டு ஆண்டு நிறைவு விழாவும்

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் "மாருதம், பத்தாவது இதழ் வெளியீடும், பன்னிரெண்டு ஆண்டு நிறைவு விழாவும், கடந்த 28.02.2010 ஞாயிறு மாலை 4.00 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. தமிழறிஞர் தமிழ்மணி அகளங்கன் அவர்கள், இந்நிகழ்விற்குத் தலைமைதாங்க வவுனியா பிரதேச செயலாளர் திரு.அ.சிவபாலசுந்தரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

அண்மையில் அமரத்துவமடைந்த, அமரர் கவியெழில் கண்ணையா அவர்கள் பற்றிய அஞ்சலி உரையினை, வவுனியா பிரதேச செயலக இளைப்பாறிய கணக்கு உதவியாளர்.திரு.நா.தியாகராசா அவர்கள் நிகழ்த்தினார். அமரர் கலா இரசிகன் க.ரணேஷ் அவர்கள் பற்றிய அஞ்சலி உரையினை, மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் திரு.த.தனசீலன் அவர்கள் நிகழ்த்தினார்.

இதனையடுத்து 'மாருதம்' சஞ்சிகை வெளியீடும் பிரதம விருந்தினர் உரையும் இடம்பெற்றன. அறிமுக உரையினை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திரு.பொ.சத்தியநாதன் அவர்கள் நிகழ்த்தினார்.

*பிரதாபனின் பதிவுகள் - வட்டநிகழ்வு - 128*

## "ஏடு" குறுந்திரைப்பட வெளியீட்டு நிகழ்வு –128

- த.பிரதாபன் வவுனியா -

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஆதரவுடன், வவுனியூர் இரா.உதயணன் அவர்களது தயாரிப்பில் உருவான "ஏடு" குறுந்திரைப்படம் 29.03.2010 திங்கட் கிழமை, வவுனியா நகரசபை மண்டபத்திலே வெளியிடப்பட்டது.

இக் குறுந்திரைப்படத்தின் கதை-வசனத்தை திரு.த.தவயோகன்

எழுத.திரு.சு.வினோத் இயக்கியிருந்தார். தொழில்நுட்ப உதவிகளையும் இசையையும் திரு.கேதீஸ்வரன் வழங்க, கலைநிலாக் குழுவினர் இப்படத்தில் நடித்திருந்தனர். தமிழறிஞர் தமிழ்மணி அகள்ங்கன் அவர்கள் இவ்விழாவிற்கு தலைமை தாங்க, வவுனியா பிரதேச செயலாளர் திரு.அ.சிவபாலசுந்தரன் அவர்கள் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். கௌரவ விருந்தினராக வவுனியா நகரசபை முதல்வர்.திரு.S.N.G நாதன் அவர்கள் கலந்து கொள்ள சிறப்பு விருந்தினர்களாக சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் திரு.நா.சேனாதிராசா சிவநெறிப்புரவலர் C.A இராமஸ்வாமி, அருட்கலை வாரதி சு.சண்முகவடிவேல் திரு.அருணா செல்லத்துரை, திரு.கந்தவனம் ஜெகநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தலைவர் தனது உரையின் போது வவுனியா மண்ணில் முதன்முதலில் வெளிவந்த **"யாழ்தேவி"** எனும் குறும்படம் பற்றிய பல இனிய சம்பவங்களை நினைவூட்டினார். அதுமட்டுமல்லாமல் இற்றைவரை வவுனியா மண்ணில் வெளிவந்துள்ள குறும்படங்களின் பட்டியலையும் சபையோர்க்கு வழங்கினார். "ஏடு" பதினான்காவது குறும்படமாக அமைகிறது. என்று குறுப்பிடப்படுவதுடன் இப்படம் பண்பாட்டுக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. அத்தோடு வன்னியின் எழில் கொஞ்சும் மருத நிலத்தை மிக மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். புலம்பெயர்ந்து வாழும் தமிழ் நெஞ்சங்களைப் பெரிதும் கவர்ந்திழுக்கக் கூடியதாக இப்படம் அமைந்திருக்கிறது. என்று தனது உரையின் போது குறிப்பிட்டிருந்தார்.

அறிமுகவுரையினை யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில போதனை மொழித்துறைத் தலைவர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள் நிகழ்த்த நயவுரையினை வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு.இ.நித்தியானந்தம் அவர்கள் வழங்கினார். இக் குறும்படத்தில் பங்குபற்றிய கலைஞர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

**வட்டத்தின் பன்னீராண்டு நிறைவு நிகழ்வில் பிரதேச செயலர் திரு.அ.சிவபாலசுந்தரன்**







*பிரதாபனின் பதிவுகள் வட்டநிகழ்வு - 126*

# இலக்கியக் கலந்துரையாடல்

-புலம்பெயர் எழுத்தாளர் வி.ஜீவகுமாரனுடன் ஒரு சந்திப்பு-

பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரியில் 02.03.2010 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் இலக்கியக் கலந்துரையாடல் ஒன்று வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு இனிதே ஆரம்பமானது. நிகழ்வை சிறப்பிக்க புலம்பெயர் எழுத்தாளரான திரு.வி.ஜீவகுமாரன் வரவழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் தமிழ்மணி அகளங்கள் அவர்களால் நிகழ்வு இனிதே ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலக்கியவட்ட செயலாளர், யாழ் வளாக ஆங்கில விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களால் ஒழுங்கமைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. விபுலானந்தாக்கல்லூரி நாடகத்துறை ஆசிரியரும் மாணவ மாணவிகளும் ஏற்பாட்டுக்குழுவிற்கு பெரும் ஒத்துழைப்பு வழங்கியதுடன் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

"யாவும் கற்பனையல்ல" என்ற நூல் அறிமுகம் மனிதமனங்களின் அடி ஆழங்களை தொட்டு கற்பனை வானிலிருந்து கீழே இறக்கியது. உண்மை நாம் மறந்துவிட்டதை அந்நூல் மீண்டும் ஞாகப்படுத்தியது, யாழ்ப்பாண மண்வாசனையை சுமந்தவண்மை வெளியாகியிருந்த அவ்வாசிரியரின் நூல்கள் குழுமியிருந்தோரில் நெஞ்சங்களில் சில நிமிடங்கள் வீணைமீட்டின.

எல்லாவற்றையும் விட அந் நிகழ்வின் சிறப்பு சின்னஞ்சிறார்கள் கூட நிஜத்தை புரிந்து கொண்டு உரையாற்ற முனைந்தமை ஆகும். உணர்ச்சி வசப்பட்டு கற்பனையும் நிஜத்தையும் பிரித்து பார்த்து உரையாடிய உயர்தர மாணவி செல்வி.தர்சிகா பேசிய பேச்சு இதற்குச் சான்றாகும்.

எழுத்தாளர் ஜீவகுமாரன் இலக்கியத்தை வெறுமனே இலக்கியமாகக் கருதாமல் அதற்கும் மேலாக ஒருபடி மேற்சென்று தனது ஒவ்வொரு படைப்பிற்கும் உயிர்கொடுத்துள்ளார் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. வாசகன் என்பவன் எப்போது எழுத்தாளனால் ஈர்க்கப்பட்டு படைப்பிற்குள் பிணைக்கப்படுகிறானோ அப்போதே எழுத்தாளன் வெற்றி பெறுகிறான். இவ்வாறான வெற்றியை சில எழுத்தாளர்களே பெற்று பெருமிதம் கொள்கின்றனர். அவர்களுள் திரு.ஜீவகுமாரன் குறிப்பிடத்தக்கவர்.

இவ் ஆசிரியரின் படைப்பாகிய **"வரிச்சு மட்டை வேலிகள்"** சிறுகதை யாதார்த்தமான மிக உருக்கமான படைப்பாகும். சொந்த ஊரைப் பிரியும் ஒவ்வொரு மனிதனும் வெற்றுடலைச் சுமந்தே வேறு தேசம் செல்கிறான் என்பதை இக்கதை மிக உருக்கமாக கண்ணீரோடு சொல்கிறது. சிலுவையைச் சுமந்து யேசுபிரான் எருசலம் நகரவீதியல் சென்றபோது பெண்கள் குழந்தைகள் எல்லாம் தம் நெஞ்சில் அடித்து கதறி அழுதமை, ஆராயாமல் வழங்கிய தீர்ப்பால் கோவலன் கொலையுண்டுள்ளமை, பாம்பு தீண்டி இறந்த தன்மைந்தனை மடியிலே கிடத்தி சந்திரமதி கதறியமை எத்தனை துயரை உலகிற்கு அளித்ததோ அத்தகையதோர் வரலாகிறது சோகத்தை வரிச்சுமட்டை வேலிகள் தாங்கி நிற்கிறது.

யாழ்ப்பாணத் தமிழனின் தலையெழுத்தை டென்மார்க் சுமக்கிறது. எழுத்துருவில் அமைந்திருந்த இக்கதைக்கு நாடகப்பாணியில் அதனை வெளிப்படுத்தி உணர்வுக்கு விருந்தூட்டினார்.

**சங்கானைச் சண்டியன்** சிறுகதைத் தொகுதியில் வெளியாகியுள்ள 'வலி' என்றும் சிறுகதை உண்மையில் வலிக்கிறது. அகதி முகாமில் இருந்து கடத்தப்பட் அருணன் மிருகத்தின் பிடியில் சிக்குண்டு தவிக்க, அவனைத் தேடியலையும் தாத்தாவின் ஏக்க தவிப்பு என்பன கண்களைக் குளமாக்கிறது.


இவ்வாறு ஆசிரியர் ஜீவகுமாரன் அவர்களது ஒவ்வொரு கதையும் உயிர்ப்புடன் மனதைத் தொடுகிறது **'எங்கே போனீர்கள்'** எனும் சிறுகதை தன் நண்பனுக்காய் வரையப்பட்டுள்ளது. பால்ய சிநேகிதர்கள் இருவரின் பிரிவு அவர்கள் கூடி மகிழ்ந்த அந்த பசுமையான காலத்தை அசைபோடவைக்கிறது. ஜீவகுமாரன் 'எங்கே போனீர்கள்' சிறுகதையில் தன்நண்பனைப் பிரிந்து நெடுதூரம் சென்று இயந்திரங்களோடு இயந்திரங்களாக வாழும் தன் சோகத்தை பிழிந்துவிடுகிறார்.

**'யாவும் கற்பனையல்ல மக்கள் மக்களால்... மக்களுக்காக் 'சங்கானைச் சண்டியன்'** ஆகிய முப்பெரும் படைப்புக்களை உயிர்ப்புடன் வழங்கிய ஜீவகுமாரன் அவர்கள் மனமாரப் பாராட்டடப்பட வேண்டியவர். நூலில் இடம்பெறும் கதைகள், கவிதைகள் வெறும் எழுத்துக்களாக இல்லாமல் மேலே போக ஏணியாகவும் கரையைக்கடக்க தோணியாகவும் காயத்தை ஆற்ற மருந்தாகவும் இருப்பது இலக்கியம் பயின்ற எவராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

'வல்லமை தாராயோ, இந்த மானுடம் பயனுற வாழ்வதற்கே என்ற பாரதியின் உயிர்த்துடிப்பை எழுத்தாளர் ஜீவகுமாரனின் வைரவரிகளில் நான் காண்கிறேன்.

இவ்வாறு எழுத்தாளர் ஜீவகுமாரன் படைப்பின் சிறப்பை விபரித்துக் கொண்டே செல்லலாம் அன்றைய நிகழ்வில் இவ்வாறான ஒரு எழுத்தாளனைச் சந்தித்தமை அவருடன் இலக்கியம் தொடர்பாக சுவாரசியமாக கலந்துரையாடிமை என்பன மனதிற்கு நிறைவையும் தமிழிற்கு சிறப்பையும் தருகிறது.

இவ்வாறான ஒரு முக்கோண நிகழ்வை ஏற்படுத்தித் தந்த, ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நெஞ்சங்களுக்கும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்து, தமிழை வாழ்த்தி இப்பகுதியை நிறைவு செய்கின்றேன்.




**வட்டத்தின்**
**வெளியீடு 23**





*பிரதாபனின் பதிவுகள் வவுனியா நிகழ்வுகள்*

## தேசிய சாகித்திய மண்டல விருது பெற்ற (2008) வவுனியூர் இரா.உதயணன் அவர்களுக்கு பராட்டுவிழா

நாவல் இலக்கியத்திற்காக 2008ம் ஆண்டுக்கான தேசிய சாகித்திய மண்டல விருது பெற்ற வவுனியூர் இரா.உதயணன் அவர்களுக்கான பாராட்டும், கௌரவிப்பும் கடந்த 28.03.2010 ஞாயிற்றுக்கிழமை வவுனியா பூந்தோட்ட நரசிம்மர் ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு தமிழறிஞர் அகளங்கள் அவர்கள் தலைமைதாங்க சிறப்பு விருந்தினர்களாக வவுனியா குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ கந்தசாமிக் குருக்கள். வவுனியா நகரபிதா திரு.S.N.G நாதன் திரு.அருணா செல்லத்துரை, முன்னாள் வவுனியா பிரதேச செயலாளர் திரு.க. ஐயம்பிள்ளை, வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் திரு.ந.ஸ்ரீஸ்கந்தராசா Dr.T. முத்துலிங்கம் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் திரு.நா.சேனாதிராசா J.P, வவுனியா இந்து மாமன்றச் செயலளார் திரு.C.A. இராமஸ்வாமி மற்றும் தமிழருவி த.சிவகுமாரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தலைவர் உரையின் போது வவுனியா மண்ணோடு சம்பந்தப்பட்ட ஏழு எழுத்தாளர்கள் தேசிய சாகித்திய மண்டல விருதுகளைப் பெற்றுள்ளனர். எனக் குறிப்பிட்டார். அன்றில் பறவைகளை - வானொலி நாடகத்திற்காக தமிழ்மணி அகளங்கன் வன்னியர் திலகம் - நாவிலிற்காக முல்லைமணி: நந்தியுடையார் - நாடகத்திற்காக அருணா செல்லத்துரை நிதர்சனத்தின் புத்திரர்கள் - நாடகத்திற்காக கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் கந்தகோட்ட மான்மியம் - கவிதை நூலுக்காக கண்டாவளைக் கவிராயர், வாழ்க்கையின் நிறங்கள் - நாவலிற்காக நீ.பி. அருளானந்தம். மற்றும் விதிவரைந்த பாதையிலே நாவலுக்காக லண்டனில் வசித்து வரும் வவுனியூர் இரா.உதயநாராயணன் ஆகியோர் பரிசில்களைப் பெற்றுள்ளானர். விருதுகளைப் பெற்ற நான்கு எழுத்தாளர்கள் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியூர் இரா.உதயண்ன் அவர்கள் எழுதிய **சுருதி பேதமடைகிறது** (நாவல்) விதிவரைந்த பாதையிலே நாவல் நூல் அறுந்த பட்டங்கள் சிறுகதைகள் தொகுப்பு, ஆகிய மூன்று நூல்களும் வெளியிடப்பட்டன.

கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள் தனது உரையின்போது வவுனியூர் இரா.உதயணன் அவர்கள் இலக்கியதுறைக்கு அப்பாற்சென்று சமூக நோக்குக் கொண்டவராகவும் சமூகத்திற்கு உதாரணமாக வாழ்ந்து காட்டும் தொண்டனாகவும் விளங்குகிறார் என்ற பொருள் தொனிக்க உரையாற்றினார்.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்துடன் இணைந்து "ஏடு" எனும் குறுந்திரைபடத்தினைத் தயாரிப்பதற்கான நிதியுதவியை திரு.உதயணன் புரிந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

விழாவிற்கு வருகைதந்திருந்த விருந்தினர்களின் வாழ்த்து உரைகளுடன் விழா இனிதே நிறைவேறியது.

பதிவு 1 மாருதம் – 10 பற்றி

# காத்திரமான இலக்கிய சிற்றேடுகள் வெளிவரவேண்டும்

– தினகரனில் முருகேசு இரவீந்திரன் –

சிற்றேடு வெளியீடு என்பது மிகவும் சிரமமமான பணி. இலக்கியம் ஆர்வம் உள்ள பலரும் இவ்வாறான முயற்சியில் அவ்வப்போது ஈடுபட்டு வந்துள்ளனர். காத்திரமான சிற்றேடுகள் எமது நாட்டில் வெளிவந்திருக்கின்றன. வெளிவந்து கொண்டிருக்கின்றன. பல நல்ல இலக்கிய சிற்றேடுகள் இடைநடுவில் நின்று போயுள்ளன. இவ்வாறு சில இதழ்கள் வெளிவந்த பின் நின்றுபோன சிற்றேடுகளின் எண்ணிக்கை அதிகம் என்றே கூறலாம்.

காகிதாதிகள், அச்சிடுவதற்கான மை போன்றவற்றின் விலை அதிகரிப்பு சிற்றிதழ் வெளியீட்டாளர்களை பெரிதும் பாதிக்கின்றது. இவை மட்டுமல்லாது இன்னும் பல அம்சங்களும் தொடர்ச்சியாக சிற்றிதழ்கள் வெளிவருவதில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவற்றை எல்லாம் வெற்றிகரமாக சமாளித்து வவுனியாவில் இருந்து "**மாருதம்**" சிற்றேடு தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கிறது. "மாருதம்" சஞ்சிகையின் பத்தாவது இதழ் அண்மையில் வெளியாகியிருக்கிறது. இந்த சிற்றேடு சமூக, கல்வி, கலை, இலக்கிய விடயங்களை தாங்கி வெளிவருவதாக சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் "மாருதம்" சஞ்சிகை வெளியிடப்படுகின்றது. பத்தாவது "மாருதம்" இதழின் முகப்பட்டையை மறைந்த கவிஞர் இ.முருகையனின் வர்ணப்படம் அலங்கரிக்கின்றது. **கவிஞர் முருகையன்** என்றதும் வானொலி நேயர்கள் பலருக்கும் உடனே நினைவுக்கு வருவது அவர் இயற்றிய **கங்கையாளே** என்ற மெல்லிசைப்பாடல்தான்.

கவிஞர்.இ.முருகையன் பற்றிய ஓர் அஞ்சலிக் குறிப்பில் பிரக்ஞைபூர்வமான மொழி, விஞ்ஞானப் பார்வை, அறிவுசார்ந்த கவிநயம், பழந்தமிழ்ச் சொற்களும் கலந்து வரும் பேச்சோசை நடை, மரபுப்பா வடிவங்களுடன் புதுமை கலக்கும் கவிதை நயம் எனப் பல பரிமாணங்களுடன் கவிதை படைத்துள்ளவர் என மாருதம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பத்தாவது இதழில் நேர்த்தியான ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. 'திரு.மொழி' என்ற தலைப்பிலே கை.தவலதா எழுதிய கவிதை தமிழின் பெருமையை பேசுகின்றது. நவயுகா குகராஜாவின் "தலைவிதி" மற்றும் தியத்தலாவ எச்.எப்.ரிஸ்னா எழுதிய "என்னை ஆளும் என் தேவதைக்கு" என்ற கவிதை என்பன சிறப்பானவை. இந்த கவிதை இவ்வாறு தொடங்குகிறது.

யுகங்களாய் வருத்தும்
ஒவ்வொரு நிமிடமும்
உன் அன்பினைத் தவிர
ஞாபகங்கள் எதுவுமில்லை!

இன்னும் சிவநெறிப்புரவலர் சி.ஏ.இராமஸ்வாமி எழுதிய "வலையில் பட்டமான்" என்ற கவிதை. முத்துமொழியாளின் "நாமே எமக்கென்றும்", வெலிகம ரிம்ஸா முஹம்மத்தின் "எவரெஸ்ட்" அ.பேனாட்டின் "உரிமை" கயல் வண்ணன் வவுனியா எழுதிய





"இல்லாள்" என்பனவும் கவனத்துக்கு உரியன. இவரின் பார்வையில்

இல்லம் எங்கும் இன்பம்
இல்லாள் மனது தங்கம்
இல்லை என்ற சொல்லை
இல்லாதொழிக்கும் மங்கை

எனச் சொல்லப்படுகிறாள்.

பா.அபூர்வன் "தனித்துவம்" என்ற தலைப்பில் தண்ணீரின் தனித்துவத்தை கவிதை வரிகளில் தந்துள்ளார்.ச.சிவதுர்க்காவின் "முற்றத்துப் பூஞ்செடியே", சி.ஞானசுந்தரியின் "காத்திருக்கிறேன் அவனுக்காக" ஆம் காத்திருத்தல் தவிப்புடன் கூடிய நம்பிக்கை மனதுக்கு ஆறுதலை தந்தாலும் அந்த ஆறுதல் நிலைப்பதில்லை. அடிக்கடி ஏக்கம் அந்த ஆறுதலை குறுக்கறுக்கும் காத்திருப்பு காதலனுக்கு காதலிக்கு மட்டுமல்ல. தாய்மைக்கும் அது பொருந்தும் என்பதை சி.ஞானசுந்தரி தனது கவிதையில் வெளிப்படுத்தியுளார். காணி நிலம் வேண்டும் என பாரதி பாடினான் இங்கு அப்படி எல்லாம் வேண்டாம்

உறைபனியிலும்
உயிர் வாழ்ந்திடும்
வகைதெரிந்திடில்
அவ்விடம் ஓரிடம்
குடியிருக்க எமக்கு

குவலயத்தில் ஓரிடம் என கவிதை எழுதியுள்ளார் "மாருதம்" பத்தாவது இதழில் பல கவிஞர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது. கவிதைகள் இதழை அழகூட்டுகின்றன.

அறுசுவை உணவை அன்புள்ள மனைவி அருகிருந்து இன்னும் உண்ணுங்கள். இன்னும் உண்ணுங்கள் என்று விரும்பிட ஊட்டிய போதும், போதும் என்று கூறி மறுபிடி உணவை மறுத்து விலக்கி உண்டவரும் வறுமைப்பட்டு கூழ்குடிக்கக் கூட வழியின்றிக் கையேந்தி இரந்து இன்னொருவர் முன்னிலையில் நிற்கவேண்டி வரலாம்.

அதனால் செல்வம் நிலையானதல்ல என்பதை ஒரு புலவர் நாலடியாரில் கூறுகிறார். இங்கே "மாருதம்" பத்தாவது இதழில் தமிழ் மணி அகளங்கன் "புலவர்களின் தீர்க்க தரிசனம்" என்ற ஆக்கத்திலே இதனை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார்.

பூநகர் பொன்.தில்லைநாதன் எழுதிய "அவர்கள் வரவை நோக்கி" என்ற சிறுகதை வெளிநாட்டிலுள்ள பிள்ளைகளின் வரவுக்காக ஏங்கித்தவிக்கும் பெற்றோரின் நிலையை வெளிப்படுத்துகிறது. பனைஓலையால் இழைக்கப்பட்ட உமல்களில் புழுக்கொடியல் போட்டுப் புழுக்கொடியல் பாணிப்பனாட்டு என்பவற்றை சேர்த்துவைக்கும் பழக்கம் வடபகுதியில் காணப்படுகிறது.

இவ்வாறு சேமித்து வைக்கும் உணவுப் பொருட்களை மாரிகாலத்தில் பயன்படுத்துவர். பூநகரின் மொட்டைக்கறுப்பன் அரிசிப்பிட்டும் ஒடியல் கூழும் மிகவும் சுவையாக இருக்கும் இவைபற்றியும் இந்தச் சிறுகதையில் சுவைபடக் கூறப்பட்டுள்ளது.

வடபகுதியில் கடற்பரப்பில் பிடிக்கப்படும் கணவாய் மிகவும் சுவைமிகுந்தது. அவுஸ்ரேலியாவில் கூட இவ்வாறு சுவைமிகுந்த கணவாய்கறியை நான் உண்ணவில்லை என எஸ்.பொன்னுத்துரை தனது ஆக்கம் ஒன்றிலே குறிப்பிட்டுள்ளார். சங்குப்பிட்டி

கேரதீவு பாதையூடாக யாழ்ப்பாணம் செல்பவர்கள் அந்தப் பகுதியில் உள்ள சிறிய உணவகங்களில் அரிசிமாப் பிட்டும் கணவாய்கறியும், சாப்பிட்டுச் செல்வர். மிகச் சுவையாக இருக்கும். மாருதம் இதழ் பத்தில் வெளியாகியிருக்கும் 'அவர்கள் வரவை நோக்கி' சிறுகதை அவற்றையெல்லாம் நினைவுபடுத்துகிறது.

இன்னும் வவுனியாவில் குறும்படங்கள், கந்தையா ஸ்ரீகணேசன் எழுதிய "கைகள் உண்டு கால்கள் உண்டு" நாடகம், ந. பார்த்திபனின் "முற்றத்து மல்லிகைகள்" என பல ஆக்கங்கள் மாருதம் பத்தாவது இதழை அலங்கரிக்கின்றன.

மாருதம் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் தமிழ்மணி அகளங்கன், கந்தையா ஸ்ரீகணேசன் ஆகியோர் இணைந்து செயற்படுகின்றனர். இவர்களது கடின உழைப்பு இதழை வாசிக்கும் போது தெரிகிறது.

"மாருதம்" நம் நாட்டில் வெளிவரும் இன்னும் பல சிற்றேடுகளையும் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. அவை பற்றிய செய்திகளும் வெளியாகியுள்ளன.

இலங்கையில் அச்சகத்துறை நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. 'மாருதம' போன்ற சிற்றிதழ்களிலும் கூட அதன் பிரதிபலிப்பைக் காணமுடிகிறது.

**வட்டத்தின் அனுசரணையுடன் பராக்கிரம நெறியல்லவின் மக்கள் களரி குழுவினரின் சரண்தாஸ் நாடகம் மேடையேற்றம் (25.05.2010)**








பதிவு - 03

# தினக்குரலில் மாருதம் 10 பற்றி

- தி.நிரோஷ் -

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் மாருதம் சஞ்சிகையின் பத்தாவது இதழ் சமூக, கல்வி, கலை, இலக்கிய அம்சங்களைத் தாங்கி வெளிவந்துள்ளது. அட்டைப்படம் கவிஞர் முருகையனை வெளிப்படுத்தி நிற்கின்றது. வவுனியா இன்றும் அகதி வாழ்வில் அந்தரித்து நிற்கும் நம்மவர்களில் நிரம்பியுள்ளது. அந்தவகையில் உள்ளக அட்டடைப்படம் அகதி வாழ்வு, அதற்கேற்றாற் போலொரு கவிதை என நிஜ வடிவமைப்பைப் பெற்றுள்ளது. சஞ்சிகையின் உள்ளே நுழைகையில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தாரின் சமகால மேலுமொரு சமூகப்பணியாக இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பணிபற்றி பேசும் ஆசிரியர் தலையங்கம் தமது குழுமத்திலிருந்து இயங்கி மண்ணுலகிலிருந்து விடைபெற்றோருக்கும் அஞ்சலி செலுத்தி நிற்கின்றது.

தொடர்ந்து கவிதைகள், அதனையடுத்து ந.பார்த்திபனின் 'முற்றத்து மல்லிகைகள்' என்ற ஆக்கத்தில் எம்மவரின் படைப்புக்கள் குறித்துக் கேள்விக் கணைகளைத் தொடுப்பதுடன் அவற்றிற்கான பதில்களை ஆராய்ந்து நிற்கின்றது. இன்றைய சமூகப் பாதிப்புக்கள் மீளப்படுத்துவதற்கு உளவள ஆற்றுப்படுத்தலென்பது கட்டாயத் தேவையாகிறது. அந்த வகையில் 'விடியலை நோக்கி நீண்ட பயணம்' என்னும் கட்டுரை அமைந்துள்ளது. இதேயிடத்து ஈழத்து சஞ்சிகை அறிமுகம் இது ஒன்றும் சொற்களைப்பாவித்து எழுதப்பட்டதல்ல. சிறுகதை வரிசையில் 'அவள் வரவை நோக்கி' மற்றும் பாரதி நினைவுச் சிறுகதை போட்டியில் இடம்பிடித்த 'பாருக்குள்ளே ஒருநாடு' என சிறுகதைகள் சஞ்சிகையில் இடம்பெற்றுள்ளன.

மேலும், 'இலக்கியத்தில் விழுமியம்' என்ற கட்டுரை மக்களின் பண்பாடு கலைமரபு என்பவற்றை பிரதிபலித்துக் காட்டும் சரித்திரமே இலக்கியமாகுமென வலியுறுத்திக்காட்டுகிறது. ஓலைச்சுவடிகளில் வளர்ந்த தமிழ் இன்று தகவல் தொழில்நுட்பத்தின் உச்சத்திலிருந்து கொண்டிருப்பதற்கான காரணங்களில் இணையத்தின் பங்கு குறித்தும் மாருதம் ஆராய்கிறது. அகளங்கனின் 'புலவர்களின் தீர்க்க தரிசனம்' என்னும் கட்டுரை பாடல்களை தந்து அனுகப்பட்டுள்ள அதேவேளை வவுனியா சாயி இல்ல மாணவர்களால் மேடையேற்றப்பட்ட 'கைகள் உண்டு கால்கள் உண்டு' நாடகப்பகுதியின் எழுத்துரு ஓர் வித்தியாசமான கலைப்பாணியில் சஞ்சிகையில் அமைந்துள்ளது.

பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையின் பல்துறைப்பாண்டித்தியம், வவுனியாவில் வெளியாகியுள்ள, வெளியாகவுள்ள குறும்படங்கள், பற்றிய பார்வை, கவிதைகள், சிறுகதைகள், இலக்கியம் பற்றிய நோக்கு, வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் பதிவுகள், விமர்சனங்கள் என பல்சுவை விடயங்களையும் தாங்கிய தரிசனமாக மாருதம் இதழ் வெளிவந்துள்ளது. இது இவ்விதழின் நீட்சியான வாசகர் வட்டத்திற்கு ஒரு மகிழ்ச்சியான விடயமே.

(11-04-2010 ஞாயிறு தினக்குரல்)

**கலை இலக்கிய நெஞ்சங்கள் - ஒரு பதிவு**

# கூடும் உறவில் இலக்கிய இன்பம் தேடும் கிளிநொச்சியூர் இரத்தினசிங்கம்

- பேராயிரவர் -

"என்னுள்ளத்திலுள்ளாளே இப்போ சில நாட்கள்
உன் நினைவால் தூக்கம் உணவில்லை - மின்னலிடை
மான் விழியே யின்னும் வதைக்காதே யென்னிடத்தில்
ஏன் இந்த வெட்கம் இனி"



1959இல் சுதந்திரன் பத்திரிகை எஸ்.டி. சிவநாயகத்தின் கட்டுப்பாட்டில் இருந்த காலம்; ஈழத்தின் முதுபெரும் கவிஞர் அளவெட்டியைச் சேர்ந்த "மஹாகவி" உருத்திரமூர்த்தியின் தொகுப்பில் "வெண்பா" கவிதைப் போட்டி அரங்கேறியவேளை: ஈழத்தில் அக்கால முன்னணிக் கவிஞர்களான; வன்னியூர்க் கவிராயர், மு.பொன்னம்பலம், இராசபாரதி, தாமரைத்தீவான் போன்றோருடன் கிளிநொச்சி ஜெயந்தி நகரைச் சேர்ந்த திரு.சு.இரத்தினசிங்கம் அவர்களும் பங்கு கொண்டு எழுதிய கவிதை தான் மேலே தரப்பட்டுள்ளது.

இலக்கிய ஆர்வம் காரணமாகவும் இலக்கியவாதிகளுடன் பழகும் அன்பு காரணமாகவும், சமூகம் மீதான கரிசனை, அக்கறை காரணமாகவும் எழுத்துலகில் மின்னித்திரியும் ஒரு மின்மினியாக மிளிர்ந்து வருபவர்கள்தான் திரு.சு. இரத்தினசிங்கம்.

## குடும்பப்பின்னணி

1940இல் கிளிநொச்சி கணேசபுரத்தில் ஒரு கமக்காரர் குடும்பத்தில் 5 ஆண்களுடனும் 2 பெண்களுடனும் பிறந்த இரத்தினசிங்கம் அவர்கள் மட்டுவில் பன்றித்தலைச்சி சந்திர மௌலீசர் வித்தியாலயத்தில் ஆரம்பகல்வியைப் பெற்று பின்னர் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் தனது இடைநிலைக் கல்வியை மேற்கொண்டார். குடும்ப நிலைமை காரணமாக பரந்தன் சோடாத் தொழிற்சாலையில் 1956ல் காசாளராக இணைந்து கொண்டார். 1986ல் தொழிற்சாலை அரசியல் போர்ச் சூழல் காரணமாக பரந்தனில் மூடப்பட்டாலும் கொழும்பு அலுவலகத்தின் தொடர்புடன் 2000 ஆண்டில் பொறுப்பாளர் பதவிஉயர்வுடன் ஓய்வு பெற்றுக் கொண்டார். தொடர்ந்து விவாசாயத்தில் கவனம் செலுத்தி தனது மனைவி தவமணி மற்றும் 8 பிள்ளைகள் கொண்ட குடும்பத்தைக் காக்கும் கடமையையும் மேற்கொண்டு வருகின்றார்.

இதே கால கட்டத்திலேதான் தனது இலக்கிய, பத்திரிகைப்பணியையும் தவறாது மேற்கொண்டு வந்தமை பாராட்டுக்குரியது.





## இலக்கிய பத்திரிகைப்பணி

சுதந்திரனில் 'குயுத்தியாரின் கேள்வி பதில்' பகுதியில் ஆரம்பித்து வீரகேசரி, ஈழநாடு எனப் பல பத்திரிகையிலும் அவரது குறிப்புக்கள் இடம்பெற்று வந்தன. சமூகப் பிரச்சினைகள் பற்றிய கடிதங்களும் துணுக்குகளும் எழுதுவது அவருக்கு கை வந்த கலை.

திருகோணமலையில் மகாகவி உருத்திரமூர்த்தியை சந்தித்ததும்; சிற்பியின் கலைச் செல்வியில் கேள்வி பதில் எழுதியதும்; சுதந்திரனில் வன்னியூர்க் கவிராயர் எழுதிய 'துர்ப்பாக்கியசாலி' சிறுகதையைப் பாராட்டி கடிதம் போட்டதும் ஒரு காலம். பின்னர் செவ்வந்தி மகாலிங்கத்துடன் இணைந்து வேலையோடு இலக்கியம் பேசியதும் 1965ல் கிளிநொச்சியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கா.பொ. இரத்தினம் நடாத்திய திருக்குறள் மாநாட்டில் கலந்து கொண்டதும், நீங்காத நினைவுகள்; கோப்பாய் எஸ்.சிவத்துடன் கிளிநொச்சியில் இலக்கிய விடயங்கள் பரிமாறிய சந்தர்ப்பங்களையும் மல்லிகை ஆசிரியர் ஜீவாவுடன் மேற்கொண்ட சந்திப்பையும் நினைவுக்குக் கொண்டு வருகிறார். மல்லிகையின் 'தூண்டில்' பகுதியில் இவரது கேள்விகள் பிரபல்யமானவை தீவிர வாசகரான இரத்தினசிங்கம் மல்லிகை மே 2004ல் பிரபல எழுத்தாளர்களின் இரட்டை முகங்களைச் சுட்டிக்காட்டும் ஒரு தீவிர இலக்கிய வாசகராக தம்மை அடையாளம் காட்டிக் கொண்டார். ஒரே கதையை வெவ்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கு அனுப்பும் இலக்கியகர்த்தாக்கள் திரு.இரத்தினசிங்கம் போன்றவாசகர்களிடம் தப்பமுடியாது.

அதே மல்லிகைப் இதழ்களில் தாமரைச் செல்வி பற்றியும் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் பற்றியும் அட்டைப்பட அதிதி பகுதியில் எழுதியுள்ளார். அது மட்டுமல்லாமல் மல்லிகை ஆசிரியரே "மல்லிகையின் கொடிக்கால்கள்" என்ற பகுதியில் திரு.இரத்தினசிங்கத்தைப் பற்றியும் அவரது இலக்கிய அபிமானம் பற்றியும் எழுதியுள்ளார், என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை வானொலியில் எஸ்.பொ.அவர்களின் நெறியாள்கையில் இ.ரா.பத்மநாதனின் தயாரிப்பில் 'கலைக்கோலம்' நிகழ்ச்சியில் இரத்தினசிங்கம் அவர்கள் இரு முக்கிய பேச்சுக்களை நிகழ்த்தி உள்ளார். செவ்வந்தி மகாலிங்கம் எழுதிய 'முத்துக் குவியல்' எனும் கவிதைத் தொகுப்புப் பற்றியும், 'ஈழத்து காவிய தீபகம்' எழுதிய வன்னியூர்க் கவிராயர் மன்றவை ஒட்டிய அஞ்சலியாகவும் அப்பேச்சுகள் அமைந்தன.

அது மட்டுமல்லாது அவரது இரு சிறுகதை ஆக்கங்கள் குறிப்பிடத்தக்கன.

1. ஆலடிப் பிசாசு
2. இறுதி ஆசை (நவரசக்கதை)

"ஆலடிப்பிசாசு" (1959) என்ற கதை மூலம் ஒரு கல்லில் இரு மாங்காய் அடிப்பது போல், பேய் பிசாசு எனும் மூட நம்பிக்கைகளுக்கு சாவு மணி அடிப்பதுடன் குடியினால் வரும் கேட்டையும் அம்பலப்படுத்துகிறார்.

"இறுதி ஆசை (1996) எனும் கதையின் ஊடாக மரண வீட்டு கிரியைகள், நிகழ்வுகள் என்பவற்றை விவரிப்பதுடன் கிளிநொச்சி பிரதேச வரலாற்றையும் ஊடுபாவாக இழைத்து விட்டுள்ளார். ஒரு தாய் பட்டபாட்டை "இறுதி ஆசை" எனும் சிறுகதையின் ஊடாக சொல்வதுடன் இடம் பெயர்வு அவலத்தையும் தாய் கஸ்ரப்பட்டு பிள்ளைகளை சலிப்பில்லாது வளர்த்த பாங்கையும் 'ஐயா எரிச்ச இடத்திலை எரிச்சு விடுறியா?' என்ற தாயின் இறுதி ஆசையை நிறைவேற்ற முடியாத பிள்ளைகளின் இக்கட்டான நிலையையும். எல்லாப்பிள்ளைகளும் இறுதி நிகழ்வில் கலந்து கொள்ள முடியாத

நாட்டின் சூழலையும் கலைத்துவமாக பதிவு செய்வது பாராட்டத்தக்கது.

இதற்கு மேலாக இலக்கிய வாதிகளுடன் கூடி இலக்கியம் பேசி நிறைவு காணும் நோக்கில் திரு. இரத்தினசிங்கம் 2005ல் தனது புதுமனைப் புகுவிழாவை இலக்கிய அன்பர்கள் கூடும் திருவிழாவாக மாற்றியதை புகழாத கவிஞர் இல்லை; கதைஞர் இல்லை. இன்று அந்த இல்லமும் இல்லாமல் போன நிலைமையிலும் நிலை மாறாத தடம் மாறாத சொல் மாறாத தீரம் மிகுந்த உள்ளத்தோடு மீண்டும் இலக்கிய கர்த்தாக்களுடன் உலவத்தொடங்கிவிட்டார்.


அவரது ஊடகவியல் அனுபவமும் இலக்கியமும் இணைந்து வெளிப்பட்ட படையல் "மண்ணின் வேர்கள்" உண்மையிலேயே சமூகத்தின் உருவாக்கத்துக்கு காரணமான மண்ணிலே வாழ்ந்து வேரூன்றி விழுது பரப்பி வாழும் விருட்சங்கள், கல்வியியலாளர்கள், கிராம சேவையாளர், சமூக சேவையாளர்கள், கலைஞர்கள் போன்றவர்களை சந்தித்து நேர்கண்டு அவற்றை வாராவாரம் தினக்குரலில் வெளிவரச் செய்து பின் அதனை ஒரு நூலாகவும் உருவாக்க முன் நின்று உழைத்தவர் திரு.சு.இரத்தினசிங்கம் எனும் படைப்பாளி.

எந்தவொரு சபைச்சிறப்பையும் பொன்னாடை, மாலை மரியாதைகள், பத்திரிகை, விளம்பரங்கள் போன்ற போலிச் சிறப்புகளையும் எதிர்பாராது "என் கடன் இலக்கிய தொண்டும், சமூகத் தொண்டும்" என இடம்பெயர்ந்த நிலையிலும் இலக்கிய ஊழியம் புரியும் கிளிநொச்சியூர் இரத்தினசிங்கம் கூடும் உறவில் இலக்கிய இதம் காண்பதில் சமர்த்தர் என்றால் மிகையாகாது.

## உளவளத்துணை வைத்தியர்

## எஸ்.சிவதாஸ்

## எழுதிய நூல்கள்













**நந்தீஸ்வரியின் இலக்கியப் பதிவுகள்**

# வவுனியா மாவட்ட எழுத்தாளர் அமைப்பு நிர்வாகிகள் தெரிவு – 2009

வவுனியா மாவட்டத்தில் இலைமறைகாயாக உள்ள எழுத்தாளர்களை வளப்படுத்தும் நோக்கோடு கல்வி, உயர்கல்வி அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க வவுனியா மாவட்ட அரச அதிபரினால் எழுத்தாளர் அமைப்பு ஒன்று 2009 ஆவணியில் உருவாக்கப்பட்டு நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

அரச அதிபரின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தலைவராக கலாநிதி க.ஸ்ரீகணேசனும் உபதலைவராக தமிழ்மணி (அகளங்கன்) செயலாளராக திரு.கந்தையா, திரு.ந.பார்த்திபன், உபசெயலாளராக மு.கௌரிகாந்தன், பொருளாளராக செல்வி, யோகா சோமசுந்தரம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். இவ் அமைப்பின் போசகராக அரச அதிபர் பீ.எஸ்.எம். சாள்ஸ், இணைப்பாளராக கே.எஸ்.வசந்தகுமார், இணைப்புச் செயலாளர் திருமதி ஜெ.தட்சாயினி ஏனைய அங்கத்தவர்களாக பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன், தமிழருவி, த. சிவகுமாரன், மு.இராமையா, கயல்வன்னன், முகமது சரீப் றம்ஸீன், சு.வரதகுமார், திருமதி அ.நெலோமி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்குழுவினால் காலாண்டு சஞ்சிகையாக 'கதவு' என்ற நூல் விஜயதசமி அன்று வெளியிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பொறுப்பாசிரியராக வவுனியா கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் மு.கௌரிகாந்தன் செயற்படவுள்ளார்.



**வட்டத்தின் விருது பெறும் எழுத்தாளர்**

# கலை இலக்கியச் செல்வர் உடுவை எஸ்.தில்லை நடராசா



உடுப்பிட்டியில் சாதாரண தொழிலாளக்குடும்ப மொன்றில் சிங்காரம்பிள்ளை-இராசாம்பாள் தம்பதிகளின் மூத்த புதல்வனாக 1947 ல் பிறந்தார். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் ஆரம்பித்த கல்வி க.பொ.த சித்தியடையும் வரை தொடர்ந்தது. க.பொ.த உயர்தரத்துக்கு யாழ். இந்துக்கல்லூரி சென்று படிப்பை முடிக்கு முன்பே போட்டிப் பரீட்சை பெறு பேறாக 1967 ல் பொலிஸ் தலைமை அலுவலகத்தில் பொது முகாமை உதவியாளனாக வேலைக்குச் சேர்ந்தார்.

1973,1974,1975 ஆண்டுகளில் வவுனியா பொலிஸ் அதிகாரி அலுவலகத்திலும் கடமையாற்றனார். மீண்டும் போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்ற மூன்று தமிழர்களுள் ஒருவராக இலங்கை நிர்வாக சேவைக்கு(SLAS) 1978ல் தெரிவுசெய்யப்பட்டார்.

1983 முதல் 1989 ஏப்பிரல் வரை வவுனியா கூட்டுறவு உதவி ஆணையாளராக கடமையாற்றினார். அப்போது கூட்டுறவு உதவி ஆணையாளர், உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி, சமூக சேவைஉதவி ஆணையாளர், வறுமை நிவாரண உதவி ஆணையாளர் , அவசர கால புனர்வாழ்வு புனரமைப்பு திட்டப்பணிப்பாளர் என ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளில் பணி புரிந்தார். அத்துடன் பல சந்தர்ப்பங்களில் வவுனியாவுடன் மன்னார் முல்லை மாவட்டங்களிலும் கடமையாற்றினார்.

வடகிழக்கு மாகாணசபை ஆரம்பத்தில் திருக்கோணமலையிலும் பல அமைச்சுகளில் கடமையாற்றும் சந்தர்ப்பம் அமைந்தது. பின் 1992 முதல் 1995 வரை வவுனியா அரசாங்க அதிபராகவும் பின்னர் கிளிஅரசஅதிபராகவும் பணிபுரிந்தார். இந்து சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளராக சிறப்புடன் சேவை புரிந்து ஓய்வு பெற்றார்.

60 வயதில் ஓய்வு பெற்ற பின்னரும் கல்வி உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளராக மீள் நியமனம் பெற்று கடமைபுரிந்ததோடு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் பொலிசாரின் நியமனம் ஒழுக்காற்று நடவடிக்கை மேன்முறையீட்டு விசாரணை அதிகாரியாகவும் சேவை புரிந்தார். இப்போது உலக வங்கியின் ஒருப்பாட்டுடன் நிதி ஆணைக்குழுவில் கல்வித்துறை அபிவிருத்தி அறிவுரைஞராக கடைமையாற்றுகின்றார்.

பாடசாலை நாட்களில் எழுத்து, பேச்சு, நாடக ஈடுபாடு என தொடங்கிய அவரது கலை இலக்கிய பணி பத்திரிகை வானொலி என விரிவடைந்தது. 73,74,75 களில் வவுனியாவில் நடிகனானவும் நிகழ்ச்சித் தொகுப்பாளனாவும் கலை உலகில் தடம் பதித்தார்.






1963 ல் சுதந்திரனில் வெளியான "மந்திரக் கண்ணாடி", 1967 ல் ராதாவில் வெளியான"கடற்கன்னி" சிறுவர்கதைகளை இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி நூலாக வெளியிட்டு சிறப்பு செய்தது. சிரிப்புக்கதைகளான " கல்யாணம் முடித்துப் பார்" எம்.டி.குணசேன நிறுவனத்தால் வெளியிடப்பட்டு இரு தடைவ மீள் பிரசுரமாகியது.

மல்லிகை வெளியீடான "அப்பா" இந்திய ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் அவர்களின் பாராட்டை பெற்றது. இப்போது லண்டன் புதினம் பத்திரிகையில் மீள் தொடராக பிரசுரிக்கப்படுகின்றது.

1994 ல் வவுனியா குருமண்காடு கலைமகள் சனசமூக நிலைய நிதிக்காக இரண்டு நாட்களில் மூன்று தடைவ 'அசட்டு மாப்பிள்ளை' நாடகத்தை நடாத்தி பெருமளவு பணம் சேகரித்ததும், 1997ல் இறம்பைக்குளம் கிறிஸ்தவ தேவாலயத்துக்காக 'வாடகை வீடு' நாடகத்தை நடாத்தி பெருமளவு பணம் சேகரித்ததும் இவரது முக்கியமான சமூக நடவடிக்கைகள். இன் நாடகங்களில் இவரது நடிப்பு எல்லோராலும் பாராட்டப்பட்டது.

அவுஸ்திரேலியா, கனடா, சுவிஸ்,ஜேர்மனி, லண்டன் என 22 நாடுகளுக்கு, பல தடைவை சென்று வந்த அனுபவங்களை எல்லாம் பத்திரிகைகளில் எழுதி கலை இலக்கிய ஆர்வலர்களை ஊக்குவித்தார். 1994இல் வவுனியாவில் உள்ள வடக்கு மாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரியில் மாணவர் மத்தியில் தனது கலைஇலக்கிய அனுபவங்களை எடுத்துரைத்து இளம் தலைமுறையினருக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் திரு.உடுவை தில்லை நடராசா அவர்களை வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் **கலை இலக்கிய செல்வர்** எனும் விருது வழங்கி பெருமை கொள்கிறது.






**வவுனியா வளாகம் வெளியிட்ட ஆய்வு இதழ்**

வட்டத்தின் விருது பெறும் கலைஞர்

## நாடகக் கலைச்செல்வர் மரியான் பொனிபஸ்.தைரியநாதன்



யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் 1949இல் பிறந்த திரு.தைரியநாதன், 1961 முதல் தனது பன்னிரண்டாவது வயதிலிருந்து கலையுலகப் பயணத்தை மேற்கொண்டார். காங்கேசன்துறை வசந்த கான சபா நாடகங்களில் 1969 முதல் நடிகமணி வி.வி.வைரமுத்துவுடன் பெண் பாத்திரங்களில் இணைந்து நடித்தார். அரிச்சந்திரா, பூதத்தம்பி, நல்லதங்காள், ஞான சவுந்தரி, பவளக்கொடி, சத்தியவான் சாவித்திரி, நந்தனார், ஸ்ரீவள்ளி, சாரங்கதாரா, அல்லி அருச்சுனா, கோவலன் கண்ணகி, போன்ற நாடகங்களில் நடித்து புகழ்பெற்றார்.

90 களில் யாழ் திருமறைக் கலா மன்ற ஆதரவில் மேடையேறிய பல இசை நாடகங்களில் பிரதான பாத்திரங்களை ஏற்று நடித்ததோடு பல ஐரோப்பிய நாடுகளிலும் தனது மேடையேற்றங்களை கண்டவர். இன்று வவுனியாவில் கடந்த 5 வருடங்களாக பாடசாலைகளிலும் கல்விக் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகத்திலும் மாணவர்களுக்கு இசை நாடகங்களை பழக்கி பணிபுரிந்துவருகிறார், நடிப்பிசைச் செல்வர், கலைஞான கேசரி, கலைவேந்தன் எனும் பட்டங்களை பெற்று சிறப்புடன் கலைப்பணி செய்து வரும் திரு.பொ.தைரியநாதன் அவர்கள் நடித்த "மயான காண்டம்" அண்மையில் வவுனியா அரங்குகளில் மேடையேறி பலரது பாராட்டுக்களை பெற்றது குறிப்பிடத்தக்கது ஆகும். சமீப காலமாக வவுனியா அரங்குகளில் இவரது பூததம்பி மற்றும் சத்தியவான் சாவித்திரி போன்ற இசை நாடகங்களை தனது மகள் மற்றும் மகன்மார் ஆகியோரின் உதவியுடன் மேடை ஏற்றி வருவது சகலமட்டங்களிலும் பாராட்டப்படுகின்றது. இத்தகைய கலைஞருக்கு வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நாடகக் கலைச்செல்வர் என்னும் விருது வழங்கி பெருமை கொள்கின்றது.





நந்தீஸ்வரியின் இலக்கியப் பதிவுகள்

## வவுனியா மாவட்ட கலை இலக்கிய பெருவிழாவில் கௌரவிக்கப்பட்டோர். – செப்டெம்பர் 2009

### இசை நாடகக் கலைஞர் ம.பொ.தைரியநாதன்

### நாடகக் கலைஞர் – சந்தியா ஜோசை அந்தோனிப்பிள்ளை

முல்லைத்தீவு மணல் குடியிருப்பில் 1932ம் ஆண்டு ஏப்ரல் 18இல் பிறந்த திரு.அந்தோனிப்பிள்ளை சிறு வயது முதலே தமது கிராமத்து கூத்துக்களில் ஈடுபாடு கொண்டவர். தாய்வழிப் பேரன் ஒரு கூத்துக்கலைஞர் ஆவார். அத்துடன் கூத்துக்களுக்குரிய உடுப்புக்கள், உபகரணங்கள் செய்யும் திறமை இயல்பிலே வாய்த்தது. இவரது மூத்த சகோதரர் அருளப்பு ஒரு ஹார்மோனிய இசை வித்துவான் இதனால் இசையிலும் பாடல் பாடுவதிலும் திரு.அந்தோனிப்பிள்ளை அவர்களுக்கு இயல்பிலேயே ஆர்வம் ஏற்பட்டு அத்துறையிலும் தனது பயிற்சியை தொடர்ந்தார். முல்லைத்தீவுக் கூத்தான "கோவலன் கூத்துடன்" இவரது ஈடுபாடு முக்கியமானது. அத்துடன் பதின்மூன்று வயது முதல் நடிப்பிலும் தனது கவனத்தை செலுத்தினார். 'ஞான சவுந்தரி', 'கண்டியரசன்' ஆகிய நாடகங்களில் நடித்ததோடு வில்லிசைக்குழுவின் இசைக் கலைஞராகவும் பணிபுரிந்து வந்தார். அத்துடன் காத்தான் கூத்து நாடகத்துக்கான வேட உடுப்பு, ஒப்பனை என்பவற்றுடன் ஈடுபட்டுழைத்தார். 'மயான காண்டம்', ஸ்ரீவள்ளி போன்ற இசைநாடகங்களுக்கும் இசையமைத்த அனுபவம் உண்டு. 97இல் வவுனியாவுக்கு இடம்பெயர்ந்து வந்த பின்பு பல்வேறு பாடசாலைகள், கல்வியியற் கல்லூரி, மற்றும் பல்கலைக்கழக வளாகம், சாயி சமிட்டி நாடகங்களுக்கு இசையமைத்தும், வேட உடுப்பு மற்றும் ஒப்பனைகளிலும் தனது பங்களிப்பை வழங்கியும் இன்று வரையும் சிறப்பாக ஆற்றி வருகின்றார். இவரது பேட்டி மாருதம் இதழில் ஏற்கனவே வெளிவந்துள்ளது.

## நாகூர் மீரான் மொகிதீன்கனி

நாட்டார் விளையாட்டு கலை நாயகன் (சாண்டோ சாலி) கைவிடப்பட்டகலையின் நாயகன். சிலம்பம், சீனடி, கழிகம்பு, சைக்கிள், ஓட்டம், வண்டில் சவாரி, வாள் வீச்சு, ஆகிய திறமைகளில் சிறப்புப் பெற்றவர். 1970ஆம் ஆண்டு வண்டிச் சவாரியில் வவுனியாவில் முதாலாமிடம் பெற்று S.P.தவராஜா அவர்களிடம் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார். சைக்கிள் ஓட்டத்தில் பல வெற்றிகள் பெற்றுள்ள இவர் ஒரு முறை செட்டிகுளத்தில் இருந்து வட மராட்சி ஊடாக யாழ்ப்பாணம் வரை சென்று வெற்றி பெற்றுள்ளார். உதவி அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் மற்றும் லோகேஸ்வரன் ஆகியோரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டுள்ளார். பல கிராமங்களில் இவரின் சிலம்பம், கழிகம்பு மாணவர்கள் திறமை காட்டி வருகின்றனர்.

## ஆங்கிலநாடகக் கலைஞர் மொழிபெயர்ப்பாளர் எஸ்.பூபாலசிங்கம்

25.03.1940 இல் யாழ் - கோண்டாவிலில் பிறந்த திரு.எஸ்.பூபாலசிங்கம் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் ஆரம்பகல்வியையும் உடும்பிராய் இந்துக்கல்லூரியில் தரம் 6 முதல் க.பொ.த உயர்தரம் வரை ஆங்கில மொழி மூலம் படித்து சித்தியெய்தினார். வெளிவாரியாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை தமிழ், இந்து நாகரீகம் மற்றும் அங்கில இலக்கியம் ஆகிய பாடங்களுடன் மேற்கொண்டார். பேராசிரியர் விக்கிரமசூரியா மற்றும் பேராசிரியர் திரு.கனகநாயகம் ஆகியோரிடம் ஆங்கில இலக்கியத்தையும் கலாநிதி மௌனகுருவிடம் தமிழையும் கலாநிதி வேதநாதனிடம் இந்து நாகரீகத்தையும் கற்றார். அத்தோடு தமிழ் பண்டிதர் பரீட்சையிலும் சித்தி பெற்றவர். வித்துவான் பொன்.முத்துக்குமாரன் பண்டிதர் துரைசிங்கம், வித்துவான் வேந்தனார் ஆகியோரிடம் தமிழ் படித்த சிறப்புமிக்கவர்.

1982இல் ஆங்கில ஆசிரியராக நியமனம் பெறும்வரை சுமார் 15 ஆண்டுகள் வவுனியா இறம்பைக்குளத்தில் College of Learning கல்விக்கூடத்தை நிறுவி வவுனியாவின் ஆங்கில விருத்திக்கு 65 முதலே பங்களிப்பு செய்தார். தொடர்ந்து பேராதனையில் ஆங்கில ஆசிரிய பயிற்சியை மேற்கொள்ளும் போது ஜீன்.அரசநாயகம் மற்றும் கமலா விஜயரட்ணா போன்ற ஆங்கில படைப்பாளிகளிடம் கல்வி கற்றும் பேற்றைப் பெற்றார். தொழில்ரீதியாக பல படிகளைத் தாண்டி Delic ஆங்கில (92-95) இணைப்பாளராகவும் வவுனியா வளாகத்தில் பகுதி நேர விரிவுரையாளராகவும் 92 முதல் இன்று வரையும் தொலைக்கல்வி போதனாசிரியராகவும் கல்வியியல் கல்லூரி வருகை திரு.விரிவுரையாளராகவும் கடமையாற்றிவருகிறார். அத்துடன் சேவைக்கால ஆங்கில ஆலோசகராவும் (95,98) ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி 2001 இல் ஓய்வு பெற்றார்.

2001 முதல் இன்று வரை வவுனியா தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளராக கடமையாற்றி வருவதோடு இடம்பெயர்ந்த ஆங்கில பயிலுநர்களுக்கும் ஆங்கில இலக்கியத்தை கற்பித்து வருகின்றார். க.பொ.த. சாதாரண தர ஆங்கில இலக்கியப் பாடத்தில் வவுனியா மாணவர்கள் அதி திறமை சித்தியை பெறுவதற்கு சிறப்பான பணிபுரியும் திரு.பூபாலசிங்கம், நாடக ஆக்கப்பணியிலும் நூலாக்கப் பணியிலும் சிறப்பான பங்களிப்பை ஆற்றி வருகின்றார். அவரால் மொழிபெயர்க்கப்பட்ட 'உருகி எரியும் கரப்பூரங்கள்', நன்றிக்கடன், பண்டாரவன்னியன், கண்ணப்பநாயனார் போன்ற நாடகங்களை மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் பழக்கியதோடு அவற்றைத் தொகுத்து ஒரு நூலாக (Melting Camphors) வவுனியா ஆங்கில மன்றத்தினூடாக 2005இல் வெளியிட்டார். அத்துடன் பல நாடகங்கள், பாடல்களை எழுதி மாணவர்களுக்குப் பழக்கினார். வில்லியம் சேக்ஸ்பியர், சார்ஸ் டிக்கன்ஸ் போன்ற ஆங்கில மேதைகளின் படைப்புகளை சுருக்கி நாடகமாக்கிப் பழக்கியவர். சிறந்த ஆசிரியராக 1991இல் கௌரவிக்கப்பட்டார். அவரது ஆங்கில மொழிக்கல்வி நூலாக (Focus on Reading and Writing) வெளிவந்துள்ளன.

1988 முதல் 1989வரை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் சங்கீதப் போட்டிகளுக்கு மாணவரை தயார் படுத்தினார். சங்கீத வித்துவான் இராத கிருஷ்ணனிடம் தரம் 4 வரை சங்கீதம் பயின்றதோடு இன்று கோவில்களில் புராண படனம், திருவாசகம் முற்றோதல் என்பவற்றில் தன் பணியை தொடர்ந்து ஆற்றுகின்றார்





## பி.ஏ.சி.ஆனந்தராஜா - நாடகக் கலைஞர்

21.03.1935 இல் வவுனியா இறம்பைக்குளத்தில் பிறந்த திரு.ஆனந்தராஜா அவர்கள் ஒரு நாடகக் கலைஞராக வளர்ந்தார். வவுனியா, மட்டகளப்பு மற்றும் அநுராதபுர மாவட்ட பாடசாலைகளில் தனது கல்வியை பெற்றுக்கொண்ட திரு.ஆனந்தராஜா பாடசாலைக் காலங்களில் ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்களில் படித்து பரிசில்களும் பெற்றவராவார். 1960களில் இந்தியாவில் விஞ்ஞான பட்டதாரியாகிய போது, நாடகம் எழுதுதல், தயாரித்தல், ஒப்பனை மற்றும் உடையமைப்பில் பயிற்சிகள் பெற்றுக்கொண்டார். 1963ல் இளவாலை சென்ஹென்றிஸ் கல்லூரியில் ஆசிரியராகி தனது வாழ்க்கையை தொடங்கிய போது நாடகத்திலும் ஈடுபாடு காட்டினார்.

பாடசாலை நாடகங்களை தாயரித்து பரிசில்கள் பெற்றதோடு கலைக்கழக நாடகப் போட்டிகளிலும் பங்குபற்றினார். இவரது நாடகங்களின் தொகுப்பான "இருட்டினுள் குருட்டாட்டம்" மற்றும் உளவியல் அனுபவ எழுத்துக்கள் 'அன்புக்கரங்கள்' என்னும் நூலாகவும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் வெளியிடப்பட்டது. நாட்டில் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் நெருக்கடிகளை தீர்க்கும் பணியில் 90 களில் இருந்து முன்னின்று உழைத்து வரும் ஆனந்தராஜா அவர்கள், யாழ்ப்பாணத்தில் சாந்தியத்திலும் வவுனியாவில் தமது மனோ சாந்தியமைப்பினூடாகவும் உளவள துணைப் பணியை ஆற்றிவருகின்றார். இதற்கான பயிற்சிகளை வெளிநாடுகளில் பெற்றதோடு ஆங்கிலத்திலும் தமிழிலும் மேலும் இரு நூல்களை ஆக்கியுள்ளார். வவுனியா கலை இலக்கிய வட்டத்தில் 'நாடக கலைச்செல்வர்' என்னும் விருதினை இவர் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## ஓவியக்கலைஞர் பொன்னம்பலம் பாலேஸ்வரன்

யாழ். வட்டுக்கோட்டையில் 1947இல் பிறந்த திரு.பாலேஸ்வரன் அராலி இந்துக் கல்லூரியில் தனது ஆரம்ப இடைநிலை கல்வியை பெற்றுக்கொண்டார். யாழ் ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில் க.பொ.த உயர்தர விஞ்ஞான கல்வியை கற்றுக் கொண்டார். சிறு வயதில் ஓவியத்துறையில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக பெனடிற் மாஸ்ரரிடம் 5 வருடங்கள் ஓவியக்கலையில் பயிற்சி பெற்றார். இதனால் கிளிநொச்சி நீர்ப்பாசன இலாகாவில் நிறம் தீட்டுபவராக 4 வருடங்கள் பணியாற்றிய பின் சுயதொழில் நாட்டம் கொண்டு ஓவியத்துறையை தேர்ந்தெடுத்தார். "வரன் ஆட்ஸ்" எனும் அமைப்பை நிறுவி அதன் ஊடாக தனது கலைப்பணியை ஆற்றி வருகின்றார். ரேவதி எனும் புனைபெயரில் 'உயிரோவியம்' எனும் தலைப்பில் ஓவியங்களின் தொகுப்பொன்றினை மாணவர்கள் படிப்பதற்கான ஒரு கலைத்திட்டமாக வடிவமைத்து உள்ளார். இவரது வழிகாட்டலில் வவுனியா மதீனா வித்தியாலயத்தைச் சேர்ந்த பௌமி என்னும் மாணவி கிழக்கு பல்கலைக்கழகத்தில் படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்து படித்து. வருகின்றார். வர்த்தக ஓவியங்களை அதிகம் வரைந்து வரும் கலைவாணி நாடக மன்றம் மூலம் திரு.பாலேஸ்வரன் நாடகங்கள் நடிப்பதிலும் பாடல்கள் எழுதுவதிலும் ஈடுபாடு கொண்டவர். பல நாடகங்களில் நடித்து 'நவரச திலகம்' எனும் பட்டத்தையும் ஓவியத்துக்கென **'ஓவியச்சுடர்', 'கலைஞானி'** எனும் விருதுகளையும் பெற்றுக்கொண்டார். 2008ம் ஆண்டில் வடமாகாண ஆளுனர் விருதையும் பெற்றார். இவர் சுனாமி எனும் பாடல் இசை இறுவட்டும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## கதிரமலை நாதன் – சரவணபவன்

## நாட்டாரியில் கலைஞர்

யாழ் வட்டுக்கோட்டையில் 24.03.1953இல் பிறந்த திரு.சரவணபவன் கவிதையாக்கம், நாடகம், நாட்டுக்கூத்து, வில்லிசை, சமயசொற்பொழிவு மற்றும் நாட்டார் கலைகளில் ஈடுபட்டு வரும் கலைஞராவார். 'சுதந்திர வாழ்வில் விடிவலைகள்', 'தெய்வீகமும் சமாதானமும்', 'அறம் பொருள் இன்பம்' போன்ற நூல்களை பதிப்பித்ததோடு ஊஞ்சல் பாடல்களையும் எழுதியுள்ளார். தொடர் விரிவுரைகள், வானொலி நற்சிந்தனைகள் என பல சமயப்பணிகளிலும் ஈடுபட்டுவரும் திரு.சரவணபவன் அவர்கள் 1979இல் பளையில் நடந்த சுய ஆக்க கவிதைப்போட்டியில் முதலிடம் பெற்றார்.

கொழும்பு தமிழ் சங்கம் நடாத்திய கவிதைப் போட்டியில் பரிசுபெற்றார். மனோலயா கலை அரமியத் தலைவராகவிருந்து கலைவிழாக்கள் நடத்துவதோடு புரவி நடனம் மற்றும் நாட்டுக்கூத்து வடமோடி கலைகளை ஆடி வருகின்றார். சிறந்த வில்லிசைக் கலைஞராக திகழும் சரவணபவன் அவர்கள் புதுக்கவிதை, நாட்டார் பாடல் போட்டிகளில் தேசிய இளைஞர் சேவை மன்றத்திடமிருந்து பரிசில்களை பெற்றுக்கொண்டார். 'கலைமணிவிருது' மற்றும் 'சித்தாந்த வித்தகர்' ஆகிய விருதுகளை பெற்றுக்கொண்ட இக்கலைஞர் திருவாசகம் முற்றோதல், கந்தபுராண படன விரிவுரை மற்றும் தொடர் சொற்பொழிவுகள் ஆகியவற்றை மேற்கொண்டு வருகின்றார். 11 ஊஞ்சல் பாடல்கள், தெய்வீகமும் சமாதானமும் என பல நூல்கள் வெளியிட்டுள்ளார்.

### திருமலையிலிருந்து வரும் கவிதை இதழ்




### மட்டுநகரில் வெளிவந்த கவிதை நூல்








நந்தீஸ்வரியின் இலக்கியப் பதிவுகள்

## வடமாகாணக் குறுந்திரைப்படப் போட்டி

## வவுனியா மாவட்டத்திற்கு முதலிடம்

வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்திய குறுந்திரைப்படப் போட்டியின் பெறுபேறுகளின் பிரகாரம் முதலாம் பரிசு உட்பட ஒன்பது இடங்களைப் பெற்றுக்கொண்டதன் மூலம் வவுனியா மாவட்டம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

வவுனியா இறம்பைக்குளத்தைச் சேர்ந்த சாள்ஸ் சவரிமுத்து தயாரித்த 'The Key' (தமிழ்) என்ற குறும்படம் முதலாவது இடத்தையும், தோணிக்கல்லைச் சேர்ந்த சுப்பிரமணியம் வினோத் தயாரித்த 'இருள்' மற்றும், கரப்பன்காட்டைச் சேர்ந்த சி.எழில்குமரன் தயாரித்த 'பிச்சைப்பாத்திரம்' ஆகிய இரு குறும்படங்களும் முறையே இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளன.

தோணிக்கல்லைச் சேர்ந்த செல்வி வனிதா சேனாதிராஜா தயாரித்த 'நாளை' குறும்படம் ஐந்தாம் இடத்தையும், பொன் வீடியோ இயக்குனர் சி.சுபாஸ்சிங்கம் தயாரித்த 'வெளிநாடு' குறும்படம் ஆறாவது இடத்தையும் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய ஆசிரியர் சு.வரதகுமாரினால் தயாரிக்கப்பட்ட 'எதிர்பார்ப்பு' மற்றும் 'ஒடிந்த சிறகுகள்' ஆகிய இரு குறும்படங்கள் முறையே ஏழாம் ஒன்பதாம் இடங்களையும் பெற்றுள்ளன.

இறம்பைக்குளத்தைச் சேர்ந்த சவரிமுத்து சந்துரு தயாரித்த 'சிட்டு' குறும்படம் எட்டாம் இடத்தையும், இறம்பைக்குளத்தைச் சேர்ந்த தர்மரட்ணம் தவயோகன் தயாரித்த 'The sot' (தமிழ்) குறும்படம் பத்தாம் இடத்தையும் பெற்றுள்ளன.

### புலம்பெயர் எழுத்தாளர் லெ.முருகபூபதி வட்டத்தில் உரை



பிரதாபனின் இலக்கியப் பதிவுகள்

# சிறந்த இலக்கிய நூல் விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட படைப்புக்கள் (2009)

வடக்குமாகாண கல்வி மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் 2009ஆம் ஆண்டுக்கான சிறந்த இலக்கிய நூல்களுக்கான விபரங்கள்.

**நாடகம்** : 'கங்கையின் மைந்தன்' நா.தர்மராஜா (அகளங்கன்)
**சிறுகதை** : 'முடிந்து போன தசையாடல்' மு.பொன்னம்பலம்
**நாவல்** : 'தெம்மாடுகள்' எஸ்.ஏ.உதயன்
**கவிதை** : 'அவாவுறும் நிலம்' முல்லை முஸ்தபா
**சிறுவர் இலக்கியம்** : 'தீந்தேன்' பண்டிதர் ந.கடம்பேசுவரன்
**ஆய்வும் விமர்சனமும்** : 'இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்கமிஷன்' கலாநிதி எஸ்.ஜெபநேசன்
**பல்துறை** : பொது 'ஏழாவது ஊழி' பொ. ஐங்கரநேசன்
**மருத்துவம்** : 'செகராசேகர திறவுகோல்' டாக்டர் நா.கணேசலிங்கநாதன்
**சமயம்** : 'சிவபெருமானை திருக்கையாலாயத்தில் கண்டேன்' வி.செல்வரத்தினம்

உயர்கல்வித்துறையில் எந்த நூலும் தெரிவு செய்யப்படவில்லை.

## மன்னார் செம்மொழி மாநாடு மூலவர்கள்



திருமதிபுஸ்பாமணிமாறன், திரு.வி.எஸ்.சிவகரன், வணபிதா.தமிழ்நேசன்





நந்தீஸ்வரியின் இலக்கியப் பதிவுகள்

# சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு – 2011

- தி.ஞானசேகரன் -

இலங்கை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 2011 ஜனவரி 6,7,8,9 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் சர்வதேச தமிழ் எழுத்தளார் மாநாடு தொடர்பான தகவல்கள்:

சிறப்புப் பேராளர்கள்: இந்த மாநாட்டுக்கா வெளிநாட்டிலிருந்து வருகை தருபவர்களும், மாநாட்டில் இடம்பெறும் அரங்குகளுக்குத் தலைமை வகிப்பவர்களும், ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பவர்களும் சிறப்புப் பேராளர்களாகக் கணிக்கப்படுவார். இவர்கள் பேராளர்களாகத் தம்மைப் பதிவு செய்வதற்கு எவ்வித கட்டணமும் செலுத்தத் தேவையில்லை.

பேராளர்கள்: கலை இலக்கியவாதிகள், இலக்கிய ஆர்வலர்கள் ரூபா ஆயிரம் (1000/=) செலுத்திப் பேராளர்களாகத் தம்மைப் பதிவு செய்திருக்க வேண்டும். இவர்களுக்கு மாநாட்டு வெளியீடுகள், நூல்கள், கோப்பு ஆகியவை அடங்கிய பொதியும் வழங்கப்படும்.

பார்வையாளர்கள்: விண்ணப்பப் பத்திரத்தை சமர்ப்பித்துத் தம்மை பார்வையாளர்களாகப் பதிவு செய்த எவரும் மாநாட்டில் பங்குபற்றலாம். பார்வையாளர்களுக்கு பேராளர்களுக்குரிய சலுகைகள் வழங்கப்படமாட்டாது.

ஆய்வுக்கட்டுரைகள் : (1) சிறுவர் இலக்கியம் (2) ஈழத்து இலக்கியம் (3) உலகத்தமிழ் இலக்கியம் (4) செவ்விதாக்கம் (editing) (5) ஆவணப்படுத்தல் (6) நிகழ்த்துகலைகள், நுண்கலைகள் (7) இணையமும் வலைப்பதிவுகளும் (8) மொழிப்பெயர்ப்பு இலக்கியம் (9) சிற்றிதழ்கள் (10) பெண்ணியம் ஆகிய துறைகளில் அமையும். சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டு மலரொன்றும் வெளியிடப்படவிருக்கிறது.



ஞானம் ஆசிரியருடன் வட்டத்தினரின் சந்திப்பு (19.11.2010)

முக்கிய தமிழ் இலக்கிய பதிவுகள்

# மன்னார்த் தமிழ்ச் சங்கத்தின் மன்னார் தமிழ்ச் செம்மொழி விழா 2010

மன்னார் தமிழ்ச் சங்கம் இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 22,23,24,25 ஆகிய தினங்களில் மன்னார் தமிழ் செம்மொழி விழா 2010. நிகழ்வை கோலாகலமாக நடாத்தி முடித்தது. மிக நேர்த்தியாக நடபெற்ற இவ்விழா அரசியல் சமய ஆதிக்கங்களைத் தகர்த்தெறிந்த தமிழ் விழாவாக அனைவராலும் பாராட்டப்பட்டது. ஆய்வரங்குகள் கலை நிகழ்வுகள், பட்டிமன்றம் கவியரங்கு கௌரவிப்புகள் என அமர்க்களப் பட்டது மாநாடு.

ஈழத்தின் தலைநகர் கொழும்பு மலையகம், மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், வவுனியா சிளிநொச்சி, புத்தளம் எனப் பலபாகங்களில் இருந்தும் பல எழுத்தாளர்கள் கலந்து கொண்டனர்.

இவ் ஆய்வு நிகழ்வுகள் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் அரங்கு (23ந்திகதி) ஆறுமுக நாவலர் அரங்கு (24ந் திகதி) ஏ.சி.எம்.அஸீஸ் அரங்கு (25ம்திகதி) என்னும் அரங்குகளில் முறையே பேராசிரியர் கலாநிதி.அ.சண்முகதாஸ் பேராசிரியர் கலாநிதி எம்.ஏ.நு.்மான், திரு.எஸ்.டேவிட் ஆகியோரின் தலைமையில் தமிழின் இலக்கியப் பாரம்பரியம் தமிழ சர்வதேசியத்தை நோக்கி மன்னார் மாதோட்ட மக்களின் வாழ்வியலும் கலை இலக்கிய முன்னெடுப்புகளும். என்னும் தலைப்புகளில் நடைபெற்றன.

மூன்றாம் நாள் மாலை நிகழ்வில் எமது வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் செயலாளரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வவுனியா வளாக ஆங்கில மொழிகற்பித்தல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களும் கௌரவ விருந்தினர்களில் ஒருவராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மூன்றாம் நாள் காலை நிகழ்வில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கவிஞர் தமிழ்மணி அகளங்கன் அவர்களின் தலைமையில் கவியரங்கு நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.

தொடக்க விழா, இசைவிழா இலக்கியவிழா, நாட்டிய விழா, நாடக விழா, நிறைவு விழா என விழா சிறப்பாக நடந்தேறியது. மன்னார் தமிழ்ச் சங்கத்திற்கும் குறிப்பாக தலைவர் தமிழ்நேசன் அடிகளார் செயலாளர் திரு.வி.எஸ் சிவகரன் ஆகியோர்க்கு எமது பாராட்டுக்கள்.

வித்துவான் ரஹ்மான் அரங்கு, லோறன்ஸ் புலவர் அரங்கு, ராஜம் புஸ்பவனம் அரங்கு, சுண்டிக்குளிப் புலவர் அரங்கு. (விறாஸ் மொத்தம் கபிரியேல்) செபஸ்ரியான் குருஸ் அண்ணாவியார் அரங்கு, முகம்மது காசிம் புலவர் அரங்கு, கவிஞர் நாவண்ணன் அரங்கு, என கலையரங்குகளுக்குப் பெயர்சூட்டி நினைவூட்டியதையும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

மன்னார்த் தமிழ்ச் சங்கத்தை வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் மனதாரப் பாராட்டுகிறது. வாழ்த்துகிறது.






பிரதாபனின் இலக்கியப் பதிவுகள்

# சிந்தாமணி மலர்வெளியீடும் கௌரவமும்

22.10.2010 இல் வவுனியா வெளிவட்டவீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் கலாசார அன்னதான மண்டபத் திறப்பு விழா நடைபெற்றது. இவ் விழாவில் புராண படனம் செய்வோர் கௌரவிக்கப்பட்டனர். சிந்தாமணி என்ற நினைவு மலரும் வெளியிடப்பட்டது. இவ் விழாவில் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டோர் விபரம்.

1. அகில இலங்கை இந்துமா மன்றத்தின் தலைவர்
   உயர் திரு.வி.கயிலாசபிள்ளை ............... இந்து சிரோரத்தினம்
2. அகில இலங்கை இந்துமா மன்றத்தின் பொதுச் செயலாளர்
   உயர்திரு.கந்தையா நீலகண்டன் ............... இந்து சிரோன்மணி
3. அகில இலங்கை இந்துமா மன்றத்தின் பிரதித் தலைவர்
   உயர்திரு.சின்னத்துரை தனபாலா ............... சிவநெறிக்காவலர்
4. பிரம்மஸ்ரீ.கு.சுந்தரசர்மா ............... சர்வ சாதக கிரியாசாகரம்.
5. உயர்திரு.மாதவர் மார்க்கண்டு ............... புராண படனப் பெருஞ்சுடர்
6. உயர்திரு.அகளங்கன் ............... செந்தமிழ்க் கொண்டல்
7. உயர்திரு.சு.சண்முகவடிவேல் ............... கலைஞான கேசரி
8. உயர்திரு.வெ.சண்முகதாஸ் ............... நாதஸ்வர ஜோதி
9. உயர்திரு.பொ.நல்லையா ............... சிந்தாமணிச் செம்மல்
10. உயர்திரு.க.ஐயம்பிள்ளை ............... புராண படனச் செல்வர்

## வவுனியாவில் வெளிவந்த பேராசிரியர் க.சின்னத்தம்பி அவர்களுக்கான பாராட்டு இதழ்



பிரதாபனின் இலக்கியப் பதிவுகள்

# ஈழத்து எழுத்தாளர்களுக்கு தமிழகத்தில் பரிசு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் இணைந்து நடாத்திய சிறந்த நூல்களுக்கான இலக்கியப்போட்டியில் (2009) எட்டுத் துறைகளுக்கான சிறந்த நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 08.10.2010இல் தமிழ்நாடு நெல்லை மாவட்டம் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் நடந்தேறியது. பரிசு பெற்ற ஈழத்து எழுத்தாளர் விபரம் வருமாறு :

நாவல் : அழகிய நாயகி அம்மாள் நினைவுப் பரிசு - வவுனியூர் இரா.உதயணனின் 'நூல் அறுந்த பட்டங்கள்'

சிறுவர் நூல் : தவத்திருகுன்றக்குடி அடிகளார் நினைவுப் பரிசு - ஓ.கே.குணநாதனின் 'குறும்புக்கார ஆமையார்'

நாடக நூல் : அறந்தை நாராயணன் நினைவுப் பரிசுனை தமிழ்மணி அகளங்கனின் 'கங்கையின் மைந்தன்'

காலையில் எழுத்தாளர் பொன்னீலனின் 'மறுபக்கம்' நாவலின் திறனாய்வு நிகழ்வும் மாலையில் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

பிரதம விருந்தினராக தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவர்.திரு.சு.ஏ.நல்லகண்ணு அவர்கள் கலந்து கொண்டார். மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத் துணை வேந்தர், தமிழியல் துறைத் தலைவர், பேராசிரியர்கள் எழுத்தாளர் பொன்னீலன் உட்பட பலர் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். பரிசு பெற்றவர்கள் சார்பில் தமிழ்மணி அகளங்கன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

## பரிசுபெற்ற ஈழத்து நூல்கள்











பிரதாபனின் இலக்கியப் பதிவுகள்

# வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் 16வது ஆண்டுக் கலைவிழா

29.09.2010 அன்று நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியின் 16வது ஆண்டுகலைவிழா தமிழ்மணி அகளங்கன் தலைமையில் வவுனியா நகரசபை புதிய கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இக் கலைவிழாவில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த கௌரவ ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அவர்கள் தமிழ் மணி அகளங்கனை பொன்னாடை போர்த்தி "முத்தமிழ்ச்சுரபி" எனும் பட்டமும் வழங்கி கௌரவித்தார்.

கலாநிதி.கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் 10.10.2010 அன்று நடைபெற்ற கலைவிழாவில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு.இ.இளங்கோவன் அவர்களால் திருமதி.வதனி ஸ்ரீதரன், திருமதி.விமலலோஜினி கனகேஸ்வரன், திருமதி.உமாமகேஸ்வரி விமலநாதசர்மா, திருமதி.தேவிமனோகரி நாகேஸ்வரன் ஆகியோர் "சங்கீதரத்னா" எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி அவர்களால் கீர்த்தனா கபிலதாஸ், அருந்ததிசிவக்கொழுந்து கந்தப்பு ஜெயந்தன், கந்தப்புஜெயருபன், வீராச்சாமி அரிகரபுத்திரன் வீராச்சாமி நந்தகோபன், சிவபாலன் சிவசுதன், சண்முகராஜா ஜங்கரன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். திருமதி.லீலாம்பிகை செல்வராஜா அவர்கள் "நாட்டிய சுரபி" எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

நுண்கலைக்கல்லூரி மாணவன் செல்வன் அருந்தவநாயகம் சுயேந்திரா அவர்கள் 'ஆடற்செல்வன்' எனும் பட்டம் வழங்கி இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபன செய்தி நடத்துனர் திரு.எம்.என்.ராஜா அவர்களால் கௌரவிக்கப்பட்டார். இந் நிகழ்வில் "சலங்கை ஒலி" என்ற மலர் வெளியிடப்பட்டது.



## வவுனியாவில் வெளிவந்த நூல்கள்



**நந்தீஸ்வரியின் இலக்கியப் பதிவுகள்**

## வவுனியா பிரதேச கலை இலக்கிய விழா – 01.11.2010 நடைபெற்ற கலை இலக்கிய விழாவில் கௌரவிக்கப்பெற்றோர்

அரச அதிபர்.திருமதி.பி.எஸ்.எம்.சார்ஸ், பிரதேசசெயலாளர் திரு.சு.சிவபாலசுந்தரம், நகரபிதா.திரு.எஸ்.எஸ்.ஜி.நாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

**மனிதாபிமானி விருது பெறுவோர்**

திருமதி.வி.ஆர்.ஏ.ஒஸ்வேல்ட்
வைத்திய கலாநிதி.சி.சுதாகரன்
வைத்திய கலாநிதி. ப.சத்தியலிங்கம்
ஜனாப் முகம்மது அலியார் முகமது சரிபு - ஆயுள்வேத வைத்தியர்

**முத்தமிழ் கலைச்சுடர் விருது பெறுவோர்**

தமிழ்மணி அகளங்கன்
கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்
நிருத்தியவாணி.வீ.சூரியயாழினி
தமிழருவி.த.சிவகுமாரன்
முல்லைமணி.வே.சுப்பிரமணியம்
கலாபூசணம்.இ.சிவசோதி
கலாபூசணம்.சு.சண்முகவடிவேல்
திரு.பி.மாணிக்கவாசகம்
திரு.பொன்.தெய்வேந்திரம்
கண்டாவளைக்கவிராயர் கு.இராசையா

**கலை ஒளி விருது பெறுவோர்**

கலைவேந்தன்.ம.தைரியநாதன்
இசைக்குயில் வதனி ஸ்ரீதரன்
தவில் வித்துவான் நடேசன் கைலாயக்கம்பர்
மிருதங்கக் கலைஞர் வை.சின்னராசா
வட்டூர்க் கவிஞர் கதிர் சரவணபவன்
திரு.கந்தப்பு ஜெயந்தன்
பண்டிதை செல்வி.யோகலட்சுமி சோமசுந்தரம்
மிருதங்கக் கலைஞர் க.கனகேஸ்வரன்
தவில் வித்துவான் திரு.ந.வீராச்சாமி
இராசையா இராசநாயகம்

**கலைச்சுடர் விருது பெறுவோர்**

திரு.எஸ்.வினோசிறி - ஆலய கலைப்பணி
திரு.க.கனகேந்திரன் - சிற்பம்





திரு.வே.ஸ்ரீகந்தராசா - நாட்டுக்கூத்து
திரு.பொ.கனகரத்தினம் - சிற்பம்
திரு.மு.மேகநாதன் - சிற்பம்
ஜனாப் செய்யுதீன் அப்துல் சமட் - மார்க்க சொற்பொழிவு
கலாபூசணம் கயல்வண்ணன் - இலக்கியம்

**சமூக அபிமானி விருது பெறுவோர்**

திருமதி விசுவலிங்கம் பூமணி - ஓமந்தை
திருமதி முகமட் கலீல் நோனா ஜெரினா - (பட்டாணிச்சிபுளியங்குளம்)
திருமதி.இராயப்பு கிறிஸ்ரின் மேரி - பண்டாரிக்குளம்
திரு.சீ.ஏ.இராமஸ்சுவாமி - வவுனியா நகரம்
திரு.வை.தேவராசா- வைரவப்புளியங்குளம்
திரு.தி.தில்லைநாதன் - வைரவபுளியங்குளம்
திரு.செ.தர்மரட்ணம் - தாலிக்குளம்
திரு.எஸ். சிவப்பிரகாசம் - ஈச்சங்குளம்
திருமதி. லிங்கேஸ்வரி - ஈச்சங்குளம்
திரு.ஆ.நவரட்ணராஜா - கோவில்குளம்

## வவுனியூர் இரா.உதயணனின் இரு நூல்கள்






நந்தீஸ்வரியின் இலக்கியப் பதிவுகள்

# இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெரு நாவலாசிரியருக்கு

2010ஆம் ஆண்டின் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெருவைச் சேர்ந்த நாவலாசிரியர் மரியோ வர்காஸ் லோசாவுக்கு வழங்கப்படுகிறது. 74 வயதான வர்காஸ் லோசா ஸ்பானிய மொழி உலகின் மிகச் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராவார்.

1982இற்குப் பின்னர் நோபல் பரிசைப் பெறும் முதலாவது தென் அமெரிக்கராகக் கருதப்படும் லோசா 30இற்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளார்.

1960இல் இவரால் எழுதப்பட்ட 'கதாநாயகனின் காலம்' என்ற நாவல் இலக்கிய உலகில் இவருக்கு தனி அடையாளத்தைக் கொடுத்ததுடன் சர்வதேச ரீதியிலான பிரபலத்தையும் பெற்றுக்கொடுத்தது.

பெருவில் இராணுவப் பயிற்சி மையத்தில் தான் பெற்ற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அவர் இந்நாவலைப் படைத்திருந்தார். இந்நாவல் உள்நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்ததுடன் சுமார் ஆயிரம் பிரதிகள் அதிகாரிகளால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாரவர்க்கத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பதில் முன்னணியில் விளங்கிய லோசாவின் படைப்புகளில் பெரும்பாலானவை தனது வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைந்திருந்தது. அதிகாரக் கட்டமைப்பு தனிநபர் எதிர்ப்பு, கிளர்ச்சி மற்றும் தோல்வி போன்ற பதங்களுக்கு இவர் அளித்துள்ள விளக்கங்களுக்காக இப்பரிசு வழங்கப்படுவதாக நோபல் பரிசுக்கென தெரிவுக்குழு கூறியுள்ளது. இதேவேளை லோசா பெரு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவரென்பதும் குறிப்பிடத்தக்கது

நன்றி தினக்குரல்



## அஞ்சலிகள்

- **நாட்டாரியல் நாடகக் கலைஞர் மெற்றாஸ்மெயில்** ~ வன்னிக்கூத்துகளையும் இசைநாடகங்களையும் மீளுருவாக்கம் செய்த கலைஞர்.
- **பத்திரிகையாளர் டேவிட் ராஜா** ~ வீரகேசரி, தினக்குரல் போன்ற பத்திரிகைகளின் பிரதான செய்தி ஆசிரியராக திகழ்ந்தவர்.
- **பத்திரிகையாளர் எஸ்.சிவநாயகம்** ~ Saturday Review மற்றும் Tamil Nation போன்ற பத்திரிகைகளின் ஆசிரியர்.
- **பண்டிதர் கா.பொ.இரத்தினம்** ~ தமிழ்மறைக் காவலர் திருக்குறள் மாநாடு நடாத்திய ஏந்தல், முன்னாள் பா.உ...





சினிமா விமர்சனம்

# அவதார் - ஓர் இரசனைக் குறிப்பு

சு.சண்முகவடிவேல் ஸ்தபதி

பதினொரு ஆஸ்கர் விருதுகள் உலக அளவில் ஆகக் கூடிய வசூல் கலாரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுக்கள் உலக மக்களின் உள்ளங்களை கொள்ளை கொண்ட ஓர் அற்புததத்திரைப்படம் தான் "அவதார்" இது 3D தொழில்நுட்பத்தில் அனிமேசன் கொமிக்ஸ் படமாக மக்களை மயக்க வைத்திருக்கிறது. பண்டோரா எனும் அற்புதமான கிரகத்தில், நவி எனும் விசித்திரமான இனத்தவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் வாழும் இடம் சொர்க்கமாக திகழ்கிறது. வினோதமான மிருகங்கள், பறவைகள், தாவரங்கள், பூத்துக்குலுங்கும் பூச்செடிகள் காணப்படுகின்றன. இக்கிரகத்தில் மனிதனால் சுவாசிக்க முடியாது, வாழமுடியாது. இங்கு தங்கத்தைவிட பெறுமதியான கனிமங்கள் காணப்படுகின்றன. இக் கனிமங்களை சூறையாட முனைகிறார்கள் மனிதர்கள்.

மனிதனின் டி.என்.ஏ.க்களில் நவி இனத்தவரின் டி.என்.ஏ-க்களை புகுத்தி உருவாக்கப்படும் மனித-நவி கலப்பினம் தான் அவதார். பூமியிலிருந்து கொண்டுவரப்படும் நூற்றுக்கணக்கான மனிதர்கள், விண்வெளியில் தளமமைத்து தங்க வைக்கப்படுகிறார்கள். இவர்களில் இடுப்புக்குக் கீழ் செயலிழந்த ஜேக் என்பவனும் ஒருவன். இவனும், இன்னும் சிலரும் அவதாராக பண்டோராவில் தரையிறக்கப்படுகிறார்கள். முடமான ஜேக் கால்களை ஊன்றி நடப்பதும், ஓடுவதும் அவனுக்கு மட்டுமல்ல எமக்கும் மகிழ்ச்சியளிக்கிறது.

பண்டோராவில் ஜேக்கிற்கு ஏற்பட்ட திகில் அநுபவங்கள், நவி இனப் பெண்ணிடம் ஏற்பட்ட காதல் எம்மையும் மெய்சிலிர்க்க வைக்கின்றது. ஆரம்பத்தில் உளவாளியாக வந்தவன் - நவி இனத்தவர்களின் நற்பண்புகளில் கட்டுண்டு அவர்களை காக்க சபதம் பூணுகிறான். தன்னை பண்டோராவுக்கு அனுப்பிய மனிதக் கொடுங்கோலனை எதிர்க்க துணிகிறான். நவீன ரக ஏவுகணை விமானங்கள், இராட்சத உலங்கு வானூர்திகள், அசுர பலம் கொண்ட யந்திரம் பொருந்திய மனிதர்கள் இவர்களின் தாக்குதல்களிலிருந்து, பண்டோரா நவி இனத்தவர்கள் அர்ப்பணிப்புடனும், மன உறுதியுடனும் ஜேக்கின் தலைமையில் போராடி வெற்றி பெறுகிறார்கள்.

படத்தின் இயக்குனர், கதாசிரியர் ஜேம்ஸ் கேமரூன். அற்புதமான படைப்பாளி. இவர் தனது முன்னைய படைப்பான "டைட்டானிக்கை வெளியிட்டவுடன் "அவதார்" கதையை பிரமாண்டமாக தயாரிக்க முடிவெடுத்தபோது, அப்போதைய தொழில்நுட்பங்கள் தமது கதைக்கு போதாதென்று கருதி பன்னிரெண்டு வருடங்கள் காத்திருந்து சென்ற வருடம் படத்தை திரையிட்டார்.அவதார் நவீன தொழில் நுணுக்கங்களை புகுத்தி, நடிகர்களை தனியாக நடிக்க வைத்து கிரா.'பிக்ஸ்களை கணினியில் தனியாக ஓடவிட்டு, அதற்கு தக்கபடி நடிகர்களை திரும்பவும் நடிக்க வைத்து வியக்க வைத்திருக்கிறார் இயக்குனர் கேமரூன். இந்து சமய பாதிப்புக்கள் படத்தில் நிறையவே உண்டு. விஷ்ணுவின் நீல நிறத்திலிருந்து நீல நிறக்காட்சிகள் பெறப்பட்டிருக்கிறது. அவதார் என்கிற தலைப்புக்கூட "தசா அவதாரம்" என்பதிலிருந்து பெறப்பட்டிருக்கிறது. படத்தின் அவதார் ஜேக்கின் உடலில் புகும்காட்சி, திருமூலரின் கூடுவிட்டு உடலில் கூடுபாய்தல் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. அனுமார் போன்ற பாத்திரபடைப்புகளும் இந்திய பண்பாட்டு பின்னணியிலிருந்து பெறப்பட்டுள்ளன. எது எப்படி இருப்பினும் மனதை விட்டகலா அதி அற்புதமான திரைக் காவியம் "அவதார்" ஆகும்.

# N.S.RATNAM & BROS

*Dealers in*
*all kinds of electronic items and spares*

**HERO HONDA**

*No:6, 1st Cross Street,*
*Vavuniya.*
*Tel/Fax : 024 - 2221237*

# வெங்கடேஸ்வரா

**பல்பொருள் வாணிப நிலையம்**

**இல:15, பஸார்வீதி**
**வவுனியா**
**தொ.பே. இல : 024 2222418**





# ஈசன்



**இரசாயன உரங்கள், கிருமி நாசினிகள் விற்பனையாளர்.**

**இல: 27, பசார்வீதி, வவுனியா.**


# METO TRADERS

*Dealers in*
*Electrical Goods & Plumbing Items*

*35A, Bus Stand Shopping Complex,*
*Station Road,*
*Vavuniya.*
*Phone :024 - 2222572*

# இராசையா மருந்துக்கடை

கோயில் அபிஷேகப்பொருட்கள், வாசனைத் திரவியங்கள், இந்தியா ஊதுபத்திகள், மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.



53 நவீன சந்தை வவுனியா
இல: 202, பஜார் வீதி,
வவுனியா.

# CARVALHO OPTICALS

**Eye Testing and Dispensing**




No 13, Bus Stand Complex, Vavuniya.
T.P: 024 22226449
Prop: Ranji






**வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடாத்தும்**
**பதின்மூன்றாண்டு நிறைவு விழா - நிகழ்வு 135**

காலம் : 26.12.2010 காலை 9.30மணி
இடம் : வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசாரமண்டபம்

தலைமை
**தமிழ்மணி அகளங்கன்**

பிரதம விருந்தினர்
**திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ்**
அரசஅதிபர், வவுனியா.

கௌரவ விருந்தினர்கள்
**திரு. இ.நந்தகுமாரன்**
முதல்வர், யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகம்.

**திரு. க.பேர்னாட்**
பீடாதிபதி, தேசிய கல்வியியற் கல்லூரி

சிறப்பு விருந்தினர்கள்
**திரு. அ.சிவபாலசுந்தரன்**
பிரதேச செயலாளர், வவுனியா.

**திரு. நா.சேனாதிராசா**
தலைவர், வவுனியா சு.இ.இ.சங்கம்

**திரு. க.சிவலிங்கம்**
தலைவர், வ.பல.நோ.கூ.சங்கம்

**திரு. சி.ஏ.இராமஸ்வாமி**
செயலாளர், இந்துமாமன்றம், வவுனியா.

**மாருதம் சஞ்சிகை இதழ் 11 வெளியீடு**

அறிமுக உரை
**திரு. எம்.சூசைதாசன்**
விரிவுரையாளர், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.

திரு .பி.ஏ.சி.ஆனந்தராசா எழுதிய **"நமக்கு நாம்"**
உளவளத் துணை சார் கட்டுரைகள், கதைகள்

# சான்றோர் விருது வழங்கும் வைபவம்

**கலை இலக்கியச் செல்வர்** விருது பெறுபவர்
**திரு.உடுவை.எஸ்.தில்லைநடராசா**

**நாடகக் கலைச்செல்வர்** விருது பெறுபவர்
**திரு.ம.பொ.ஜெறியநாதன்**

**கௌரவிப்பு உரை**
**கலாநிதி.கந்தையா ஸ்ரீகணேசன்**
தலைவர், ஆங்கிலமொழிக் கற்பித்தல் துறை, வவுனியா வளாகம்.

* **கர்நாடக பாடல்கள்**
**செல்வி.அபிராமி சண்முகவடிவேல்**
**வயலின் : திருமதி கயல்விழி சூரியகுமாரன்**
**மிருதங்கம் : குணரட்ணம் சுரேஷ்**

**வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி மாணவிகள்**
**நட்டுவாங்கம் : நிருத்தியவாணி திருமதி.சூரியயாழினி வீரசிங்கம்**

**கந்தையா ஸ்ரீகணேசன் எழுதி நெறிப்படுத்திய**

**வெள்ளம் ஒன்று வந்ததுவே**
வவுனியா சத்தியசாயி சிறுவர் இல்லம்

**தமிழ்மணி அகளங்கன் எழுதிய**

**சிலம்பின் கனல்**
வவுனியா பண்டாரிகுளம் விபுலாநந்தாக் கல்லூரி மாணவர்கள்
நெறியாள்கை : கந்தையா ஸ்ரீகந்தவேள்



THAMPA TOURIST
HOTEL & INN

Thampa

தங்குமிடங்கள்
விருந்துபசார மண்டபங்கள்
மற்றும் நிகழ்வுகளுக்கான உணவு
உபசாரங்களுக்கு

No10, 1st Lane, Sinnaputhukkulam,
Vavuniya


மாருதம் சிறப்புற வாழ்த்துகிறோம்,
ஜீ.எச்.ஏ.டீ.சில்வா அன் கோ.
பஜார் வீதி, வவுனியா.
Multivision. 024 2223669